www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JUDE
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஜூலை 12–18,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 265

# எங்கு மோதப் போகிறார்கள்?

## தேவானந்தா மீதான தாக்குதல் பின்னணி தகவல்கள்





## கண்ணதாசன் சொன்ன இரகசியம்

## கில்லாடிகளான கிரிக்கெட் வீரர்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## விஞ்ஞான விதி

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

கிழக்கிலும்
இடம் பெயரும் அவலங்கள்
பெருகத் தொடங்கியுள்ளன.

தமிழ் பேசும் மக்களின்,
முதுகுகள் மீது
மலைகளைச் சுமத்தினால்
முதுகுகள் வளையும்
என்பது கணக்கு.

அந்தக் கணக்கு,
தப்புக் கணக்குத்தான்!

'எந்தத் தாக்கத்துக்கும்
மறுதாக்கம் உண்டு!'
அது விஞ்ஞான விதி.

விஞ்ஞானம்-
மெய்ஞானம்
இரண்டுமே இங்கு
தவறாகத்தான்
விளங்கிக் கொள்ளப்படுகின்றன!

போதிமரத்தடியில்
மெய்ஞானம்
பெற்றவர் புத்தர்!

கடவுளே இல்லையென்ற
தந்தை பெரியார்கூட
புத்தரின் போதனைகளைப்
போற்றத் தவறியதில்லை!

அகிம்சையை
போதித்தவரே புத்தர்தான்!

புத்த தர்மம்
எந்த இனத்துக்கோ
மதத்துக்கோ உரித்தானதல்ல;
மனித குலத்துக்குப் பொதுவானது!

புத்த தர்மம்!
யுத்த தர்மம்!

இரண்டுக்கும் இடையே
ஓர் எழுத்துத்தான்
வித்தியாசம்!

அந்த ஓர் எழுத்தைத்
தவறாக விளங்கிக்கொண்டு
சிலர் போதனை
நடத்துவது
புத்தருக்கே பொறுக்காது!

ஓர் எழுத்தைத்
தவறாக விளங்கிக்கொண்டு
இலங்கைத்தீவின்
தலையெழுத்தையே
பாழ்படுத்தல் முறையோ?

வடக்கு-கிழக்கில்
போரைத் தொடருமாறு
ஊக்கமளிப்போர்-
அங்குள்ளோரும்
மக்களே என்பதை
எப்படி மறந்தனர்?

இந்த மாற்றாந்தாய்
மனப்போக்குத்தான்
தனி ஈழக் கோரிக்கைக்கு
தமிழ் பேசும் மக்களை
அழைத்துச் சென்றது!

'அழுத்தினால்
வளைந்துவிடுவர்' என்ற
அணுகுமுறைதான்
யுத்தம் தோன்றுவதற்குக்
காரணமானது!

இவையெல்லாம்
வரலாற்றுப் படிப்பினைகள்!

விஞ்ஞானம், மெய்ஞானம்
இரண்டும் மட்டுமல்ல,
வரலாற்றுப் படிப்பினையும்
உதாசீனம் செய்யப்படுகிறது!

வாக்கு வங்கிகளை
வளைத்துப்போட
இனவாதக் கோஷமே
ஒரு காலத்தில்
கருவியாக இருந்தது!

இப்போது,
வாக்கு வங்கிகளை
கவர்ந்து இழுக்கக்
கொடும் யுத்தம்
கருவியாகியுள்ளது!

போர் கூடாது என்று
எதிரணி சொல்லவில்லை.
வெற்றிகரமாக
போர் செய்யும் முறை
இதுவல்ல என்கிறார்கள்!

வடக்கு-கிழக்கில்
போரைத் தொடருமாறு
மதகுருமார் சிலர் விடுத்த
கூட்டறிக்கையை
எதிர்க்கட்சி குறைகூறவில்லை!

வடக்கு வேறு
கிழக்கு வேறு என்பது
அடம்பன் கொடியின்
திரண்ட மிடுக்கைக்
கெடுக்கும் எண்ணமே!
மற்றப்படி
பேரினவாதக் கண்களுக்கு
வடக்கு-கிழக்கு
அந்நிய பூமிதான்!

அவலங்களை மேலும்
விரிவாக்கிவருவதும்
மேலும் தொடர
முடிவுகள் எடுப்பதும்
உணர்த்தும் உண்மை
அதுதானோ?!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஓம் நமோ நாராயணாய

'ஓம் நமோநாராயணாய', என்ற மந்திரத்தை எடுத்துக் கொள்வோம். 'நமோ' என்று சொல்வது 'காலில் விழுந்து வணங்குகிறேன்' என்பதைக் குறிப்பதாகும். காலில் விழுந்து வணங்குவது என்பது இரண்டு தத்துவங்களைக் குறிக்கிறது. ஒருவன் தன்னைவிட உயர்வான ஒன்றின் முன்னால் தான் அப்படி வணங்குகிறான். அவ்விதம் வணங்கும்போது தன்னுடைய திறமை, சக்தி, புத்தி எல்லாவற்றையுமே அந்த உயர்ந்த ஒன்றின் முன்னால் வைத்து தன்னை மறந்து சரணாகதி அடைந்து விடுகிறான்.

'நமோ' என்று சொல்லும்போது மானசீகமாகவே ஜபம் செய்பவன் இப்படிப்பட்ட சரணாகதி நிலையை எட்டிவிடுகிறான். அவனுடைய போலித்தனமான தற்பெருமை, அகங்காரம், ஆணவன் எல்லாம் அவனை விட்டு விலகி விடுகின்றன. அந்த நிலையில் அவன் தனக்குள் இருக்கும் பரம்பொருளைப் புரிந்து கொள்வதும் எளிதாகி விடுகிறது. 'ஓம்' என்பது அந்தப் பரம் பொருளின் அடையாளம்.

'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லும் போது ஸ்ரீமன் நாராயணன் என்ற பரம்பொருளின் முன்னிலையில் பக்தி பூர்வமாக ஒருவன் பணிந்து விடுகிறான்.

பணிவுதான் ஒருவனை உயர்த்துகிறது.

தொகுப்பு: அ. அச்சுதன், சேனையூர்-06.



## பிள்ளைகளுக்கு கண்ணியம் அளியுங்கள்!

பிள்ளைகள் பெற்றோர்களை கண்ணியப்படுத்துவது எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகிறதோ, அதேபோல் பெற்றோர்களும் பிள்ளைகளை கண்ணியப்படுத்தி அவர்களுக்கு மதிப்பளிப்பதும் அவர்களின் கடமையாகும். இதை உணராத பல பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்பே அருவருக்கத் தக்கதாக, ஆபாசமாகப் பேசுவதையும், நடந்து கொள்வதையும் கொடிய தீயவார்த்தைகளைக் கொண்டு திட்டி அவர்களை இழிவுபடுத்தி வருவதையும் வழக்கமாக்கிக் கொண்டு, மறுமையில் கிடைக்கக்கூடிய நற்கூலிகளை அடையத் தவறி விடுகின்றார்கள். பிள்ளைகளைக் கண்ணியப் படுத்துபவர்களுக்கு கிடைக்கும் சிறப்புக்களோ மிகவும் மகத்தானவை.

"ஈமான் கொண்டோர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொடுப்பதோடு அவர்களிடம் சங்கையாகவும், கண்ணியமாகவும் நடந்து சிறப்பித்து வாருங்கள். மறுமையில் உங்களை வேறு யாரும் புகமுடியாத மகிழ்ச்சியின் வாசல் எனப்படும் வழியினூடாக சுவர்க்கம் நுழையச் செய்து, அதில் நான் உங்களிடம் கண்ணியமாக நடந்து கொள்வேன். மேலும் சுவர்க்கத்தின் பட்டாடைகளை உங்களுக்கு அணிவித்து மற்றைய சுவர்க்கவாதிகளிடம் காட்டி பெருமை பேசி நல்லருள் புரிவேன்." (அல்குர் ஆன் 28:58)

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல. 262

### பரிசுக்குரிய கவிதை

#### என் சிரிப்பில்

**ஏழையின் சிரிப்பில்
இறைவனைக்
காண்பீர்!
எனது சிரிப்பில்
அகதிநிலை காண்பீர்!**

ரி. லஷ்மிதேவி-
மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### தலையாட்டும் தலைமை

காட்சியறையில்
தலையாட்டினால்-நீ
பொம்மை!
பாராளுமன்றத்தில்
தலையாட்டினால்-நீ
தமிழ்க் கட்சி!

மு. அலெக்சாண்டர்-கந்தபொல

#### பிறந்தநாள் வாழ்த்து!

வாழ்க பல்லாண்டு என வாழ்த்தும்
கனடா அக்கா, ஜேர்மனி அத்தை,
லண்டன் மாமா, நோர்வே சித்தி,
வவுனியா சேமிப்பன்னை முகாம் அப்பம்மா!
வன்னி மரத்தடி வாழும் அம்மம்மா.

அ. அச்சுதன்-சேனையூர்-06



#### குழந்தைகள் நாம்

குழந்தைகள் நாம்
குழந்தைகள் நாம்....
அக(வ)திகளாகி
அவதியுறும்...
குழந்தைகள் நாம்!!

செ. சுகுமார்-மாங்கேணி.

#### நினைவுகள்

காலம் போர் அணைக்கும்;
கனவுகள் சீர் குலைக்கும்;
கண்ணீரில் உறவு மலர
கரங்களில் பொம்மை தவழ
தாயின் நினைவுகளில்
சேயின் நிகழ்காலம்!

தெ. லோஜனா- கொழும்பு-15.

#### ஆம்

குழந்தைகளுக்கு
பொம்மை-
வளர்ந்தோர்க்கு
வாக்குறுதி-
எதற்கு?
அழுவதை நிறுத்த!

எஸ். பிரபா-பதுளை.

#### ஏன்...! ஏன்...!

விளையாட
முற்றம் இல்லை!
உறவாட
சுற்றம் இல்லை!
பாசமாம்
பெற்றோர் இல்லை!
பாவி நான்....
தமிழ் மண்ணில்..
ஏன்...பிறந்தேன்?

கயல்வண்ணன்-வவுனியா.

#### புதை குழி

இனிமைச் சிரிப்பை
தந்தவளே.....
இன்று எங்கே
நீ?

சுபா வரன்-கண்டி.

#### சிந்தனை

குண்டுமழை பொழிய,
குருதி வெள்ளமோட,
சுற்றமே சிதைந்த,
சுதந்திர புரத்தினில்
தப்பிய பொம்மையோடு
தங்கையிவள் சிந்தனையில்!

பூ. இதயரெத்தினம்-ஆரையம்பதி-03.

#### அநாதை

உன்னைக் கொஞ்ச
நானிருக்கேன்!
என்னைக் கொஞ்ச
யாரிருக்கா...?

பூண்டுலோயா-வில்லியம்.

#### சுகமா?

"நோர்வே நாட்டில்
இருந்து பேசுகிறேன்;
மடு றோட் அகதி முகாமில்
அம்மம்மா சுகமா?"

'திக்கவயல்'-மன்னார்.

#### பொய்(ம்)மை

நீயும் பொம்மை
நானும் பொம்மை
நினைச்சு பார்த்தால்
தீர்வுப் பொதியும்-பொம்மை!

செ. அம்பிகா-கலகெதர.

## கவிதைப் போட்டி இல.265



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 18.07.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.265,
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.



# வாசக(ர்)சாலை

கணேஷ், வசந்த் இரட்டைக் குழல் துப்பாக்கிகள். சுஜாதாவின் கதாநாயகர்கள் வலம்வரும் 'மேற்கே ஒரு குற்ற'த்தை சுற்றத்தோடு வாசித்து நேசிக்கிறோம். (முரசுப் பாணியில் எழுத முயற்சி)

கே. ஷபானா, கின்னியா.

### சரியான போட்டி

'சந்திக்கு வராத சங்கதிகள்' சிறப்பு. அதிரடி அய்யாத்துரை யாருக்கு காதிலை பூ கந்தசாமியார் தான் போட்டி என்றால், நக்கீர னுமா? ஜமாய்க்கட்டும்.

ஆ. ஜெய்சங்கர், மாத்தளை.

### பெரும் தவறு

அன்பு முரசுக்கு:
அன்றாடப் பிரச்சனைகள் என்று கூறி தமிழ்க் கட்சிகள் தங்கள் கையாலாகாத்தனத்தை நியாயப்படுத்த முற்படுகின்றன. அதனை 'முரசு' தோலுரித்துக் காட்டி வருகிறது. அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்கட்டும். முடியுமானவரை தீர்க்கட்டும். அதற்காக அரசியல்தீர்வை பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்பது போல பேசுவது பெரும் தவறாகும்.

ஆர். கோபால், மட்டக்களப்பு.



### மாய்மாலம்

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை வேண்டி நிற்கும் நாற்காலிக் கட்சிகளுக்கு காதிலை பூ கந்தசாமியார் கொடுத்தது நெத்தியடி. அரசு மேலும் சில காலம் பெரும் பலத்துடன் போர் நடத்த இவர்களே ஆலோசனை கூறுவது போன்றதே அதுவும்! இந்த இலட்சணத்தில் போர் வேண்டாம் என்றும் மேற்பூச்சு கோரிக்கைவிட்டு மாய்மாலம் செய்கின்றனர்.

எஸ். மயில்வாகனம், திருக்கோணமலை.

### வடிகட்டின ஏமாற்று

மாகாணசபைத் தேர்தல்களை தள்ளிப்போடும் அரசின் ஊக்குவிப்பில் பௌத்த மதகுருமார் கூட்டறிக்கை விட்டதாக ராஜதந்திரியார் அலசிக் கூறியிருந்தார். மறுவார நிகழ்வுகள் அதனை உறுதிப்படுத்திவிட்டனவே. தெளிவான அரசியல் அலசல்கள் மூலம் பாராளுமன்ற பம்மாத்துக்களை இனம்காட்டும் ஒரே பத்திரிகை முரசுதான். பாராளுமன்ற உறுப்பினர்கள் கடவுள்கள், பாராளுமன்றம் தேவாலயம் என்பது வடிகட்டின ஏமாற்று.

கு. ரங்கநாதன், யாழ்ப்பாணம்.

### எது காரணம்?

உணவில்லை. மருந்தில்லை. நிவாரணமில்லை என்பர். அதனைப் பெற்றுத் தருவதே எம் கடன் என்பர். உணவும், மருந்தும், நிவாரணமும் ஏன் இல்லை? இனவாத தடைகளால் பொருளாதார முற்றுகைகளால்தான் இல்லை. முற்றுகைக்குக் காரணம் என்ன? யுத்தம்! இந்த யுத்தத்திற்குக் காரணம் யாது? இனப் பிரச்சனை. எனவே, முரசு சுட்டிக்காட்டியதுபோல நிரந்தரத் தீர்வுக்காக முழுமூச்சுடன் போராடுவதும், இடைக்கால இழுத்தடிப்புக்களுக்கு இடம் கொடாது இருப்பதுமே, பேரழிவுகள் தொடராமல் தடுக்க ஏதுவான வழியாகும்!

சி.எஸ். செல்லத்துரை, வவுனியா.

### ஆதாரங்கள் கைவசம்

'அரசியல் தொடர்' அபாரம். நாகரிகம் கருதி வெளியிட்ட மறுப்பை பலவீனமாகக் கருதியோருக்கு தக்க பதில் தந்தது நன்று. மேலும் தேவையானால் நாமும் தகவல் தருவோம். கைகொடுப்போம். எங்கள் பாடசாலை ஆசிரியர்களுக்கு நடந்த சோகக்கதைகள் ஆதாரமாய் உள்ளன. தேவை எனில் அனுப்புகிறோம்.

அ. ஜெகசோதி, (முன்னாள் மகாஜனா கல்லூரி மாணவன்)

### முதலில் அதைச் செய்க!

கூட்டுப் போராட்டம், கூட்டுப் பிரார்த்தனை, கூட்டு மணியடிப்பு என்று தமிழ்க் கட்சிகள் பீற்றுவதற்கு முன்னர், அரசுக்கு கூட்டு ஆதரவு வழங்குவதை நிறுத்திக் கொள்ளட்டும்!

எம். குமார், யாழ்ப்பாணம்.

முரசே!
முள் நிலவும், மேற்கே ஒரு குற்றமும், மறு முனையில் இடி அமீனும் தூள்மேல் தூள் கிளப்புகிறார்கள். 'முள் நிலவு' ராஜேஸ்குமாரின் வித்தியாச நிலவுதான்.

வெ. பவானி, கொழும்பு-11.

### இதயத்தில் ஓர் இடம்

ராஜேஸ்குமாரின் 'முள் நிலவு' நாயகி நிலாவுக்கு உடனடியாக எம் இதயத்தில் இடம் ஒதுக்கிவிட்டோம். வாடகை அறவிடும் உத்தேசம் இல்லை. வாரம் ஒரு முரசு இருக்க வாடகை ஏன்.

க. ராகுல், கந்தப்பளை.

### இப்போது சான்று

'முள் நிலவு' முதல் அத்தியாயமே அதன் பிரகாசத்தை கோடிட்டுக் காட்டிவிட்டது. 'முரசு' தரும் தொடர்கள் சோடை போனதில்லை என்பதுக்கு முள் நிலவும் சான்று தரும் என்று இப்போதே சான்றிதழ் தருகிறோம்.

வி. வேணி, கே. நித்தியகலா, பதுளை.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்குப் புலிகள் வன்னித் தாக்குதல்களில்!

# வடக்குப் புலிகள் கிழக்குத் தாக்குதல்களில்!

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்கு என்று பிரதேச வேறுபாடுகள் எழுவதைத் தடுக்கும் விதமாகவே மட்டு- அம்பாறை முன்னாள் தளபதி கருணா வன்னிப் போர்முனையில் பிரதான பாத்திரம் வகிக்கிறார். அவரது தலைமையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஜயந்தன் படையணியும் போரில் பங்கு கொண்டு வருகிறது.

அதேசமயம் யாழ் குடாநாடு மற்றும் வன்னியைச் சேர்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவு திருமலை மாவட்டத் தாக்குதல்கள் பலவற்றில் பங்கு கொண்டது. சமீபத்தில் கிழக்கில் புதிதாக இணைந்த உறுப்பினர்கள் களமுனை அனுபவம் பெறுவதற்காக வன்னிக்கு அனுப்பட்டுள்ளனர். அங்கிருந்த வேறு அணிகள் சில கிழக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

## மன்னாரில்...

மன்னார் தரைப்பாதை மற்றும் வவுனியாவில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

மன்னார் தரைப்பதையில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் சர்வசாதாரணமாகக் காணப்படுகிறது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது நடவடிக்கைகளை சற்றுக் குறைத்திருந்த புலிகள் மறுபடி அதனைத் தீவிரப் படுத்த உள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ் குடாநாட்டிலும் புலிகளின் ஊடுருவல் அதிகரித்து வருகிறது. அதேசமயம் இத் தகவல்களை அடுத்து புலிகளின் ஊடுருவல்களைத் தடுக்க மேற்கொள்ளப் படும் முயற்சிகள் மக்களின் அதிருப்திக்கே தூபம் போடுகின்றன.

யாழ் குடாநாட்டில் தொடர் தாக்குதலுக்காக பெண்கள் அணியினர் அனுப்பப்பட்டிருந்தனர். யாழ் குருநகர் தாக்குதலில் சம்பந்தப்பட்ட பெண் புலி ஒருவர் கைதானதால் அந்த அணியினர் மீளப்பெறப்பட்டு புதிய அணி களம் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

## தளபதிகள்

அடிக்கடி நடைபெறும் தேடுதல்கள் மத்தியிலும் புலிகள் அமைப்பின் முக்கிய தளபதிகள் சிலர் யாழ் குடாநாட்டுக்கு சென்று திரும்புகின்றனர்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் இராசாவின் தோட்டப் பகுதியில் இரவில் படையினர் பதுங்கியிருந்தனர். அப்போது அப்பகுதிக்கு ஆயுதங்கள் சகிதம் புலிகள் வந்தனர். படையினர் தாக்குதல் தொடுத்தனர். புலிகளும் தாக்கியபடி திரும்பச் சென்றனர். சேத விபரங்களை அறிய முடியவில்லை.

இரு தரப்பினரும் இரவு நேரங்களில் பதுங்கித்தாக்கித் திரிவதால் என்ன சத்தம் கேட்டாலும் மக்கள் எவரும் வெளியே எட்டிக்கூடப் பார்ப்பதில்லை.

## புங்குடுதீவு மோதல்

யாழ் குடாநாட்டில் புங்குடுதீவு புலிகளின் கெரில்லாப் பிரதேசமாக இருந்து வருகிறது. அப்பகுதியில் ஜூன் 30ம் திகதியன்று பஸ் ஒன்றில் கடற்படையினர் ரோந்து சென்றனர்.

பயணிகள் பஸ் என்று நினைத்து புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் ஆயுதம் சகிதம் நின்று கைகாட்டி மறித்திருக்கிறார். பஸ்ஸில் இருந்த கடற்படையினர் சுட்டதில் அவர் பலியானார். மேஜர் வீரபாண்டியன் என்னும் புலிகள் இயக்க உறுப்பினரே அவ்வாறு பலியானவராவார்.

அதன் பின்னர் ரோந்து சென்ற கடற்படையினருக்கும், புலிகளுக்கும் இடையே கடும் மோதல் மூண்டது. தமது தரப்பில் இருவர் பலியானதாக படையினர் கூறியிருந்தனர்.

புங்குடுதீவில் உள்ள புலிகளுக்கு எதிராக படையினர் தரைநகர்வு முயற்சி ஒன்றை மேற்கொண்டனர்.

படையினர் வருவதை அவதானித்து அதற்கேற்ற முறையில் செயற்படக்கூடிய பகுதி என்பதாலேயே புங்குடுதீவை புலிகள் தங்கள் கெரில்லாப் பிரதேசமாகப் பயன்படுத்தி வருகின்றனர். ■

# கரும்புலித் தாக்குதல் ஆயத்தம்!

## பத்துப் புலிகள் பலி

ஜூலை 5ம் திகதி கரும்புலிகள் தினமாகும். இதனை முன்னிட்டு நாடெங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு வன்னியில் பாரிய குண்டுத் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர்.

குண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது பாரிய வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் பத்துப் புலிகள் பலியாகினர். சிலர் காயமடைந்தனர்.

கரும்புலிகள் தினத்தை நினைவு கூரும் விதமாக மதவாச்சிக்கும் மன்னாருக்கும் இடையில் நான்கு பாரிய மின் கோபுரங்கள் புலிகள் இயக்கத்தினரால் தகர்க்கப் பட்டன.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கரும்புலிகள் தினத்தை புலிகள் பெரியளவில் அனுஷ்டித்தனர். வடக்கு -கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும், கொழும்பிலும் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தேடுதல்களும், தீவிர பாதுகாப்பும் மேற்கொள்ளப்பட்டன.

யாழ் குடாநாட்டில் கரும்புலிகள் ஊடுருவியுள்ளதாகக் கருதி கடும் தேடுதல்கள் நடத்தப்பட்டன. ■

# "வன்முறையைத் தூண்டுவது நாமல்ல"

## கனடா தமிழ்ச் சங்கம் மறுப்பு

"இருவருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள மத்திய வங்கிக் கட்டடத்தைச் சேதப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட பணம் கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களிடமிருந்து பெறப்பட்டதாகும். இவ்வாறு சிறீ லங்காவின் வெளிநாட்டமைச்சர் குற்றஞ் சுமத்தியிருப்பது உண்மைக்குப் புறம்பானது" என்று 'கனடாவில் வாழும் தமிழர்களின் சங்கங்களுக்கான சம்மேளனம்' மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சம்மேளனத்தின் பொதுத் தொடர்பாளரான நேரு குணரத்னம், கனடாவிலிருந்து வெளிவரும் தினசரியான 'ரொரண்டோ ஸ்டார்'ருக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

"சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இத்தகைய குற்றச்சாட்டினைச் சுமத்துவது இது முதற் தடவையல்ல. கனடாவில்தான் பெருந் தொகையான ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் ரொரண்டோவில் மட்டும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் வசிக்கின்றனர்.

சிறீலங்காவில் வன்முறையை, கனடாவில் வாழும் தமிழர்கள் தூண்டி விடுகின்றனர் என்று கூறுவதில் எத்தகைய உண்மையும் இல்லை.

சமாதானமான சூழ்நிலையைத் தவிர வேறு எதையும் தமிழர்கள் விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள்தான் போரினால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகின்றனர். கனடாவில் அதிக எண்ணிக்கையில் ஈழத் தமிழர்கள் வாழ்கின்றனர் என்பதனால் இப்பழியை அடிக்கடி அமைச்சர் கதிர்காமர் எம்மீது சுமத்துகிறார்!" என்று தெரிவித்துள்ளார்.

திரு. நேரு குணரத்னம் சார்ந்துள்ள சம்மேளனம் கனடாவிலுள்ள 10 தமிழர்கள் சங்கங்களை ஒன்றிணைத்த ஓரமைப்பாகும்.

# தேவானந்தா மீதான தாக்குதல் விசாரணை!

## அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை

களுத்துறை சிறையில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட போது கடமையில் இருந்த சிறை அதிகாரிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டனர்.

அதே சமயம் 16 தமிழ் கைதிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடந்தபோது டக்ளஸ் தேவானந்தாவுடன் சிறைக்குள் சென்ற சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதத்திடம் 06.07.1998 அன்றே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை நிறுத்த முன்னர் அடையாள அணிவகுப்பு நடத்தப் பட்டவும் இல்லை.

தாக்குதல் நடத்தியவர்களில் ஒரு சிலரையாவது மகேஸ்வரி வேலாயுதம் கண்டிருக்க முடியும். எனவே அடையாள அணிவகுப்பு நடத்தியிருந்தால் உண்மைக் குற்றவாளிகளை இனம் காண முடிந்திருக்கும். அவ்விடயத்தில் விசாரணையாளர்கள் ஏன் ஆர்வம் காட்டவில்லை என்பது தெரியவில்லை, என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

அடையாளம் காட்டப்படாமல் குற்றச்சாட்டு சுமத்தப்படுவது வழக்குக்கு வலுவாக இருக்கப்போவதில்லை. "நடவடிக்கை எடுத்துள்ளோம்!" என்று தற்போது காண்பிக்க மட்டுமே உதவும் என்று சட்ட நிபுணர்களும் கூறியுள்ளனர்.

அதே சமயம் தாக்குதல் சமயத்தில் எச்சரிக்கை வேட்டு தீர்க்கப்பட்டதில் காயமடைந்த சில கைதிகளும் குற்றவாளிகளாக! சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

எச்சரிக்கை வேட்டு தீர்க்கப்பட்டபோது பறந்த சன்னங்களில் சில தேவானந்தா எம்.பி. யின் முதுகிலும் பாய்ந்திருந்தன.

தாக்குதலின் பின்னர் சிறைக்குள் தேவானந்தாவின் மெய்ப்பாதுகாப்பாளரும் உள்ளே சென்றிருக்கிறார். இதுவரை அவரிடம்கூட விசாரணை செய்யப்பட்டவில்லை.

சிறைக்குள் போதிய பாதுகாப்பு கொடுக்கத் தவறியது மட்டுமல்லாமல், நடைபெற்ற சம்பவம் பற்றிய விசாரணை கூட உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய விதத்தில் நடத்தப்படவில்லை, என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.

அதேசமயம், டக்ளஸ் தேவானந்தாவிற்கு சிகிச்சை வழங்குவதில் கொழும்பு பொது மருத்துவமனை வட்டாரங்களும் அரசாங்கமும் போதிய ஆர்வம் காட்டின என்றும் ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் திருப்தி தெரிவித்தன.

# விசேஷ அதிரடிப்படை சுற்றிவளைப்பு

## தம்மை மாய்த்துக் கொண்டனர் 4 புலிகள்

மட்டக்களப்பு- வாகரையில் ஆரம்பிக்கப் பட்ட படை நகர்வுக்கு அடுத்ததாக கிழக்கில் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட எல்லைப் புறங்களான- புலிகள் இயக்கத்தினரின் வசமுள்ள பகுதிகளை நோக்கி ஜூன் மாத இறுதியில் மற்றொரு படை நகர்வு ஆரம்பிக்கப்பட்டது.

புளுகுணாவ, மண்முனை, களுவாஞ்சிக்குடி, வவுணதீவு போன்ற பகுதிகளிலிருந்து படையினர் முன்னேறினர். படையினர் முன்னேறியபோது ஆரம்பத்தில் பொது மக்களுக்கு எந்தவித பாதிப்புக்களும் இருக்கவில்லை. பட்டிப்பளை- அரசடித்தீவிலிருந்த புலிகளின் காவல்துறைக் கொட்டகை, நீதிமன்றக் கொட்டில்கள் என்பன எரிக்கப்பட்டன. அந்தப் பணிமனையில் இருந்த தளவாடங்களையும் படையினர் எடுத்துச் சென்று விட்டனர். அங்கிருந்த புளியந்தீவுக் கோட்டை அரசியல் பொறுப்பாளரின் வீடு உடைக்கப் பட்டது. புலிகள் இயக்கத்தினர் உணவுப் பொருட்கள் வைத்திருந்த கடையும் எரிக்கப் பட்டுவிட்டது.

மகிழடித்தீவுக்குச் சென்ற படையினர் தமது நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு மறுநாள் திரும்பி வரும்போது, புலிகள் படையினர் மீது ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டனர். படையினரும் மறுமுனையிலிருந்து ஷெல்களை ஏவினர்.

மகிழடித்தீவிலுள்ள குடிமனையொன்றில் ஷெல் விழுந்து ஒரு குடும்பம் பாதிக்கப்பட்டது. த. இளையதம்பி (46) கால் முறிந்தது. அவரின் மகள் இ.யசோதினி (17) குடல்கள் வெளிவந்த நிலையில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இ. ஜீவராணி எனும் மற்றொருமகள் பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

## முற்றுகை

புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரின் தளம் புளுகுணாவையிலிருந்து வந்த விஷேட அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. முற்றுகையில் இருந்து தப்பி புலிகள் சிலர் பின்வாங்கினர். அங்கிருந்த புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் கார்த்திக்கா நிலைமை மோசமாகியதால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டார். கார்த்திக்காவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் இவ்வாறே உயிரை மாய்த்துக்கொண்டார். அங்கிருந்த கால்களை இழந்த மேலும் ஒரு பெண்புலி உறுப்பினரும் ஆண்உறுப்பினரும் கூட படையினரிடம் பிடிபடாமல் தங்களை மாய்த்துக் கொண்டனர். அவ்விடத்திலேயே படையினரின் கண்களுக்குள் அகப்படாமல், இரு பெண்புலி உறுப்பினர்கள் சுச்சிதமாக நெற்கதிர் குவியலான உப்பட்டிக்கட்டுக்களுக்குள் மறைந்திருந்து தப்பிக்கொண்டனர்.

படையினர் ஒரு நாளிலேயே தமது நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு தமது பழைய இடங்களுக்குத் திரும்பி விட்டனர். படையினர் விலகியமறுகணமே புலிகள் இயக்கத்தினர் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பி விட்டனர். புலிகளின் வழமையான பரிபாலன நடவடிக்கைகள் அந்தந்தப் பகுதிகளில் துவங்கியுள்ளன.

ஜூன் 29ம் திகதியே படையினர் மேற்படி 2வது படை நகர்வை மேற்கொண்டு திரும்பினர்.

# "அரசு பொறுப்பேற்க வேண்டும்"

## முன்னாள் அமைச்சர் சாடுகிறார்

சிறையில் வாடிக்கிடக்கும் தமிழ் சகோதரர்களைப் பார்வையிட, தனது மெய்ப் பாதுகாப்பாளர்கள் கூட இன்றி கடந்த ஜூன் 30ஆம் திகதி மாலை களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்ற ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு டக்ளஸ் தேவானந்தா கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டு பாரதுரமான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாட்டிற்கும், ஒவ்வொரு பிரஜைகளுக்கும் பாதுகாப்பை வழங்க வேண்டிய அரசும், அமைச்சும், மற்றும் அது சார்ந்த அதிகாரிகளுமே இது போன்ற பாரதூரமான சம்பவங்களுக்குப் பொறுப் பேற்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஏ.எச்.எம். அஸ்வர் ஏறாவூரில் நடைபெற்ற பரிசளிப்பு விழா வொன்றின்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்; "இந்த அரசின்மீது டக்ளஸ் தேவானந்தாவும் ஈ.பி.டி.பி.யினரும் சலிப்படைந்து விட்டனர். இந்நிலையில் இத்தாக்குதல் நடந்துள்ளது" என்றும் கூறினார். ■

# பொய்யான ஊகங்கள்

களுத்துறை சிறையில் நடைபெற்ற தாக்குதலின் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவின் உடல் நிலை தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டன. மருத்துவமனை டாக்டர்கள் எவரும் செய்தியாளர்களுக்கு தகவல் கொடுக்கவில்லை. அதனால் பல ஊகங்கள் கிளம்பின.

மூளையில் பலத்த பாதிப்பு என்றும் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளார் என்றும் செய்திகள் வெளியாகின. அவ்வாறான பாதிப்பு எதுவும் இல்லை என்றும் படிப்படியாக உடல் நிலை தேறிவருகிறார் என்பதும் நம்பகமாகக் கிடைத்த தகவலாகும்.

டக்ளஸ் தேவானந்தா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 48 மணி நேரத்தின் பின்னர் அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியது உறுதியாகியது.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அவரை பார்வையிட்டதுடன் உரையாடியும் உள்ளனர். ஈ.பி.டி.பி முக்கிய பிரமுகர்கள் தேவானந்தாவுடன் தனியாகச் சந்தித்தும் உரையாடினர்.

தேவானந்தா உடல் நிலை மோசமாகி விட்டது. ஈ.பி.டி.பி க்குள் பலத்த பிரச்சனை என்று தமிழ்க் கட்சி ஒன்றின் முக்கிய பிரமுகர் ஒருவரால் சில பத்திரிகையாளர்களுக்கு வதந்தி பரப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# சாவடியில் மாட்டிய சிப்பாய்

மட்டக்களப்பு-ஓட்டமாவடியில் இருந்து மீன் வியாபாரியான அப்துல் ஸலாம் என்பவர் தனது வேனில் மேலும் மூவருடன் கொழும்பு சென்று கொண்டிருக்கும்போது நாவலடிச் சந்தியிலுள்ள படை முகாமில் வைத்து வேனை மறித்த படைவீரர்கள் சிலர் சக இராணுவ சிப்பாய் ஒருவரை வேனில் ஏற்றிச் செல்லுமாறு கேட்டனராம்.

அப்பொழுது ஒரு றெஜிபோம் பெட்டியையும் அந்த இராணுவ சிப்பாய் தன்னுடன் எடுத்து வந்திருக்கிறார். வேன் மாதுறு ஓயாச் சந்திச் சோதனை அரணை அடைந்தபோது, அங்கு பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். அப்போது அங்கே சோதனை நடவடிக்கைகளுக்கு உதவிக் கொண்டிருந்த பொலிஸ் துப்பறியும் மோப்ப நாய் இந்த இராணுவ சிப்பாய் கொண்டு வந்த றெஜிபோம் பெட்டியை மோப்பம் பிடித்துச் சுற்றியது. அதனால் சந்தேகித்த பொலிஸார் பெட்டியைத் திறந்தபோது உள்ளே இறால்களும் அதற்குக் கீழே ஒரு துப்பாக்கியும், 4 கிரேனைட்டுக்கள், 300 துப்பாக்கி ரவைகள் என்பனவும் கைப்பற்றப் பட்டன.

இதனைத் தொடர்ந்து அந்தச் சிப்பாய் உட்பட மற்றும் பொதுமக்களான ஓட்டமாவடி முஸ்லிம்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

விடுமுறையிற் செல்லும் படைவீரர் என்று இடைவழியில் பொதுமக்களின் வாகனத்தில் ஏறிக்கொள்வோர் மீது விழிப்பாயிருக்கா விட்டால் கதையை வேறு விதமாக மாற்றி உள்ளே தள்ளி, எலியானாலும் 'புலி'யாக்கி விடுவார்கள் என்று வாகனக் காரார்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

படையிலிருந்து தப்பிப்போர் சிலர் தென்பகுதியில் கொள்ளைச் சம்பவங்களிலும் பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்படி சம்பவம் 01.07.98 அன்று இடம் பெற்றது.

# புலிகளின் ஒத்துழைப்புக் கிடைக்குமா?

## மின்சார விநியோகம் கேள்விக்குறி

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் முருங்கனுக்கருகில் உள்ள 12ஆம் கட்டை என்னுமிடத்தில் கடந்த 05.07.98 இரவு 12.30 மணியளவில் மூன்று மின்கம்பங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் மன்னாருக்கான நீர் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

கடந்த 17.06.98 அன்று மதவாச்சி வழியான நீர்மின் விநியோகம் மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது நடைபெற்று இருவாரத்தினுள் மின் கம்பங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை கட்டையடம்பன், பறயனாலங்குளம், முருங்கன், உயிலங்குளம், தள்ளாடி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கும் இராணுவ முகாம்களுக்கும் மின்சாரம் விநியோகிப்பதற்காக பல ட்ரான்ஸ்போமர்கள் நிறுவப்பட்டுள்ளன.

கட்டையடம்பன், தள்ளாடி இராணுவ முகாம்களுக்கு ஏற்கனவே மின்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990ம் ஆண்டு மன்னாருக்கு கிடைக்கவேண்டிய நீர் மின்சாரம் இந்த ஆண்டே கிடைத்தது. இது கிடைத்து ஒரு சில நாட்களுக்குள் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

புலிகளின் ஒத்துழைப்புக் கிடைக்காத வரை மன்னாருக்கு மின் விநியோகம் மேற்கொள்வது சாத்தியப்படாது என்றே கூறப்படுகிறது. ஏனெனில் சகல மின் கம்பங்களும் புலிகள் நடமாடும் பகுதிகளுக்கூடாகவே வருகின்றன.

# தடை நமக்கே

விடுதலைப் புலிகள் தமதுசெய்தி ஊடகங்கள் மூலம் பலதரப்பட்ட ஆதாரபூர்வமான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். புலிகள் வெளியிட்ட தகவல் ஒன்றில் சிறீலங்கா அரசின் ஆயுதக் கொள் வனவு பற்றிய விலாவாரியான விபரங்கள் அனைத்தும் வெளியிடப்பட்டுள்ளன.

உலகம் அறிந்த இத்தகவலை இங்குவெளியிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

# சிலிப்பர் கட்டைகள் படையினரால் கழற்றப்படுகின்றன!

## வாகரையில் பாதுகாப்பு நிலைகள் பலப்படுத்தும் ஏற்பாடு!

புலிகள் இயக்கத்தினரின் வசமிருந்த மட்டக்களப்பு-வாகரை படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கு புலிகள் பாரிய பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்பதால் படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகிறார்கள். அதன் ஒரு நடவடிக்கையாக கிரானிலிருந்து புணானை வரை சுமார் 15 மைல் தூரத்திற்கான புகையிரத சிலிப்பர் கட்டைகள் படையினரால் கழற்றப்பட்டு வாகரைப் பகுதிக்கு லொறிகள் மற்றும் உழவு இயந்திரங்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கான புகையிரத சேவை, கடந்த இரு வருடங்களுக்கு முன்னர், ஏறாவூரில் புலிகள் இயக்கத்தினர் புகையிரதத்தைக் குண்டு வைத்துத் தாக்கியதுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. தற்சமயம் பொலன்னறுவையுடன் மட்டுப் படுத்தியிருக்கும் கிழக்குக்கான புகையிரத சேவையை வாழைச்சேனை வரையாவது நீடிக்குமாறு பல தடவைகள் கேட்டும் பயன் கிட்டவில்லை.

ஆனால் சிலிப்பர் கட்டைகள் நீண்ட தூரத்திற்கு அகற்றப் பட்டுள்ளதைத் தொடர்ந்து இனிமேல் மட்டக்களப்பிற்கான புகையிரத சேவை என்ற கதையை நினைத்துப் பார்க்கமுடியாமற் போயுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# 'யுகவிளக்குவ' நாடகம்

## பி.பி.சி. சரியான விமர்சனம்

1998.06.22 திங்கட்கிழமை இரவு 9.35 க்கு பி.பி.சி. 'சந்தேசிய 2' சிங்கள ஒலிபரப்பில் மிக முக்கியமான விமர்சன நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. தேசிய தொலைக்காட்சியில் (ரூபவாஹினி) சனிக் கிழமைகளில் இரவு 09.15 க்கு கொச்சைத் தமிழும் கலந்து ஒளிபரப்பாகும் "யுகவிளக்குவ" எனும் பெயருடைய அரச பிரசார நாடகம், தேசிய சேமிப்பு வங்கியின் ஆதரவில் ஒளிபரப்பாகிறது. அந்த நாடகம் தொடர்பாகவே பி.பி.சி. விமர்சனம் செய்தது.

இந்தப் பிரசார நாடகத்தினை நடுநிலையுடன் விமர்சனம் செய்ய எந்த ஒரு விமர்சகரும் துணியவில்லை. பி.பி.சி. சிங்கள சேவையானது நடுநிலை வழுவாமல் இந்த நாடகத்தை விமர்சனம் செய்தது. இந்த விமர்சனத்தினை சிங்களப் பேராசிரியர் ஒருவரே செய்திருந்தார்.

கிருஷாந்தி படுகொலை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டோரை நல்ல பிள்ளைகளாகக் காட்டவே இந்நாடகம் அரச ஆதரவில் தயாரிக்கப்பட்டதாகக் கூறியதுடன், தகப்பனைக் கொன்று மகளை பாலியல் வல்லுறவு செய்யுமளவுக்கு தமிழ்ப் போராளிகள் இருக்க மாட்டார்கள் எனவும் அவ்விமர்சகர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை நேர்மையானவர்கள் எனத் தாம் கருதுவதாகவும், மதிப்பதாகவும் கூறினார். ரேவதி பாத்திரத்தினூடாக சித்தரிக்கப்படும் ரஜினி திராணகம அவர்களது கணவரின் கருத்தும் அவரது குரலிலேயே ஒலிபரப்பாகியது. திரு. திரணகம தமது மனைவியின் பாத்திரம் கையாளப்பட்ட விதம் குறித்து தனது வன்மையான கண்டனத்தினை தெரிவித்ததுடன், குறிப்பிட்ட சாராரின் இலாபத்திற்காகவே இந்நாடகம் தயாரிக்கப்பட்டதாகவும் கூறினார். இந்நாடகத்தில் ரேவதி பாத்திரமேற்று நடித்துவரும், தான் தமிழினத்திற்கெதிரான நாடகமொன்றில் தனது விருப்பத்திற்கு மாறாக நடித்ததற்காகக் கவலைப்படும் தொனியில் நாடகத்தினை பிழையாக விமர்சித்தார்.

நாடகத்தின் தயாரிப்பாளர், தான் பாதுகாப்பு அமைச்சின் ' ஆலோசனையுடனும், முழு ஒத்துழைப்புடனுமே இந்நாடகத்தைத் தயாரித்ததாக ஒத்துக்கொண்டார். இந்த விபரங்களை ஏனைய தமிழ் வாசகர்களும் அறிந்து கொள்வதற்காகவே தங்களுக்கு இதனை எழுதுகிறேன். மேலும் இலங்கை தமிழ் பேசுவோர் சார்பில் பி.பி.சி. சிங்கள சேவைக்கு மனமார்ந்த நன்றிகளை- தங்கள் பத்திரிகை ஊடாகத் தெரிவிக்குமாறு மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

த. ராஜா, தம்பலகாமம்.

# ஆலோசகர் பதவியில் ஆர்வமில்லை

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு ஆசிரிய ஆலோசகர் நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

ஆனால் இப்பதவிக்கு தகுதியுடையவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட அளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் குறைந்தது எட்டுப் பேருக்காவது இந்நியமனம் வழங்கப்படல் வேண்டும். இருந்தபோதிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் இப்பதவியைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை.

ஆசிரிய ஆலோசகராக உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதில்லை. குறிப்பிட்ட சிறு தொகையைத் தவிர அலவன்ஸ் ஏதும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் இந்நியமனம் கிடைப்பவர்களை பாடசாலைகளில் மதிப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாடசாலைகளில் பணி புரிந்தால் ஆசிரிய சேவை தரம் 2:1 இற்கு வரமுடியும். அத்துடன் பதில் அதிபராக கடமைபுரிய முடியும். வேறும் சில சலுகைகள், வசதிகள் கிடைப்பதாக இவர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறான நிலைமையினால் மன்னார் மாவட்டத்தில் உள்ள திறமை மிக்க ஆசிரியர்கள் தங்களது சேவையை மாவட்டம் முழுவதற்கும் வழங்காமல் ஒரு குறிப்பிட்ட பாடசாலைகளுடன் நிறுத்தி விடுகின்றனர். இது இம் மாவட்டத்தின் கல்வியில் எதிர்காலத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என மன்னார் ஆரம்பக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் திரு அ. அந்தோனிமுத்து தெரிவித்துள்ளார்.

# மருந்துக்கு தட்டுப்பாடு

மூதூர், கிண்ணியா அரசினர் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். இவ்விரு வைத்தியசாலைகளிலில் வெளிநோயாளர் பிரிவில் 300க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெறுவதற்காக நாள்தோறும் செல்கின்றனர். இவர்களுக்கு வழங்குவதற்கான மருந்துகள்-குறிப்பாக குளிசை வகைகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர் பகுதிக்குச் செல்பவர்களுக்கு மருந்துகளை கடைகளில் வாங்கும்படி சீட்டு எழுதி வழங்கப்படுகிறது. இதனால் வறிய மக்கள் மருந்துகளை வாங்கமுடியாது திண்டாடுகின்றனர்

மூதூர், கிண்ணியா அரசினர் வைத்தியசாலையின் தரம் நாளுக்குநாள் குறைந்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

சேனையூர் அ. அச்சுதன்.

# நாட்டிய நாடக வெள்ளிவிழா!

25 வருடங்களுக்கு முன் மேடையேற்றப்பட்ட "நீ எதிர்கொண்டதேன்" எனும் இயேசு காவிய நாட்டிய நாடகத்தின் வெள்ளி விழா சிறப்புப் பக்தி மேடை நாடகம், மட்டக்களப்பு மாநகரில் மூன்றாவது தடவையாக மேடையேற்றப்பட்டது.

கண்ணியத்திற்குரிய இயேசு சபைத் துறவி யோசப் மேரி அடிகளார் தயாரித்து நெறியாள்கை செய்த இந்தச் சிறப்பு நிகழ்ச்சி சமீபத்தில் இடம்பெற்றது. மூன்று தினங்கள் மட்டக்களப்பு வெபர் அரங்கில் நடந்த இந்த நிகழ்ச்சியை சுமார் 25 ஆயிரம் பேர் கண்டு களித்தார்கள்.

யுத்த சூழல் காரணமாக வழக்கமாக மாலையாகியதும் உறங்கிவிடும் மட்டக்களப்பு நகரம், இந்த நிகழ்ச்சிகளுக்காக இரவு ஒரு மணிவரை களை கட்டியிருந்தது. படையினரதும் புலிகள் இயக்கத்தினரதும் பூரண ஒத்துழைப்புடனும், அனுமதியுடனும் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி பார்வையாளர்களின் அமோக வரவேற்பைப் பெற்றுப் பிரமிக்க வைத்தது.

இளைஞர், யுவதிகள், முதியோர் உட்பட சுமார் 85 கலைஞர்கள் இந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்கள்.

# பஸ் சேவையில் அசிரத்தை

## மாணவர் பெரும் அவதி

(நமது நிருபர்)

அக்கரைப்பற்று, கல்முனை பஸ் டிப்போக்களின் அசிரத்தையான செயற்பாடுகளினால் பல மாணவர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தினமும் காலையில் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் அட்டப்பள்ளம் போன்ற இடங்களிலிருந்து ஏராளமான மாணவர்கள் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலைக்கும், காரைதீவு விபுலானந்த வித்தியாலயத்திற்கும் செல்கின்றனர்.

எனினும் இவர்களுக்குப் போதிய பஸ் சேவைகள் நடத்தப்படுவதில்லை. இதனால் தினமும் காலை 9 மணிக்குப் பின்பே பல மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

காலை 7 மணிமுதல் 8 மணிவரை ஒரு சில பஸ்கள் மட்டுமே இப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இவ்வாறே பாடசாலை முடிவடைந்ததும் போதிய பஸ்கள் இல்லாததால் இம்மாணவர்கள் 4 மணியளவிலேயே வீடு வந்து சேர்கின்றனர்.

சில வேளைகளில் வெள்ளைச் சீருடைகளைக் கண்டால் சிறு பஸ்களுக்கு 'அலர்ஜி' வந்துவிடுகிறது. இதனால் மாணவர்களை ஏற்றாமல் சென்ற சம்பவங்களும் நடப்பது வழமை. திராய்க்கேணி தமிழ் மாணவர்களே இதனால் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் காரைதீவுக்குச் செல்லவும், திரும்பி வரவும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

# பெயர்ப் பலகை தேவை!

(நமது நிருபர்)

கல்முனை வலய கல்வித் திணைக்களத்தின் இடத்தைக் கண்டுபிடிப்பதில் தூர இடங்களில் இருந்து வரும் பல ஆசிரியர்களும், கல்வி சார் உத்தியோகத்தர்களும் பலத்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

கல்முனை பிரதான தபாலகமும், கல்வித் திணைக்களமும் ஒரே கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன. அஞ்சலகம் என்று பெரிய எழுத்தில் காணப்படுகிறது.

ஆனால் கல்வித் திணைக்களம் என்பதை இனம் காண முடியாதபடி மிகச் சிறிய தகரம் ஒன்றில், பல ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பெயர்ப்பலகை ஒன்று வாசற்படியில் வைக்கப்பட்டுள்ளது. இதுவும் தெளிவில்லாமலேயே உள்ளது.

இதனால், இம் மாவட்ட கல்வித் திணைக்களத்திற்கு சில அலுவல்கள் நிமித்தம் வரும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தட்டுத் தடுமாறித்திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் வலயக் கல்வித் திணைக்களம், கல்முனை என்பதை பெரிய எழுத்தில் எழுதி-தேவை கருதி நாடி வருவோரின் சிரமத்தைக் குறைக்கலாமே! செய்வார்களா?


# 250 புலமைப்பரிசில்கள்

முதன் முதலாக குழந்தைகளுக்கான கம்பயூட்டர் பாடத்தை புலமைப்பரிசில் மூலம் அறிமுகப்படுத்திய எமது நிறுவனம், உங்கள் குழந்தைகளும் ரூபா 5000 பெறுமதியான கீழ்க்கண்ட பாடநெறியை மீண்டும் கற்க வாய்ப்பளிக்கின்றது. மூன்று தொகுதிகளாக நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடநெறியை முடித்துக்கொண்டு வெளியேறி யுள்ளனர். உங்கள் குழந்தைகளும் இலவசமாக புலமைப் பரிசில் மூலம் கற்று கம்பியூட்டர் உலகிற்கு காலடி எடுத்து வைக்க இன்னுமொரு சந்தர்ப்பத்தை பெருமையுடன் வழங்குகின்றோம்.

* Computer Technology
* Setting up Hardware and Software
* Use of software packages.
* Application of microprocessor based technology in the field of music .
* Internet & Email Application

உங்கள் குழந்தைகளும் புலமைப்பரிசிலைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது கீழ்க்கண்ட கூப்பனை நிரப்பி ரூபா 100 இனை காசாக அல்லது காசுக்கட்டளையாக இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு 31.07.98 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி உங்கள் குழந்தையை புலமைப்பரீட்சையில் தோற்ற வாய்ப்பளியுங்கள்.(காசுக் கட்டளை வெள்ளவத்தை தாபாற்கந்தோருக்கு எடுக்கப்பட வேண்டும்.) பரீட்சைக்கான நேரம்.திகதி.இடம் பரீட்சார்த்திகளுக்கு பின்னர் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

*Specimen form*

Full Name

Address

School Class

Sex Age Phone

அனுப்ப வேண்டிய முகவரி :-

**Metro Computer World**

17, Charlemont Road, Colombo-06. T.P : 074 - 511164



## விளம்பரப் பகுதி

**GUARANTEED ENGLISH TUITION**

ஆரம்ப வகுப்பு முதல் 8ம் ஆண்டு வரை

தொடர்பு:

**செல்வி ஜே.காயத்ரி**

26ஏ, மல்லிகா ஒழுங்கை,

வெள்ளவத்தை,கொழும்பு -06

தொ.பே.-592599



## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்

வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**

144 2/1, காலி வீதி,

வெள்ளவத்தை,

கொழும்பு - 6.

T.P. 586218


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுக்கு: 05.07.1967

விண்ணுக்கு: 21.06.1997

**திரு. கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு (கிளி) (மீசாலை)**



சாவகச்சேரி மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்து வந்தவருமாகிய திரு. கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி ஆடி மாதம் (10.07.1998) அன்று நடைபெறும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும் அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள்.

தகவல்: மேகநாதன், திலகம், தீசன்


## மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி புத்துயிர் பெற்று நீங்களே உங்களை வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை தீர்க்க வழியின்றி தவிக்கத் தேவையில்லை. வெட்கத்தை விட்டு முழுவிபரங்களையும் கடிதமூலம் விளக்கி எழுதவும். எமது கேள்விகளுக்கு பதில் தெரிந்தபின் பதிவு நாடாமூலம் தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சையும், உடல் குறைபாடுகளுக்கு மருந்தும் அளித்து பூரண சுகமடையலாம். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆச்சரியப்படும் வகையில் சுகமாகியுள்ளனர். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்)

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்துக்கு: கொழும்பில் 5 நாட்கள் மட்டும்.

**கொழும்பில் ஜூலை 19 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492

BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13

T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் NO-072-609388

கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**வவுனியாவில் ஜூலை 11,12**

வவுனியாவில் (2ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P.024-22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில்

**DR.P.ARUMUGAM S.A.M.P., NO.33. Tissa Weerasingam sq., Boundary Road, Batticaloa** விலும் சந்திக்கலாம்.



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=

தங்க பஸ்பம் கலந்தது 1125/=

வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

*187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398*



# SPOKEN ENGLISH

BY **K. M. N. NALRAVI**

இப்பொழுது வெள்ளவத்தையில்

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.

★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.

★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.

★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 18 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாகப் பேசப் பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: பழைய மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பம்.

NALRAVI ENGLISH LANGUAGE CENTRE

527, First Floor, Galle Road, Wellawatta, Col - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

# சிறைக்குள் தீட்டப்பட்ட திட்டம்
# கம்பிகளோடு காத்திருந்தனர்

**ஜூன்** 30, செவ்வாய்க்கிழமை களுத்துறைச் சிறையில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டார்.

அது திட்டமிட்டு நடந்த தாக்குதலா? திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதலா?

திட்டமிட்ட தாக்குதல் என்பதில் சிறிது சந்தேகமும் இல்லை.

தாக்குதல் பற்றி கூற முன்னர் சிறை நிலவரம் பற்றிய சுருக்கமான விளக்கம் இது.

களுத்துறை சிறைப்படுகொலை விடயத்தில் இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்பின்னர்கூட அங்கு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்ய எவ்வித நடவடிக்கையும் அரசு மேற்கொள்ளக்கூட இல்லை.

இவ்விடயத்தில் எந்தவொரு தமிழ்க் கட்சியும் போதுமான அழுத்தங்களை அரசுக்கு ஏற்படுத்தவில்லை.

களுத்துறை சிறைப்படுகொலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா நியமித்த விசாரணைக் கமிஷன்கூட சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவற்றின் கண்டனங்களில் இருந்து தப்பிக்கொள்ள நியமிக்கப்பட்ட கண்துடைப்புக் கமிஷன்தான்.

களுத்துறைச் சிறையில் மொத்தம் 547 கைதிகள் உள்ளனர். சி,டி,ஈ. ஆகிய மூன்று பிரிவுகளில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள தமிழ்க் கைதிகளை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. புலிகள் இயக்க உறுப்பினர்கள்.
2. எவ்வித விசாரணையும் இல்லாமல் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்.
3. தடுப்புக்காவல் உத்தரவுப்படி உள்ளே தள்ளப்பட்டு மூன்று மாதத்துக்குள்ளோ ஆறுமாதத்துக்குள்ளோ விடுதலையாகக் கூடியவர்கள்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பிணையில் விடுதலையாவதாக பத்திரிகைகளில் செய்தி வருமல்லவா. அவர்கள் இந்த மூன்றாவது பிரிவினர்தான். இவர்களை தமிழ்க் கட்சிகள் கூறியோ, அல்லது வேறு அமைப்புக்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்தோ விடுதலை செய்வதில்லை. பொலிஸ் தரப்பு ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தால் இவர்கள் விடுதலையாகின்றனர்.

இந்த மூன்றாவது பிரிவினரை குறிப்பிட்ட காலத்துடன் வெளியே விடுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. பெருந்தொகையான கைதிகளை தொடர்ந்து உள்ளேயே வைத்திருந்தால் புதிய கைதிகளை வைத்திருக்க நாட்டிலுள்ள சிறைகள் போதாது.

இக் காரணங்களால் குறிப்பிட்டளவு தமிழ்க் கைதிகள் பிணையில் விடப்பட்டுக் கொண்டே இருப்பர். இச் செய்திகளை பார்த்து தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள்தானே, வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது என்று நினைத்து விடக்கூடாது.

உண்மையில் பெரிய பிரச்சனை எதுவென்றால், நீண்டகாலமாக களுத்துறை சிறையில் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள 50ற்கு மேற்பட்ட தமிழ்க் கைதிகளின் பிரச்சனைதான்.

இவர்கள் விடயத்திலே தான் கொடுத்த வாக்குறுதிகளை மீறி, விசாரணைகூட இன்னமும் ஆரம்பிக்காமல் வைத்திருக்கிறார்கள். இவர்கள் விடயத்தில் நீதி பெற்றுக்கொடுக்க தமிழ்க் கட்சிகளாலும் முடியவில்லை. வேறு எந்த மனித உரிமை இயக்கங்களாலும் இயலவில்லை.

இவர்கள் 53 பேர்தான் சமீபத்தில் சாகும்வரை உண்ணாவிரதப் ,போராட்டத்தை ஆரம்பித்தனர்.

முன்புபோல் அல்லாமல் இம்முறை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகும் போதே வித்தியாசமான நிபந்தனை ஒன்று கைதிகளிடம் இருந்து வந்தது.

தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் நேரில் வந்து உத்தரவாதம் தந்தால் உண்ணாவிரதத்தை கைவிடத் தயார் என்று கைதிகள் கூறினார்கள். அவர்கள் கூறியது சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதத்திடம்.

அவர் தன்னிடம் கைதிகள் அவ்வாறு கூறியதாக ஐ.பி.சி. வானொலிக்கும் பேட்டி கொடுத்திருந்தார்.

சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிப்பவர்கள் கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்போம் என்று கூறுவதுதான் வழக்கம். அதற்கு மாறாக போராட்டம் தொடங்க முன்னரே அதனை கைவிடத் தயார் என்று கூறிக்கொண்டு இறங்கமாட்டார்கள்.

எனவே அவர்கள் அப்படிக் கூறியதற்கு பின்வரும் மூன்று விடயங்களில் ஒன்று காரணமாக இருக்கக்கூடும்.

1. மகேஸ்வரி வேலாயுதம் தமிழ்க் கைதிகளிடம் சென்று, 'நீங்கள் உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளுங்கள், நான் தமிழ்க் கட்சித்தலைவர் ஒருவரை அழைத்து வருகிறேன். உத்தரவாதம் பெற்றுத் தருகிறேன்' என்று தூண்டிவிட்டிருக்கக்கூடும். அதனால் மகேஸ்வரி வேலாயுதத்துக்கும் பிரசார இலாபம் ஏற்படும்.

2. தளம்பல் மனப்பான்மையுடன் உண்ணாவிரதத்தை கைதிகள் ஆரம்பித்திருக்க வேண்டும். அதனால் அவர்களாகவே வேறு நோக்கம்



எதுவும் இல்லாமல் அப்படியொரு கோரிக்கையை விட்டிருக்கக்கூடும்.

3. சிறையில் உள்ள புலிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க மறைமுகமாக தூண்டியிருக்கலாம். தமிழ்க் கட்சித் தலைவர் யாராவது ஒருவர் உண்ணாவிரதக் கைதிகளை பார்வையிட வந்தே தீருவர் என்ற நம்பிக்கையில், உண்ணாவிரதத்தை வலையாக விரித்து உள்ளே இழுக்க திட்டமிட்டிருக்கலாம்.

மேற்கண்ட மூன்று காரணங்களில் ஒன்றுதான் தமிழ்க் கட்சித் தலைவர் யாராவது ஒருவர் வந்து உத்தரவாதம் தரவேண்டும் என்ற கோரிக்கைக்கு பின்னால் இருந்திருக்க வேண்டும்.

ஆனால் ஒன்றுமட்டும் உறுதி, சிறைக்குள் தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிடப்பட்ட தகவல் மகேஸ்வரி வேலாயுதத்துக்கு தெரியாது. அவருக்கு சுய விளம்பரத்தில் ஆர்வம் உண்டு என்பது மெய்தான். ஆனால் சதிக்கு துணை போகக்கூடிய ஒருவரல்ல.

உண்ணாவிரதம் ஆரம்பமான தினத்தில் இருந்தே சிறைக்குள் இருந்த தமிழ் கைதிகளில் குறைந்தது 20 பேர் கூடி தாக்குதல் ஒன்றுக்கான திட்டம் தீட்டிவிட்டனர்.

குறிப்பாக 'டி' பிரிவில் இருந்தவர்களில் ஒரு பகுதியினர்தான் தாக்குதல் திட்டத்தின் சூத்திரதாரிகள். இப்பிரிவில் 75 முதல் 80 தமிழ்க் கைதிகள்வரை வைக்கப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களும் இப்பிரிவில்தான் இருக்கின்றனர்.

மாவீரர் தினத்தை களுத்துறை சிறையில் அனுஷ்டிப்பதிலும் 'டி'பிரிவில் உள்ளவர்களே முன்னணியில் நின்றனர். இரத்மலானை விமானத் தள தகர்ப்புக்கான உளவறியும் பணியில் ஈடுபட்டபோது கைதான புலிகளும் இங்குதான் வைக்கப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கொழும்பு இல்லம்மீது 9.10.95ல் நடைபெற்ற தாக்குதலில் சம்பந்தப்பட்ட புலிகளும் அதில் உள்ளனர்.

களுத்துறைச் சிறையில் உள்ள அனைவரும் புலிகளல்ல. ஆனால் நூறுவீதம் உறுதியான புலிகளும் அங்கு உள்ளனர். இது ஒன்றும் இரகசியமல்ல. சிறை அதிகாரிகளுக்கும் தெரிந்த விடயம்தான்.

சிறைக்குள் தமிழ்க் கட்சித் தலைவர் எவரையாவது தீர்த்துக்கட்டும் திட்டத்திற்கு சிறைக்குள் இருந்த புலிகள்தான் சூத்திரதாரிகளாக இருந்திருப்பர் என்பது சந்தேகத்துக்கு இடமற்ற விஷயம். ஆனால் தாக்குதற் திட்டத்தில் புலிகள் தவிர்ந்த வேறு கைதிகளும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட தாக்குதலாக அல்லாமல் கைதிகள் உணர்ச்சிவசப்பட்டு திடீரென்று நடத்திய தாக்குதல் போன்று சித்தரிப்பதுதான் திட்டத்தின் முக்கிய அம்சம்.

ஆனால் டக்ளஸ் தேவானந்தாவை மட்டும் குறியாக வைத்து தீட்டப்பட்ட திட்டமல்ல. வேறு கட்சித் தலைவர்கள் யாராவது சென்றிருந்தால்கூட தாக்குதல் நடத்தப்பட்டே இருக்கும்.

ஜூன் 30 செவ்வாய்க்கிழமை அன்று காலையில் கொழும்பு ஈ.பி.டி.பி. தலைமையகத்தில் ஈ.பி.டி.பி. எம்.பிகள் கூட்டம் நடைபெற்றது. "நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்ய அரசு திட்டமிட்டு தாமதம் செய்கிறது. எனவே உண்ணாவிரதிகளுக்கு உத்தரவாதம் கொடுத்து போராட்டத்தை நிறுத்த வற்புறுத்துவதில்லை" என்று முடிவு செய்யப்பட்டது. ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலேயே இக் கூட்டம் நடைபெற்றது.

மதியம் டக்ளஸ் தேவானந்தா சட்டத்தரணி மகேஸ்வரி சகிதம் களுத்துறைச் சிறைக்கு சென்றார். வாகனத்தை செலுத்திய உறுப்பினரும் மெய்க்காப்பாளர் ஒருவரும் மட்டுமே உடன் சென்றனர்.

சிறைவாயிலில் வைத்து டக்ளஸ் தேவானந்தாவின் மெய்க்காப்பாளர் சிறைக் காவலர்களால் தடுக்கப்பட்டார். 'உள்ளே போதிய பாதுகாப்பு இருக்கிறது. யோசிக்க வேண்டாம்' என்று மெய்க்காப்பாளருக்கு கூறப்பட்டது.

அதனால் டகள்ஸ் தேவானந்தாவும், மகேஸ்வரியும் மட்டுமே உள்ளே சென்றனர். உள்ளே உண்ணாவிரதிகளை பார்வையிட்ட டக்ளஸ் தேவானந்தா: "நான் உங்களை வற்புறுத்த வரவில்லை. விரும்பியோர் தொடர்ந்து இருங்கள். விரும்பாதோர் உண்ணாவிரதத்தை கைவிடலாம்.." என்று கூறினார்.

உண்ணாவிரதத்தை நிறுத்த கைதிகள் 50 பேரும் முன்வந்தனர். தண்ணீர் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார் டக்ளஸ் தேவானந்தா. அங்கு எவ்வித வாக்குவாதங்களும் ஏற்படவில்லை.

அப்போது மாலை ஆறு மணியாகிவிட்டது.

தமிழ்க் கைதிகளின் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய கைதிகளின் பிரிவுகள் பூட்டப்பட்டு விட்டன.

உண்ணாவிரதத்தை முடித்த கைதிகளிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட தேவானந்தாவை 'டி' பிரிவுக்கு வருமாறும், அங்குள்ள தமிழ்க் கைதிகள் பார்க்க விரும்புவதாகவும் கூறப்பட்டது. 'டி' பிரிவில் உண்ணாவிரதிகள் எவரும் இருக்கவில்லை.

'டி' பிரிவின் மலசலகூடத்தில் இருந்த இரும்புக் கம்பிகள், மலசல கூடத்தை உடைத்து எடுத்த கொங்கிரீட் கல்லுகள் சகிதம் தாக்குதலுக்கான தயார் நிலையில் அங்கு காத்திருந்தனர்.

இரும்புக் கம்பியால் எங்கு குத்தினால் தீர்த்துக் கட்டுவது சுலபம் என்பதும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டுவிட்டது.

இந்த விபரீதம் எதுவும் தெரியாமல் டக்ளஸ் தேவானந்தா 'டி' பிரிவுக்குள் நுழைந்தார்.

இத்தனைக்கும் உள்ளே போதிய பாதுகாப்பு இருப்பதாக கூறிய சிறை அதிகாரிகள் தேவானந்தாவுக்கு பாதுகாப்பாக ஆயுதம் ஏந்திய காவலர் எவரையும் பாதுகாப்புக்காக அனுப்பவில்லை.

சிறைகளில் கைதிகளை மிக நெருக்கமாக சந்திப்பதற்கு சிறை விதிகள் அனுமதிப்பதில்லை. கைதிகள் விபரீதங்களில் ஈடுபடலாம், பணயம் வைத்து தப்ப முயலலாம் போன்ற காரணங்களால் கைதிகளைவிட்டு ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால்தான் சந்திப்போர் நிற்க வேண்டும்.

அந்த விதிமுறைகூட பேணப்படவில்லை. டக்ளஸ் தேவானந்தாவை 75-80 கைதிகளும் சுற்றி வளைத்து நின்று கொள்ள அனுமதிக்கப்பட்டனர். மகேஸ்வரி சற்று எட்டத்தில் நின்றிருக்கிறார். ஆயுதம் இன்றி பாதுகாப்புக்காக வந்த சிறை உத்தியோகத்தர் இதையெல்லாம் பார்த்தபடி தூரத்தில் ஒரு குந்தில் அமர்ந்திருந்தாராம்.

டக்ளஸ் தேவானந்தா கைதிகளுடன் கதைக்க தொடங்கிய சிறிது நேரத்திலேயே பின்புறம்இருந்து ஒரு கைதி பாய்ந்து தலையில் தாக்கி இருக்கிறார். அதேசமயம் முன்புறம் இருந்தும் சில கைதிகள் தாக்கியுள்ளனர்.

முன்னால் நின்று தாக்கிய இரண்டு மூன்று கைதிகளை தேவானந்தா தடுத்து மறித்திருக்கிறார். அதேசமயம் மகேஸ்வரியை நோக்கி ஒரு சில கைதிகள் கூரிய கம்பிகளுடன் வசை பாடிக்கொண்டு பாய, மகேஸ்வரி பயந்து ஓடியிருக்கிறார்.

தன்னை தாக்கியவர்களை எதிர்த்து சமாளித்துக் கொண்டிருந்த தேவானந்தாவின் தலையில் பின்புறமாக கொங்கிரீட் கல்லால் ஒரு கைதி பலமாக தாக்கியதால் அவர் கீழே விழுந்துபோனார்.

அதன்பின்னரே கழுத்துப் பகுதியில் குறிபார்த்து இரும்புக் கம்பியால் குத்தப்பட்டார். தொடர்ந்து பத்துத் தடவைக்கு மேல் பிடரிப் பக்கமாக குத்தியிருக்கின்றனர். கற்களாலும் தாக்கியுள்ளனர்.

அங்கு நின்ற சிறை உத்தியோகத்தர் ஓடிச்சென்று 'துவக்கை எடு, துவக்கை எடு' என்று தமது காவலர்களை நோக்கிக் குரல் கொடுத்திருக்கிறார்.

'ரீப்பீட்டர்' துப்பாக்கியை பெற்றுக் கொண்டு ஓடிப்போய் மேல்நோக்கி எச்சரிக்கை வேட்டு தீர்த்திருக்கிறார்.

இச்சத்தங்கள் சிறைக்கு வெளியே நின்ற டக்ளஸ் தேவானந்தாவின் மெய்க்காப்பாளருக்கு கேட்டிருக்கிறது. அவர் தமது வாகனத்துக்கு ஓடிப்போய் பிஸ்டலை தூக்கிக் கொண்டு உள்ளே புக முற்பட காவலர் தடுத்துள்ளார். அவரை தள்ளிவிட்டு மெய்க்காப்பாளர் உள்ளே ஓடியபோது 'டி'பிரிவில் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே இரத்தம் சொட்ட சொட்ட தரையில் கிடந்திருக்கிறார். வேறு காவலர்கள்கூட அப்போது அவ்விடத்தில் இருக்கவில்லை.

மெய்க்காப்பாளர் அவரை தூக்க முயன்று கொண்டிருந்த போதுதான் ஓர் காவலர் ஓடிவந்து துணைக்கு நின்று தேவானந்தாவை தூக்கிச் செல்ல உதவினார். வெளியே நின்ற தேவானந்தாவின் வாகனத்திலேயே அவரை ஏற்றினர். சிறை வாகனம் அதன் பின்னரே வந்து சேர்ந்தது.

பின்னர் நாகொட மருத்துவமனையில் இருந்து கொழும்புக்கு ஆம்புலன்ஸ் வண்டியில் கொண்டு செல்லப்பட்டார்.

தாக்குதல் நடத்தப்பட்ட முறை மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்பதை சந்தேகமின்றி நிரூபித்திருக்கிறது. கழுத்துக்குப் பின்புறம் இடம் பார்த்து மூளிப் பகுதியில் குத்தியுள்ளனர். அந்தக் குத்து மேலும் சற்று ஆழமாக சென்றிருந்தால் உயிர் தப்பியிருக்க வாய்ப்பே இல்லை.

உச்சந்தலையில் கொங்கிரீட் கல்லால் தாக்கியுள்ளனர். அதனால்தான் உதட்டுப் பகுதிகள், காது நரம்பு போன்றவை பாதிக்கப்பட்டன. ஆயினும் பாரதூரமான பாதிப்பாக இல்லாமல் போனது அதிஷ்டம்.

டக்ளஸ் தேவானந்தாவின் அருகில் இருவரோ அல்லது ஒருவர் கூட நின்றிருந்தால் தாக்குதல் நடத்தியவர்கள் அவரது உடலில் தாம் நினைத்தபடி தாக்க முடியாமல் இருந்திருக்கும். குறிப்பாக கழுத்துப் பகுதியில் நடந்த தாக்குதலுக்கு வாய்ப்பு இருந்திருக்காது. தாக்குதல் நடந்திருக்கும். இத்தனை பாரதூரமாக இருந்திருக்காது.

சிறை அதிகாரிகள் உரிய பாதுகாப்பை உள்ளே வழங்கி, தேவானந்தாவின் அருகில் சிறைக்காவலர்களை நிறுத்தியிருந்தால் நினைத்தபடி தாக்குதலை நடத்த முடிந்திருக்காது.

இத் தாக்குதலுக்காக திட்டமிட்டவர்களின் சாதுரியத்தைவிட, அதற்கான வாய்ப்பை வழங்கியதுதான் திட்டம் பலிக்கக் காரணமாகிவிட்டது.

டக்ளஸ் தேவானந்தாவும் களுத்துறை சிறைக்கு நம்பகமான துணை இன்றி தனியாகச் சென்றதும் புத்திசாலித்தனமானதல்ல.

மூன்று நான்கு நிமிடங்களுக்குள்தான் தாக்குதல் நடந்துள்ளது. தேவானந்தாவுக்கு உதவி இருந்திருந்தால் மூன்று நிமிடத்திற்கு தாக்குதலை சமாளித்து நிற்பது பெரிய காரியமல்ல.

தேவானந்தாவின் உடல் பலமும், மனோபலமுமே உயிரைக்காப்பாற்றியிருக்கிறது. கராட்டி பயிற்சியில் இருந்து ஆயுதப் பயிற்சிவரை பெற்ற உடம்பு. பொலிசாரிடம் அடிவாங்கியும் மரத்துப் போன உடம்பு. டாக்டர்களே தேவானந்தா குணமான வேகம் கண்டு வியப்பு தெரிவித்திருக்கினறனர்.

நான்காவது நாளே நடந்த சம்பவத்தைப் பற்றி கூறுமளவுக்கு தேறிவிட்டார். "தனியாக மாட்டுப் பட்டுப் போனேன். பிஸ்டலை உள்ளே கொண்டு சென்றிருக்கலாம். ஒருவரையாவது கூட்டிப் போயிருக்கலாம்" தன்னைக் காணச் சென்றவர்களிடம் தேவானந்தா கூறியது அதுதான். ■

### மூன்று முறை

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா உயிர் ஆபத்தில் இருந்து மீண்டது இது மூன்றாவது முறை.

1983ல் வெலிக்கடைச் சிறையில் நடைபெற்ற படுகொலையில் தப்பியது முதல் முறை. சிறை அறையை உடைக்க வந்தவர்களை எதிர்த்து தாக்கியதால் தப்பிக்கொண்டார்.

1986ல் படகில் செல்லும்போது ஏற்பட்ட விபத்தில் தப்பினார். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் நீந்திக் கரைசேர்ந்தார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பயிற்சி பெற்றவர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க இராணுவத் தளபதியாக 1986வரை இருந்தவர்.

### கடும் ஆட்டம்

மழையில் ஆட்டம் பாதிக்கப்பட்டாலும் சும்மா ஸ்கோர் கூறுவார்கள் போல் இருக்கிறது. கிரிக்கெட் போட்டியைத்தான் கூறுகிறேன்.

அதேசமயம் கால் பந்தாட்டத்திலும் வெற்றி நிச்சயம் என களமிறங்கிய அணிகள் நினைத்ததை சாதிக்க முடியாமல் போய் விட்டது.

வளம் குறைந்த நாட்டு அணிகள் உத்வேகத்துடன் மோதி தற்காப்பு ஆட்டம் ஆட வேண்டிய நேரத்தில் தற்காப்பு ஆட்டம், தாக்குதல் ஆட்டம் ஆடவேண்டிய நேரத்தில் தாக்குதல் ஆட்டம் ஆடி பலமான அணிகளின் கனவுகளை கலைத்து விட்டன.



*யாழ்குடா நாட்டில்* 'விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் ரெண்டு எழுத்தார் பிரசுரம் வெளியிட்டவை. குட்டிச் சபை பிரதிநிதிகள் விலகவேண்டும் என்பது கோரிக்கை. அதற்கு பதிலாக பிரசுரம் ஒன்று விடப்பட்டுள்ளது. முன்னணிக்காரர் தான் விட்டிருக்கினம் போல கிடக்கு. தமிழீழம் தேவை என்றால் அடையாள அட்டைகளை விசியெறியத் தயாரோ என்று இவை விடுதலை விரும்பிகளை நோக்கி கேள்வி எழுப்பியிருக்கினம். இவை முன்னர் ஈழம் கேட்கும்போது அடையாள அட்டையை எறிந்து விட்டோ போராடினவை?! பதில் கொடுக்க வேறு பொயின்ட்டுகள் இல்லையோ?

***ஜனநாயகக் கட்சித்*** தலைவர் தாக்கப்பட்ட செய்தி அறிந்ததும் மருத்துவமனைக்கு விரைந்த ஏனைய கட்சித் தலைவர் கழக சித்தர்தானாம். விடியும்வரை அங்கேயே நின்றவராம். கட்சி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நட்புகள் இன்னமும் இருக்கத்தான் செய்யிது.

***"உண்மையைச்*** சொன்னால்தான் இந்தக் காலத்தில் பிரச்சனை. அதுவும் தமிழ்க் கட்சிகளில் இருந்து கொண்டு உண்மையைச் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். அந்தளவு மரியாதை." இது ஜனநாயகக் கட்சி பிரமுகர் ஒருவர் கூறிய கருத்து. தமது தலைவர் தாக்கப்பட்டபின்னர் கட்சி சார்பாக விடுத்த அறிக்கையில், 'ஆபத்தான கட்டத்தை தாண்டி விட்டார்' என்று சொன்னதை பத்திரிகைகள் நம்பவில்லையாம். "ஆபத்து என்று கூறினால் அனுதாபம் தேடப் பார்க்கினம் என்பர். ஆபத்தில்லை என்றால் 'ஏதோ பிரச்சனை சமாளிக்கிறாங்களாக்கும்' என்று சந்தேகிப்பர்." என்று ஆதங்கப்பட்டார்.

## அதிரடி அப்பாத்துரை

***கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள்*** போராட்டம் நடத்தும்போது வடக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் அப் போராட்டத்துக்கு மாறான கருத்து வெளியிட்டது சரியாகப்படவில்லை. யார் பக்கம் சரி, பிழை இருந்தாலும் பிரதேச வேறுபாடுகளை தூண்டுவது போல அமைந்து ஒட்டுமொத்தமான ஒற்றுமைக்குமல்லோ குழிபறித்துவிடும். கொஞ்சம் நிதானமாக இருந்திருக்கலாம். அடம்பன்கொடி திரண்டால் மிடுக்கு என்று யார் யாரோ கவலைப்படும்போது, மிகக் கவனமாக இருக்கவேணும்.

***மலையக சந்திரமான*** தலைவருக்கு அவரது முன்னாள் குருவான தொண்டர் வலைவீசிப்போட்டார். இவரும் வசமாக சிக்கிக் கொண்டார். இனி மீட்சியில்லை என்கிறது மலையக முன்னணி வட்டாரம். எப்படியோ தனித்துவ தலைவர் தனக்குப் பின்னர் சவாலாக உருவாகக்கூடிய அமைப்பை உடையச் செய்துபோட்டார். விவேக சிரோன்மணிதான்.

***செம்மணியில்*** குழிகள் இருக்கு என்று கூறியும், உடன் தோண்ட அம்மணியார் ஏன் உத்தரவு போடவில்லை? சூரியகந்தையில் யாரும் கூறாமலேயே தோண்டினவையல்லோ. காலம் போக விடுவது மறைப்புக்கும் வாய்ப்பாகிவிடும். தமிழ்க் கட்சிகள் அறிக்கைவிட்டதோடு சரி. காணாமல் போனோரின் உறவினர்களை திரட்டி செம்மணியில் போராட்டம் நடத்தலாமல்லோ.

***காணாமல் போனோர்*** பற்றிய புகார்களை ஆராய முன்பும் ஒரு விசாரணை யாழில் நடந்தது. இப்போது மறுபடி அதேரக விசாரணை நடக்குது. இது ஏன்? உதைவிட செம்மணியைப்போய் அந்த விசாரணையாளர்கள் கிண்டிப் பார்க்கலாம். அதைவிட்டுபோட்டு காணாமல் போனோரின் உறவினர்களின் சோகத்தை திரும்பத் திரும்ப கிண்டி என்ன புண்ணியம்?

***இங்கு இந்தியா*** தலையிடக்கூடாது என்பதிலே பேரினத்தார் எத்தனை கரிசனமாக இருக்கினம் பார்த்தியளோ? மலையக மாணவர்களுக்கு கல்வி கொடுக்க தமிழக ஆசிரியர்களை கேட்டதைக்கூட சந்தேகக் கண்ணால் அலசுகினம். உலகில் யார் உதவியும் இல்லாமல் தனித்து நிற்கவேணும் என்பதுதான் அவர்களின் திருவுள்ள விருப்பம்.

***யாழ் குடாநாட்டில்*** நிதி வசூல் செய்யும் இயக்கங்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் யாழ் பிரிகேடியர். முன்புதான் ஆயுதம் வாங்க நிதி கேட்டினம். இப்ப தாங்கள் பதவி பிடிக்கவும் எங்களிடமோ நிதி கேட்கிறது? என்று பொதுஜனம் வினாவுகிறதாம்.

***கற்பகத்தில்*** வளர்ச்சி போதாது என்று நான் சொன்னதற்கு விரிவான பட்டியல் ஒன்றுடன் விளக்கமளித்துள்ளார் தலைவர். அப்பட்டியல் மூலம் அறியப்படும் நீதி யாதெனில் , வளர்ச்சி இல்லை எனக் கூறமுடியாது. ஆனால் போதாது!

***நாட்டில் விழிப்பாக*** இருக்கும் ஆட்கள் யாரென்று கேட்டால், உடன் பதில், உதைபந்தாட்ட இரசிகர்கள்! ஜாமம் முழுக்க கண்விழித்து இரசித்து தள்ளுகினம். நித்திரை முழித்து எமக்கும் தொண்டை கட்டிக் கொண்டது. பாவமப்பா இத்தாலி. கிரிக்கெட் இரசிகர்களுக்கு எக்கச்சக்க கவலை. கிரிக்கெட்போட்டி நடக்கிற நாளாகப் பார்த்து, தந்தியடித்து கூப்பிட்ட மாதிரியல்லோ மழை பொழிந்து தள்ளிப்போட்டுது. ஏதோ இறுதி ஆட்டத்துக்கு என்றாலும் இரங்கி விட்டுக் கொடுத்துபோட்டுது.

***சற்றும் மனம் தளராமல்*** ரூபவாஹினி நாடகம் ஒன்றில் தமிழ்க் கொலையை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கினம். இயக்கம், ஒளிப்பதிவு எல்லாம் அருமை. ஆனால் தமிழ்க் கொலையால் குறிப்பிட்ட நாடகத்தை என்ன நோக்கத்துக்காக தயாரித்தார்களோ அந்த நோக்கமே பாழ், பாழ்.

**இவ்வாரப் பொன்மொழி**

**"நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகிறோம். அதையே விதி என்கிறோம்!"** ■



படிப்பகம்

www.padippakam.com

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே போர் மூண்டதை அடுத்து ஆயிரக்கணக்கான அகதிகள் தமிழகம் சென்றனர்.

படையினரின் ஷெல் வீச்சுக்களாலும் விமானத் தாக்குதல்களாலும் வடக்கு கிழக்கில் அகதிகள் எண்ணிக்கை பெருகியது.

கிழக்கில் இருந்து அகதிகள் கொழும்பு நோக்கி சென்றனர். வடக்கில் இருந்து பெரும்பாலான அகதிகள் தமிழ்நாடு நோக்கிச் சென்றனர்.

தமிழகத்தில் அகதிகளை வரவேற்று தங்கவைக்க தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்தது.

அப்போது பிரதமராக இருந்தவர் வி.பி.சிங். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியோடும் நல்ல நெருக்கம்.

மத்திய ஆட்சியில் இருந்த தேசிய முன்னணியில் தி.மு.கவும் ஓர் அங்கம்.

வி.பி.சிங்குடன் தொடர்பு கொண்டு அகதிகளுக்கு உதவும் நடவடிக்கைளுக்கு போதாது" என்றும் கண்டித்திருந்தார்.

இலங்கையில் இருந்து செல்லும் நாடாளுமன்றக் குழுவிடம் நாசூக்காகத் தான் இந்திய அரசியல் தலைவர்கள் பேசியிருப்பர். தங்கள் மனதை திறந்து காட்டியிருக்க மாட்டார்கள். அதன் பெயர்தான் இராஜதந்திரம்.

**மறுப்பு**

இந்திரா காங்கிரஸ் கட்சி மட்டுமே தமிழ் நாட்டில் புலிகளின் நடமாட்டம் பற்றி தமிழகச் சட்ட சபையில் பிரச்சனை கிளப்பியது.

'துக்ளக்' பத்திரிகையும் தி.மு.க. அரசு புலிகளுக்கு சலுகை காட்டுவதாக பலத்த கண்டனங்களை எழுப்பத் தொடங்கியது.

"தமிழ் நாட்டில் புலிகளின் பயிற்சி முகாம்கள் எதுவும் இல்லை" என்று சட்ட சபையில் கூறினார் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி.

சென்னையில் நடத்திய பத்திரிகையாளர்கள் மாநாட்டில்: "வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு ராஜீவ் காந்தி கூறியபடி அதிகாரம் எதுவும் கிடைக்கவில்லை" என்று கூறிய கருணாநிதி, "வடக்கு-கிழக்கு மாகாண சபை முதல்வராக இருந்த வரதராஜப் பெருமாளும் அதனைப் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்" என்றும் குறிப்பிட்டார்.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

189

தனர். லக்ஷ்மனிடம் இருந்து பெறப்பட்ட உப இயந்திரத் துப்பாக்கி மட்டுமே சொந்தப் பாதுகாப்புக்கு இருந்தது.

கொழும்பில் ஈ.பி.டி.பி.யினர் சந்தித்த முதலாவது அரசாங்க முக்கியஸ்தர் ரஞ்சன் விஜயரத்ன.

டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ், சந்திரகுமார், சிவதாசன் ஆகியோர் அவரைச் சந்தித்தனர்.

'விடுதலைப் புலிகள் பங்கர்கள் வெட்டி யுத்தத்துக்கு தயாராகிறார்கள். ஆனால் ஜனாதிபதி புலிகளுடன் போரை விரும்பவில்லை. போரைப் புலிகள் தொடங்கினால் நாங்கள் அடி கொடுப்போம்' என்று ரஞ்சன் ஈ.பி.டி.பி.யினரிடம் கூறினார்.

ரஞ்சனை சந்தித்ததை அடுத்து கொலன்னாவையில் ஈ.பி.டி.பி. முக்கிய உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஈ.பி.டி.பி எவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொள்வது? என்பதைப் பற்றி ஆராய்வதற்காக நடத்தப்பட்ட கூட்டம் அது.

டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் ரமேஷ், சந்திரகுமார், தங்கவேல், திலக், ஆனந்தன், அன்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏனைய முக்கிய உறுப்பினர்களான வடிவேலு (ராஜு), ராசமாணிக்கம், மதன் ஆகியோர் தமிழ்நாட்டில் இருந்தனர்.

"கட்சிக்கு முதலில் ஓர் அடித்தளம் போட வேண்டும். எம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகளை தொடர முடியும். அதற்கு குறைந்தது ஒரு வருடமாகும். ஒருபுறம் புலிகள், இன்னொருபுறம் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். போன்ற அமைப்புக்கள் எமது வளர்ச்சியை தடுக்க முனையும்.

இந்நிலையில் எம்மை பலப்படுத்திக் கொள்ள அரசுடன் உறவு வைப்பது தவறல்ல.

விடுதலைப் புலிகளும்கூட அரசுடன் தந்திரோபாய உறவுகொண்டனர். அதன் ஊடாக தமது பலவீனங்களை களைய முனைந்தனர்.

நாம் எமது கொள்கையில் உறுதியாக இருந்தால் யாருடன் வேண்டுமானாலும் உறவு வைத்துக் கொள்ளலாம்" என்று டக்ளஸ் தேவானந்தா விளக்கமளித்தார்.

இக் கருத்துக்கு கடும் அதிருப்தி ஏற்பட்டது. திலக், சந்திரகுமார், ஆனந்தன், அன்வர், தங்கவேல் ஆகியோர் அரசுடன் இணைந்து நிற்பதை விரும்பவில்லை.

கூட்டத்தில் கலந்து கொண்டோரில் டக்ளஸ் தேவானந்தாவும் ரமேசும் மட்டுமே ஒத்த கருத்துக் கொண்டிருந்தனர்.

**அரசுடன் சேரலாமா?**

இந்தியப் படைக்கு எதிரான உண்ணா விரதத்தில் பலியான திலீபனுக்கு அனுதாபம் தெரிவித்து சென்னையில் அறிக்கை கொடுத்த போதுதான், யாழ்ப்பாணத்தில் இப்ராகீம் (சிவகாந்தன்), பிறேமன் (பிறேமானந்தா), ராகவன் ஆகியோரை புலிகள் கொன்றனர். எனவே புலிகள் உள்ளவரை நாம் எமது மண்ணுக்கு செல்ல முடியாது. அதனால் புலிகளை எதிர்க்கவும் அரசுடன் இணைந்து நிற்க வேண்டும்." என்று ரமேஷ் கூறினார்.

"புலிகளை எதிர்த்து செயற்பட நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் அதற்காக இந்த அரசுடன் நின்று அதனைச் செய்யக் கூடாது. எங்களை பயன்படுத்திவிட்டு கைவிட்டுவிடுவார்கள்.

புலிகளுக்கும் எங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை பயன்படுத்தி ஒட்டுமொத்தமான நலன்களுக்கும் குழி பறித்தால் என்ன செய்வது? பிரேமதாசாவை நம்பிக் காலை விடலாமா? என்பது சந்திரகுமாரின் கேள்வி.

ஆயுதம் தூக்கவேண்டியதில்லை. மக்களுக்குள் இரகசியமாக வேலை செய்வோம். அரசின் உதவி தேவைப்படாது என்றும் கருத்துக் கூறப்பட்டது.

கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் காரசாரமான விவாதம் நடந்தது.

"அரசுடன் உறவு வைப்பது தவிர வேறு வழியில்லை. நடைமுறைச் சாத்தியமான வழி அது மட்டும்தான். சொந்தக் காலில் நிற்க தொடங்கிய பின்னர் அரசுடன் உள்ள உறவை கைவிட்டு செயற்படலாம் என்று முடிந்த முடிவாகக் கூறினார் தேவானந்தா. ரமேஷ் மட்டுமே அதனை ஆதரித்து, ஒரு வருடம் பொறுமையாக இருக்குமாறும் கட்சியை பலப்படுத்தி விடலாம், பின்னர் நல்ல முடிவு எடுக்கலாம் என்றும் கூறினார்.

ஆனாலும் ஏனையோரால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டோர் மட்டுமல்ல, அந்த முடிவை அறிந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பலரும் அதிர்ச்சியடைந்தனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டோரில் திலக், ஆனந்தன், அன்வர் ஆகியோர் கட்சியை விட்டு ஒதுங்கிச் செல்லப் போவதாக அறிவித்தனர். தங்கவேல் அப்போது டக்ளஸ் தேவானந்தாவின் மெய்க்காப்பாளர்களுக்கு பொறுப்பாக இருந்தார்.

சிறந்த தோழர் ஒருவரை தனது இடத்திற்கு நியமித்துவிட்டு தான் ஒதுங்கிச் செல்ல அனுமதிக்குமாறு கோரினார்.

டக்ளஸ் தேவானந்தாவின் மெய்க்காப்பாளர்களாக இருந்த சிலரும் ஒதுங்கும் முடிவை மேற்கொண்டனர்.

## ஈ.பி.டி.பி.யின் கொழும்புத் தளம்


யுத்தம் தொடங்கியபின் இலங்கை இராணுவம்

...அனுமதி பெற்றது தமிழக அரசு.

புலிகளும் அப்போது தமிழ் நாட்டில் தாராளமாக நடமாடத் தொடங்கிவிட்டனர்.

**ராஜீவ் குற்றச்சாட்டு**

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் தலைவருமான ராஜீவ் காந்தி தி.மு.க. அரசுமீது குற்றம் சாட்டினார்.

'புலிகளுக்கும், தி.மு.க.அரசுக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்கிறது. தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.' என்று ராஜீவ் குற்றம் சாட்டியதாக ஜூலை 23, 1990 அன்று அகில இந்திய வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்திலேயே மேற்படி குற்றச்சாட்டை ராஜீவ் காந்தி சுமத்தியிருந்தார்.

இதற்கிடையே இலங்கையில் இருந்து இந்தியா சென்ற நாடாளுமன்றத் தூதுக்குழு ராஜீவ் காந்தியைச் சந்தித்தது.

இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் சபாநாயகர் தலைமையில் பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்றை அவர்கள் நடத்தியிருந்தனர்.

தூதுக்குழுவில் அன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்காவும் சென்றிருந்தார்.

இந்தியப் படைக்கு எதிராக புலிகள் போரிட்டபோது, அவர்களைக் காட்டுக்குள் சென்று சந்தித்தவர்களில் ஒருவர் அநுரா பண்டாரநாயக்கா.

இந்திய படையை வெளியேற்றுவது, இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பது இரண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உடன்பாடானதே என்றும் கூறியவர் அநுரா.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கொழும்பு வந்த ராஜீவ்காந்தியின் வருகையை புறக்கணித்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சி. ராஜீவுக்கு அநுரா காட்டமான கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார்.

அதே அநுரா பின்னர் ராஜீவைச் சந்தித்தார். அச் சந்திப்பு பற்றி பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் கூறியதாவது:

"புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருக்கிறேன். என்று ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

இந்தியாவில் உள்ள சீக்கிய தீவிரவாதிகளுக்கும் புலிகள் ஆயுதங்கள் வழங்குவதாக ராஜீவ் காந்தி கூறினார்." எனத் தெரிவித்தார் அநுரா.

அப்போது சபாநாயகராக இருந்தவர் எம்.எச்.முகமட். "எமது தூதுக்குழு இந்தியாவில் சந்தித்துப் பேசிய தலைவர்கள் எவரும் புலிகளுக்கு அனுதாபமுள்ளவர்களாக இருக்கவில்லை." என்று முகமட் கூறினார்.

உண்மையில் அக் கட்டத்தில் மத்திய ஆட்சியில் இருந்த தேசிய முன்னணியில் இருந்து, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த தி.மு.க. வரை புலிகளுக்கு சார்பான நிலையிலேயே இருந்தன.

தமிழகத்தில் எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா "புலிகளுக்கு தி.மு.க. அரசு செய்யும் உதவி...

ஈ.பி.டி.பி.க்குள் இத்தனை கடுமையான கருத்து முரண்பாடுகள் இருந்தும் வெளியே எதுவும் தெரியவில்லை. அதற்கு காரணம் ஈ.பி.டி.பி.யில் முக்கியமான அனைவரும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த நெருக்கமான தோழமை.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்., பின்னர் ஈ.பி.டி.பி என்று சிறு வயதில் இருந்து ஒன்றாக இருந்தே வளர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கிடையே ஏற்பட்ட கொள்கை முரண்பாடு பகைமையாக மாறவில்லை. வெளியே தெரியவும் இல்லை.

ஈ.பி.டி.பியில் இருந்து அன்று ஒதுங்கிச் சென்ற முக்கியமான உறுப்பினர்கள் வேறு எந்த இயக்கத்திலும் சேரவும் இல்லை.

கொள்கை முரண்பாடு காரணமாக விலகிச் சென்ற முக்கிய உறுப்பினர்களான திலக், ஆனந்தன் உட்பட பலர் தற்போது சுவிற்ஸர் லாந்தில் உள்ளனர். சமீபத்தில் சுவிற்ஸர்லாந்து சென்றபோது அவர்களுடனேயே தங்கியிருந்தார் தேவானந்தா.

அரசுடன் உறவு வைப்பது என்ற முடிவை தாம் ஏற்காத நிலையிலும் அசோக், தங்கவேல், போன்றோரும் வேறு பல உறுப்பினர்களும் தேவானந்தா கேட்டுக் கொண்டதற்காக தொடர்ந்து கட்சி வேலைகளில் பங்கெடுத்தனர்.

**கருத்து முரண்பாடு**

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சு முறியும் தருவாயிலேயே ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் நடராஜா ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

## மத்தியஸ்தம் செய்ய முன்வந்த ராஜீவ் காந்தி



அதற்கு முன்னர் அசோக் சந்திரகுமார், திலக், ஆனந்தன் போன்ற முக்கிய உறுப்பினர்கள் கொழும்பிலும், திருமலையிலும் தங்கி நின்று ஈ.பி.டி.பி. வேலைகளை மேற்கொண்டனர்.

கொழும்பில் புலிகள் இயக்கத்தினர் நடமாடிய நேரம் அது. அரசாங்கம் உடனடியாக பாதுகாப்பு கொடுக்க முன்வரவில்லை.

அதனால் ஈ.பி.டி.பி.யினர் சொந்த முயற்சியிலேயே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

சிறீலங்கா மக்கள் கட்சிக்கு அப்போது ஒ.சி. அபயகுணசேகர தலைவராக இருந்தார். அக் கட்சியின் முக்கிய பிரமுகராகவும், மாகாண சபை உறுப்பினராகவும் இருந்தவர் லக்ஷமன் பிரேமச்சந்திரா.

மாகாணசபை உறுப்பினர் என்பதால் லக்ஷமனுக்கு அப்போது இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஜே.வி.பி. அச்சுறுத்தல் காரணமாக வழங்கப்பட்ட பாதுகாப்பு தொடர்ந்து இருந்தது.

டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ், சிவதாசன், தங்கவேல் ஆகியோர் உட்பட தமிழ் நாட்டில் இருந்து வந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் கொலன்னாவவில் இருந்த லக்ஷ்மன் வீட்டின் ஒரு பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

நான்கு பேர் மட்டுமே தங்கக்கூடிய அப்பகுதியில் பத்துப்பேர் வரை தங்கியிருந்...

அரசுடன் உறவுகொண்ட பின்னர் கொழும்பில் ஈ.பி.டி.பியின் முதலாவது தலைமைச் செயலகம் கொழும்பு திம்பிரிக்கஸியாயவில் திறக்கப்பட்டது. ரமேஷ் அதன் பொறுப்பாளராக இருந்தார்.

**அகதி முகாம்கள்**

கொழும்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், மாணிக்கப் பிள்ளையார் கோவில், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபம் ஆகியவற்றில் வடக்கு-கிழக்கு அகதிகளுக்கான முகாம்கள் உருவாக்கப்பட்டன.

இந்த மண்டபங்கள் சிலவற்றின் நிர்வாகங்கள் அகதிகள் அங்கு தங்கியிருப்பதை விரும்பவில்லை.

ரஞ்சன் விஜயரத்னாவுடன் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டதை அடுத்து அகதி முகாம்கள் அங்கு தொடர்ந்து இயங்க வழிவகை செய்யப்பட்டது. நிவாரணம் தொடர்ந்து வழங்கவும் ரஞ்சன் விஜயரத்தினா உத்தரவு பிறப்பித்தார்.

கொழும்பில் உள்ள அகதி முகாம்களின் நிர்வாகப் பொறுப்பை தம்மிடம் தருமாறு ஈ.பி.டி.பி. கோரியது.

அரசுக்கு ஆதரவான ஏனைய கட்சிகளுக்கு அதனால் கசப்பு ஏற்படும் என்று அரசு தயங்கியது.

அகதி முகாம்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனைகளை புனர்வாழ்வு அமைச்சு உத்தியோகத்தர்களால் தீர்க்க முடியவில்லை. பொலி சாரை உதவிக்கு அழைத்தனர். அகதி முகாமுக்குள் பொலிசார் பிரவேசிப்பது பற்றி அகதிகள் அச்சம் தெரிவித்தனர்.

அதனையடுத்து கொழும்பு அகதி முகாம்களின் பொறுப்பு ஈ.பி.டி.பி.யிடம் ஒப்படைக்கப்பட்டது. கிட்டத்தட்ட மூவாயிரம் அகதிகள் இருந்தனர்.

ஈ.பி.டி.பி.யினர் குறைந்தது மூன்று நாட்களுக்கு ஒரு தடவை ரஞ்சனை சந்தித்தனர். டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ், சிவதாசன் ஆகியோரே அச்சந்திப்புக்களில் கலந்து கொண்டனர். ஈ.பி.டி.பிக்கும் பிரேமதாசா அரசுக்கும் இடையே நட்புறவு ஏனைய தமிழ்க் கட்சிகளைவிட மேலோங்கியது.

இக்காலகட்டத்தில் புலிகளின் அணி ஒன்று பத்மநாபாவை தீர்த்துக்கட்ட சென்னையில் தயாரானது.

அதனை அடுத்தவாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# அன்றாடப் பிரச்சனைகள் கடல்

# தமிழ்க் கட்சிகள் அதில் வாழும் மீன்கள்

**கொ**ழும்பில் சார்க் மாநாட்டை முன்னிட்டு மறுபடி கைது நடவடிக்கைகளும், தேடுதல்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகள் பத்திரிகைகளில் பெரிதாக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டால் மாத்திரமே தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு அறிக்கை வெளியிடுவதை காணமுடியும்.

திட்டமிட்டபடி பாதுகாப்பு தரப்பினர் தேடுதல், கைதுகளை மேற்கொண்டு முடித்துக் கொள்ளும் கடைசிக் கட்டத்தில் தமிழ்க் கட்சியினர் அறிக்கைகள் வெளியிடுவர். ஜனாதிபதிக்கு வேண்டுகோள்கள் விடுப்பர்.

அக்கட்சிகளின் அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளியாகும் போது, பாதுகாப்பு தரப்பினர் தமது திட்டப்படியான நடவடிக்கைகளை முடித்து கைதுகள் ஒய்ந்துவிடும்.

தாம் அறிக்கைகள் விட்டதாலும், ஜனாதிபதியிடம் கோரியதாலுமே கைதுகள் ஒய்ந்ததாக தமிழ்க் கட்சிகள் கூறிக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான போலித்தனமான அரசியல் சாகசங்களையே தமிழ்க் கட்சிகள் இன்று நம்பியிருக்கின்றன.

மூக்கிருக்கும்வரை சளி இருப்பது போன்று, யுத்தம் இருக்கும் வரை கைதுகள், தேடுதல்கள் போன்றவை தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

எனவே, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், யுத்தத்துக்கு காரணமான இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றை உடனே காணுமாறு உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களை ஏற்படுத்துவதே தமிழ் பேசும் தரப்பின் பிரதானமான குறிக்கோளாக இருக்க வேண்டும்.

அத்தகைய பிரதானமான குறிக்கோளுக்கு உட்பட்டதாகவும், அந்த பிரதானமான குறிக்கோளை வலுப்படுத்தி கொள்ளத் தக்கவகையிலும் அன்றாட பிரச்சனைகள் தொடர்பான அணுகுமுறைகளும் அமைந்திருக்க வேண்டும்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு அரசாங்கம் நிவாரண உதவிகளை குறைப்பதற்கு முடிவு செய்தபோது தமிழ்க் கட்சிகள் நான்கு ஒருங்கிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தன.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் வெளிநாட்டு தூதர்களைச் சந்தித்து நிவாரணக் குறைப்பைப் பற்றி முறையிட்டிருந்தார்.

இலங்கை அரசுக்கு மகஜர்கள் அனுப்பிவிட்டு இருக்காமல் ஆர்ப்பாட்டம் நடத்த முன்வந்தமையும், வெளிநாட்டு தூதுவர்களது கவனத்திற்கு கொண்டு சென்றமையும் ஒருபடி முன்னேற்றமான நடவடிக்கைகளே.

எனினும், நிவாரணக் குறைப்பு என்பதை அரசின் இராணுவத்தீர்வு முனைப்பிற்கு உட்பட்ட ஒரு விடயமாக வெளிப்படுத்த இக்கட்சிகள் அனைத்துமே தவறியுள்ளன.

அரசியல் தீர்வை முன்வைக்காமல் இழுத்தடித்து, இராணுவத்தீர்வு ஒன்றின் மூலமாக தமிழ் பேசும் தரப்பின் மீது அரைகுறைத் தீர்வொன்றை சுமத்தும் இலக்குடன் அரசு எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் தமிழ் பேசும் மக்களிடையே அன்றாட அவலங்களை உருவாக்கி வருகிறது.

யுத்தச் செலவீனங்களை ஈடுகட்ட முடியாத நிலையில் யுத்தச் சுமையையும் தமிழ் பேசும் மக்களின் முதுகுகளிலேயே திணிக்கும் நடவடிக்கைகளுக்கும் அரசு துணிந்திருக்கிறது.

தமிழ் பேசும் தரப்புக்கு எதிரான தனது அரசியல், இராணுவ நகர்வுகளின் வெற்றிக்கான சுமைகளை தமிழ் பேசும் மக்களிடமே திணிக்கும் ஆட்சியாளரின் செயற்பாட்டை சர்வதேச சமூகம் முன்னால் திட்டவட்டமாக அம்பலப்படுத்த தமிழ்க் கட்சிகள் முன்வரவில்லை.

தமிழ் பேசும் மக்களை விடுவிப்பது என்று கூறிக்கொண்டு, யுத்தம் மூலம் அரசு கைப்பற்றிய பகுதிகளில் முன்பிருந்ததைவிட அச்சுறுத்தலான, நிம்மதியில்லாத சூழல் உருவாகிவருவதுடன், அப்பகுதிகளை கைப்பற்றும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, தொழில் இழந்து தவிக்கும் மக்களுக்கான நிவாரணத்திலும் அரசு கைவைக்க முன்வந்திருந்தது.

நிவாரண குறைப்புக்கான உத்தரவு ஜனாதிபதியின் சம்மதம் இல்லாமல் வெளியிடப்பட்டிருக்காது. அவ்வாறு இருந்தும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது அரசுமீதோ, ஜனாதிபதிமீதோ நேரடியாக குறைகாணும் விதமான கோஷங்களும், சுலோகங்களும் தவிர்க்கப்பட்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வன்னியில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சு மற்றும் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பிரச்சனை போன்றவற்றை உள்ளடக்கி யாழ்ப்பாணத்தில் தமிழ் கட்சிகள் உண்ணாவிரதம் ஒன்றை நடத்தியிருந்தன.

அந்த உண்ணாவிரதத்திலும் மேற்கண்ட சம்பவங்களின் பொறுப்பாளிகளை நேரடியாக குறிப்பிடுவதை தமிழ்க் கட்சிகள் தவிர்த்திருந்தன.

ஆட்சியாளரினதும், படையினரதும் மனம் கோணாத வகையிலும், 'அரசியல் சாகசமே தவிர, ஆட்சிக்கு எதிரான உணர்வுகள் அல்ல' என்று ஆளும் தரப்பினருக்கு தனியாக நியாயம் கூறத்தக்கதாகவுமே தமிழ்க் கட்சிகளின் போராட்டங்கள் அமைந்துள்ளன.

மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்காக, அரசியல் ஜனநாயக இலட்சியங்களுக்காக போராட தயாரில்லாதபோது, மக்களுக்கு போராடக் கற்றுக்கொடுக்க அரசியல் கட்சிகள் சில உத்திகளைக் கையாள்வது உண்டு.

மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் போராட்டங்களில் இருந்து ஆரம்பித்து, படிப்படியாக பொதுவான குறிக்கோளுக்காக போராடும் அவசியத்தை மக்களுக்கு புரியவைப்பது அந்த உத்திகளில் ஒன்றாகும்.

பொதுக் குறிக்கோளை எட்டாமல் அன்றாடப் பிரச்சனைகளை முழுமையாக தீர்க்க முடியாது என்ற உண்மையை மக்களுக்கு போதிப்பதும், புரிய வைப்பதுமே மக்களை முன்னோக்கி வழிநடத்திச் செல்லும் தலைமைத்துவத்தின் தலையாய பணியாகும்.

உதாரணமாக, தனிச்சிங்கள சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள், சிங்கள சிறீ எழுத்து அழிப்புப் போராட்டங்கள், தரப்படுத்தலுக்கு எதிரான போராட்டங்கள் புதிய அரசியலமைப்புக்கு எதிரான போராட்டங்கள் போன்றவற்றின் பின்னரே இனியும் இணைந்து வாழ முடியாது என்ற முடிவுக்கும், தமிழீழக் கோரிக்கைக்கு மகத்தான ஆதரவளிக்கும் நிலைக்கும் தமிழ் மக்கள் வந்திருந்தனர்.

ஒவ்வொரு பிரச்சனைக்கும் எதிராக தனியாகப் போராடுவதால் பயனில்லை. ஆட்சியாளர்கள் அவற்றை தீர்த்துவைக்கப் போவதும் இல்லை. இன ஒடுக்குமுறையின் ஒவ்வொரு வடிவங்களையும் தனித்தனியாக எதிர்த்து போராடுவதைவிட ஒட்டு மொத்தமாக எதிர்த்து போராடுவதே வழி என்பதையும், அந்த ஒட்டு மொத்தமான எதிர்ப்பின் வடிவமே ஈழப்போராட்டம் என்றும் மக்கள் புரிந்து கொண்டனர்.

அதன் காரணமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 1977ல் வாக்களித்து தங்கள் திட்டவட்டமான முடிவினை தமிழ் பேசும் மக்கள் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

எனவே, அன்றாடப் பிரச்சனைகளின் பெயரால் நடத்தப்படும் போராட்டங்கள் அனைத்தும் வெற்றிபெறும் என்று அர்த்தமல்ல.

தாம் போராடியும் பிரச்சனை தீர்க்கப்படாதபோது, இப்பிரச்சனைகளுக்கு எல்லாம் அடிப்படை காரணமான பொதுப் பிரச்சனையை தீர்க்க போராடுவதே ஒரே வழி என்பதை மக்கள் தமது அனுபவம் மூலமாக உணர்ந்து கொள்வதற்கு அப் போராட்டங்கள் வழிவகுப்பதாக அமையும்.




எனவே, அன்றாடப் பிரச்சனைகளையும் அவற்றை முன்வைத்து போராட்டங்கள் நடத்துவதையும் அலட்சியம் செய்துவிடலாகாது.

அதேசமயத்தில் அன்றாடப் பிரச்சனைகள் என்பவை அடிப்படை பிரச்சனைகளைவிட முக்கியமானவை என்னும் மனோநிலை மக்களிடம் ஏற்படவும் இடமளிக்கக் கூடாது.

ஆனால் தமிழ்க் கட்சிகளின் இன்றைய அரசியல் சாகசங்கள் மேற்கண்ட அணுகுமுறைக்கு முற்றிலும் மாறாகவே அமைந்து வருகின்றன.

இன்று தமிழ் பேசும் மக்கள் பல்வேறு அன்றாடப் பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர். அவற்றுக்கான காரணம் அரசின் யுத்த முனைப்பும், இன ஒடுக்குமுறை முனைப்புமே என்பதையும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் நன்கு அறிந்தே உள்ளனர்.

எனவே, அன்றாடப் பிரச்சனைகளை முன்வைத்து மட்டுமே போராட்டங்கள் நடத்த வேண்டும் என்று அவசியமில்லை. அடிப்படையான அரசியல் கோரிக்கைகளையும், அதனோடு இணைந்ததாக அன்றாடப் பிரச்சனை பற்றிய கோரிக்கைகளையும் முன்வைத்து போராட்டம் நடத்தக்கூடிய காலகட்டமே இதுவாகும்.

"அரசே! இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வைக்காண மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அழை! காலத்தை இழுத்தடித்து எங்களை வெற்றிகொள்ள எங்கள் வயிற்றிலேயே அடிக்காதே!" என்பன போன்ற அடிப்படை பிரச்சனையுடன் அன்றாடப் பிரச்சனையையும் இணைத்த கோஷங்களையே தமிழ்க் கட்சிகள் முன்வைத்திருக்க வேண்டும்.

அன்றாடப் பிரச்சனைகளை தனித்தனி பிரச்சனைகளாக சித்தரிப்பதும், அவற்றுக்காக குரல் கொடுப்பது மூலம் எதிர்காலத் தேர்தலுக்கான விளம்பரம் தேடிக்கொள்வதாகவுமே தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறைகள் அமைந்துள்ளன.

நிவாரண குறைப்பை அரசு நிறுத்துமானால், அதற்கு யார் காரணம் என்று பெயர் சம்பாதிப்பதிலேயே தமிழ்க் கட்சிகளுக்கிடையே போட்டி தோன்றும்.

போராட்டம் இன்றி எதுவும் பெறப்படமாட்டாது என்ற நம்பிக்கையை போதிக்கும் ஓர் அனுபவமாக அதனை பயன்படுத்த இக் கட்சிகள் முயலமாட்டா.

அன்றாடப் பிரச்சனைகளுக்கான போராட்டங்கள் தோல்வியடைந்தால் அவற்றை அடிப்படைப் பிரச்சனைக்கான பொதுப் போராட்டத்தின் அவசியத்தை உணர்த்தும் சாதகமாக மாற்றவேண்டும். அன்றாடப் பிரச்சனைக்கான போராட்டங்கள் சில வெற்றி பெறும்போது அதனை போராட்டம்மீதான நம்பிக்கையை ஊட்டும் விதமாக பயன்படுத்த வேண்டும்.

ஆனால் தமிழ் கட்சிகள் அன்றாடப் பிரச்சனைகளை தாம் வெற்றிகரமாக தீர்த்துவிட்டதாக பத்திரிகை அறிக்கைகள் ஊடாக மக்களை நம்பவைப்பதிலேயே ஈடுபட்டு வருகின்றன.

ஆட்சியில் உள்ளோருடன் பேச்சு நடத்திவிட்டு, வந்து 'பிரச்சனைகள் பல தீர்ந்தன' என்று தமிழ்க் கட்சிகள் பத்திரிகைகளுக்கு பலமுறை பட்டியல்கள் கொடுத்துள்ளன. இன்றுவரை அவற்றில் ஒன்றுகூட தீர்க்கப்படவில்லை. மக்களின் மறதிமீது நம்பிக்கை வைத்து அன்றாடப் பிரச்சனைகளை சொல்லி தமிழ்க் கட்சிகள் விளம்பரம் தேடிக்கொள்வதையே அவதானிக்க முடிகிறது.

எனவே, இக் கட்சிகளின் நோக்கம் அடிப்படை பிரச்சனைக்கு தீர்வு காண்பதல்ல. தாங்கள் ஒரு காலத்தில் போராடியதாக கூறும் அரசியல் கோரிக்கைகளுக்காக போராடுவதும் அல்ல. அதற்கான பலமோ, ஆற்றலோ, அரசியல் துணிச்சலோ இக் கட்சிகளிடம் கிடையாது.

அரசையும் விரோதிக்காமல், படையினரையும் முகம் சுளிக்க வைக்காமல், மக்களிடமும் நல்ல பெயர் எடுத்துக்கொண்டு அடுத்த தேர்தலில் சில ஆசனங்களை கைப்பற்றுவதற்கான சூத்திரம்தான் இக்கட்சிகளது அன்றாடப் பிரச்சனைகள் பற்றிய அக்கறைகளாகும்.

இடம்பெயர்வுகள், கைதுகள், நிவாரணக் குறைப்புக்கள், மறுப்புக்கள் போன்றவை மேலும் பெருகுவதையே இக்கட்சிகள் விரும்புகின்றனவோ? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் குளிர்காய்ந்தபடி, அரசும் புலிகளும் தீர்மானிக்கும் புறச் சூழலுக்குள் தங்கள் இருப்பை தக்கவைத்தபடி தர்ம நியாயம் ஜனநாயக உபதேசம் போன்றவற்றில் இக்கட்சிகள் ஈடுபட்டுவருகின்றன.

எனவே, அன்றாடப் பிரச்சனைகளுக்கு எதிரான தமிழ்க் கட்சிகளின் அக்கறைகள் அடிப்படை பிரச்சனையில் இருந்து மக்களை திசை திருப்புவதாகவும் மாறும் தன்மை கொண்டவையே.

அதனால் ஆட்சியாளருக்கும் ஒருவிதத்தில் சாதகமானவையாக திகழ்கின்றன.

தமிழ் பேசும் மக்கள் நியாயமான அரசியல் தீர்வைக் கோருவதையே ஆட்சியாளர்களும் பேரினவாத சக்திகளும் வெறுப்புடன் நோக்குகின்றன.

நிவாரணங்கள், வேலை வாய்ப்புக்கள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற கோரிக்கைகளை முன்வைப்பதோடு மட்டும் தமிழ் பேசும் தரப்பு நின்றுகொள்ள வேண்டும் என்பதைத்தான் அவர்களும் விரும்புகின்றனர். அவ்வாறான கோரிக்கைகளுக்குக்கூட யானைப் பசிக்கு சோளப்பொரி போன்ற பரிகாரங்களையே ஆட்சியாளர்களால் செய்யக்கூடியதாகவிருக்கும்.

புண்களை ஏற்படுத்தினால் புற்றுநோயை மறந்துவிட்டு புண்ணுக்கு மருந்து தேடி அலைவது போன்றதே, அன்றாட அவலங்களை ஆட்சியாளர் உருவாக்கும்போது, அடிப்படை பிரச்சனைகளை பின்னுக்கு தள்ளும் விதமான தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுகளாகும்.

சகல பாதைகளும் ரோமாபுரிக்கே என்பதுபோல, தமிழ் பேசும் தரப்பின் சகல செயற்பாடுகளும் விரைவான நிரந்தரமான அரசியல் தீர்வை நோக்கியதாகவும், ஆட்சியாளருக்கு அதற்கான நெருக்கடியைக் கொடுப்பதாகவுமே அமையவேண்டும்.

அதற்கு மாறான நிலைப்பாடுகள் இதுவரை காலமும் தமிழ் பேசும் மக்கள் இழந்த பல்லாயிரம் மனித உயிர்கள், சொத்துக்கள், சுமந்த துன்பங்கள் போன்றவற்றுக்கான பயனை விரயமாக்குவதுடன், பேரினவாதம் வெற்றி பெறுவதற்கான காலத்தை கனியவைப்பதாகவுமே அமையும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

# விளம்பர மோகத்தின் உச்சகட்டம்

**வி**ளம்பர மோகம் மிகப் பொல்லாதது. ஆசை வெட்கமறியாது என்பார்களே. விளம்பர மோகமும் அப்படித்தான்.

களுத்துறைச் சிறையில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டார்.

தாக்குதல் ஆரம்பமானபோது தேவானந்தாவுக்கு அருகில் நின்றவர் மகேஸ்வரி வேலாயுதம்.

ஈ.பி.டி.பியால் நற்பயன் நிறையப் பெற்றவர். குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா இவருக்கு இரங்கி பொருளாதார உதவிகள் செய்து மனித கௌரவத்திற்கான அமைப்பை ஆரம்பிக்க உதவினார்.

ஈ.பி.டி.பி உதவியால் கனடா தொண்டர் நிறுவனம் ஒன்றிடம் இருந்து மட்டும் 35 இலட்சம் ரூபாய்கள் இவருக்கு கிடைத்ததாகவும் தகவல்.

இத்தனை பயன் பெற்றும் டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதலை தனது விளம்பர மோகத்துக்காக அம்மணி பயன்படுதியதுதான் சோகம்.

டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட போது, தன்னை சிறைக்கைதிகள் காப்பாற்றினார்கள் என்று பத்திரிகை ஒன்றுக்கு கூறியுள்ளார். தேவானந்தாதான் கெட்டவர். இவர் நல்லவர். தாக்குதல் நடத்தியவர்கள் தரம்புரிந்துதான் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றுதான் அம்மணியார் சொன்னதன் அர்த்தம்.

டக்ளஸ் தேவானந்தாவை அபாயக் கட்டத்தில் ஆம்புலன்ஸ் வண்டியில் இருந்து இறக்கி மருத்துவமனையில் அனுமதித்துக் கொண்டிருக்கையிலேயே, மகேஸ்வரி தன் செல்‌போனில் பத்திரிகைகளுக்கு தகவல் அளந்து கொண்டிருந்தது அற்புதமான காட்சி.

முதலில் தன்னைக் கீழே தள்ளி வீழ்த்தியதாகக் கூறினார். பின்னர் தன்னையும் குத்த வந்ததாகக் கூறினார். அதன் பின்னர் தன்னை கெட்ட வார்த்தைகளால் கேளாத கேள்விகள் கேட்டதாகவும் கூறினார். மறுநாள் பத்திரிகை ஒன்றுக்கு முற்றிலும் மாறாக அளந்தார். தன்னை கைதிகளே காப்பாற்றிவிட்டனர் என்கிறார்.

இதனால் கோபமடைந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இவரை தேடித்திரிய நான்கு நாட்கள் தலைமறைவாக இருந்தாராம். அப்படி இருந்தும் பத்திரிகைகளுக்கு செல்‌போன் ஊடாக பேட்டி கொடுக்க தவறவில்லையாம்.

இவரது செல்‌போன் மாதக் கட்டணம் மட்டும் கிட்டத்தட்ட 20 ஆயிரம் ரூபாய்களாம். மூச்சு விட்டாலும் பத்திரிகைகளுக்கு செய்தியாகக் கொடுத்து பிரசங்கம் செய்வதால்தான் கட்டணம் கட்டுப்பாடின்றி ஏறுகிறதாம்.

சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட உதவியதாக அடிக்கடி பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பார். அதன் பின்னணியும் சுவாரசியம்.

பாதுகாப்பு அமைச்சு தாமாக முன்வந்து பிணையில் விடும் கைதிகள் பலர் பிணைப் பணம் இன்றி வெளியே வர முடியாமல் இருப்பர். அவர்களுக்கு பிணைப் பணம் செலுத்தி வெளியே எடுப்பதுதான் வேலை. வாதாடி விடுதலை செய்யும் வேலையல்ல.

கொழும்பில் உள்ள வேறு சில மனித உரிமை நிறுவனங்களும் அவ்வாறு பிணைப் பணம் கட்டி கைதிகளை எடுப்ப துண்டு. விளம் பரம் செய்வதில்லை.

பிணைப் பணத்துகான கணக்கை தங்களுக்கு மாதாந்த நிதி உதவி வழங்கும் நிறுவனத்திற்கு அனுப்பிவிடுவர்.

பிணைப்பணம் கட்டிப் பெயர் எடுப்பதில் பல கூத்துக்கள் நடக்கும். ஒரு முறை ஈ.பி. ஆர்.எல்.எ‌ப். பிணைப் பணம் கட்டி எடுத்துவிட்டவர்களையும் மகேஸ்வரி உரிமை கோரிவிட பிரச்சனையாகிவிட்டது. மற்றொரு முறை விடுதலையானவர்களை அழைத்துச் செல்ல புளொட்டும் சென்றது. சுழியோடி புளொட்டை ஓரம் கட்டிவிட்டு மினி பஸ்ஸில் ஆட்களை ஏற்றிக்கொண்டு போய்விட்டாராம்.

காணாமல் போனோருக்கான போராட்டத்தை சீர்குலைத்தவரும் இவரே. ஜனாதிபதி கண் கலங்கினார். கண்ணீர் விட்டார் என்றெல்லாம் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்து இவர் பெயர் தேடிக் கொண்டார். காணாமல் போனோரின் உறவினர்கள் இன்னமும் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

காணாமல் போனோருக்காக கொழும்பில் நடந்த போராட்டம் ஒன்றில் தனது படம் இடம்பெற வேண்டும் என்பதற்காக சொந்தமாக புகைப்படம் எடுத்து கொழும்பில் உள்ள தமிழ் தினசரி ஒன்றுக்கு அனுப்பிய வேகம் அவரது சுறுசுறுப்புக்கு சான்று தரும். பொது நல நோக்குக் காட்சி.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக இவரது விளம்பர மோகத்தால் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கறை பூசிவிட்டார்.

மனித உரிமை, புனரமைப்பு பணிகள் என்பனவும் இலாபம் தரும் தொழில்களாகவும் விளம்பரம் தேடும் வழிகளாகவும் மாறுவதை நீண்டகாலமாக பலர் சுட்டிக்காட்டியே வருகின்றனர்.

□□

**கி**ருஷாந்தியை செம்மணியில் புதைத்த இடத்தில் மேலும் 400 புதைகுழிகள் இருப்பதாக திடுக்கிடும் தகவல் ஒன்றை அந்த வழக்கின் எதிரிகள் கூறியுள்ளனர்.

யாழில் அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர் என்பது தெரிந்த கதை. அதனால் அவர்களது கூற்றை அலட்சியம் பண்ணவியலாது.

தமிழ்க் கட்சிகளும், மனித உரிமைகளின் பெயரால் இயங்குவோரும் ஏன் மௌனம் அனுஷ்டிக்கின்றனர்?

மரண தண்டனை கிடைத்த பின்னர் பொய் கூறும் அவசியம் வந்திருக்குமா? மரண வாக்குமூலம் போல இதனை எடுத்துக் கொண்டு அலசச் சொல்லி தூண்டலாமே!



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 17

### கடந்தவாரம்

**முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் விசுவாசியான இராணுவ அதிகாரி மேஜர் இம்மானுவேல் நீண்டகாலம் தன் காதலி வீட்டில் தலைமறைவாக இருந்தார். தப்பிச் செல்ல முற்படும்போது காதலி அமீனுக்கு தகவல் கொடுக்கிறாள்.**

**இனி....**

# இடி அமீன்

இம்மானுவேலின் காரை அமீனின் இராணுவ உளவுப்பிரிவினர் துரத்திச் சென்றனர்.

தான் துரத்தப்படுவதை இம்மானுவேல் அறிந்ததுமே, காரில் ஓடித் தப்புவது முடியாத காரியம் என்று விளங்கிக் கொண்டார்.

சட்டென்று காரை நிறுத்திவிட்டு இறங்கி ஓடத் தொடங்கினார்.

அப்பகுதியில்தான் டாக்டர் ஒருவரது வீடு இருந்தது. எப்போதோ இம்மானுவேல் காயமடைந்து இருந்தபோது சிகிச்சை கொடுத்தவர். அதனால் சிறு பரிச்சயம்.

அந்த வீட்டை நோக்கி ஓடினார் மேஜர் இம்மானுவேல். 'கட்டிலில் சுகம் தந்தவள் கடைசியில் காட்டிக் கொடுத்து விட்டாள். சொர்க்கம் என்று நினைத்தது நரகமாகிவிட்டது,' என்பதை நினைத்து மேஜர் மனம் வருந்தினார்.

டாக்டர் வீட்டு கதவைத் தட்டினார். டாக்டர் இல்லை. அவர் மனைவி இருந்தாள். மேஜர் கையெடுத்துக் கும்பிட்டார்.

"என்னைக் கொல்லத் துரத்துகிறார்கள். தயவு செய்து காட்டிக் கொடுக்காதீர்கள்."

"நான் டாக்டரின் மனைவி. உயிரைக் காப்பாற்றுவது என் கடமை!" வரப்போகும் விபரீதம் அறியாமல் ஒளிந்து கொள்ள இடமளித்தாள்.

அமீனின் இராணுவ உளவுப் பிரிவு தகவல் அனுப்பியது: "காரை விட்டு இறங்கி ஓடிவிட்டார் மேஜர்."

இடி அமீனின் குரல் கோபத்தில் ஒலித்தது: **"முட்டாள்களே! உங்களை என்ன ஓடிப் பிடித்து விளையாடவா அனுப்பினேன்? அந்தப் பகுதியை முற்றுகையிட்டு வீடு வீடாகத் தேடுங்கள். ஆள் கிடைத்தால் அந்த இடத்திலேயே மரியாதை கொடுத்துவிடுங்கள்!"**

அந்தக் கோபத்தில்கூட படுகொலைக்கான உத்தரவை மட்டும் 'மரியாதை கொடுத்தல்' என்ற வார்த்தை மூலம் மறைமுகமாகத்தான் கூறினான். இடி அமீன்.



**ஆதரவாளர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டோம்!"**

இம்மானுவேலின் காதலி ஜியோலா அமீனைச் சந்தித்தாள். அழகாக இருந்தாள். அவள் உதடுகள் சின்னதாகவும் மிகச் சிவப்பாகவும் இருந்தன. அந்த உதடுகள் அமீனைக் கவர்ந்தன. அந்தச் சின்ன உதடுகளை விரலால் வருடவேண்டும் போல இருந்தது.

**"பக்கத்தில் வா!"** என்றான். சென்றவளின் இடுப்பை கைகளால் வளைத்து தன் மடியில் இருத்திக் கொண்டான். மெத்தென்று அமர்ந்திருந்தாள்.

அமீனால் அவளது அண்மை தந்த கிறக்கத்தைத் தாங்கமுடியவில்லை. உதடுகளை மேலும் கீழுமாக வருடிப் பார்த்தவன், தன் முரட்டு உதடுகளால் அவற்றைக் கௌவிக் கொண்டான்.

அமீனின் முரட்டுத்தனத்துக்கும், அவனது ஆளுமைக்குள் சிக்குவதற்கும் அவளும் மிக விரும்பினாள்.

மேஜர் இம்மானுவேல் இனிப் பயன்பட மாட்டார். அதிகாரம் இல்லாத ஒருவரை

## தருவது ரசிகன்

நம்புவதைவிட, அதிகாரமும், பலமும் உள்ள அமீனை மயக்கினால் பலன் உண்டு என்றுதான் இம்மானுவேலை காட்டிக் கொடுத்தாள்.

எனவே ஒத்துழைத்தாள். முரட்டுத்தனமான அவனது ஆராய்ச்சிக் கரங்களுக்குத் தடையின்றி அனுமதி தந்தாள்.

அலுவலக அறையின் கதவை உள்ளே தாழ்போட்ட அமீன், அந்த அறையையே கட்டில் அறையாக்கிக் கொண்டான்.

அவளது உடம்பின் ஏற்ற இறக்கங்களும், இளமையும், திடமும் அமீனை ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளச் செய்தன.

அதனால் சியம்பாவின் செயலாளரான அழகிக்கு நேர்ந்த கதி அவளுக்கு ஏற்படவில்லை.

அமீனின் காதலிகளில் ஒருத்தியாக, தனி மாளிகை ஒன்றில் குடியேறினாள்.

அசோலி மற்றும் லாங்கி இனச் சிப்பாய்கள், இராணுவத்துக்குள் அமீனுக்கு எதிரானவர்களாக மாறிக்கொண்டிருந்தனர்.

அவர்களை விட்டுவைப்பது ஆபத்து என்ற முடிவுக்கு வந்தான் இடி அமீன்.

**"இடி அமீனை அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம்,"** என்று நகைத்த அமீன்: **"இந்த இடி அமீனையே எதிர்க்கத் துணிந்த அவர்களுக்கு தகுந்த மரியாதை கொடுத்தாக வேண்டும்!"** என்றான்.

யோசித்துவிட்டு: **"ஆனால் இப்போதல்ல. இரண்டு நாட்களின் பின்னர் மரியாதை செய்தால் போதும்!"** என்றான் தளபதியிடம்.

அசோலி மற்றும் லாங்கி இன சிப்பாய்கள் தங்கியுள்ள முகாமை சுற்றிவளைத்து அத்தனை பேரையும் சுட்டுக்கொல்லத் திட்டம் தீட்டப்பட்டது.

'இஸ்ரேல், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஆயுதக் கொள்வனவு செய்வதற்காக', என்று பயணம் புறப்பட்டான் இடி அமீன்.

தான் இல்லாதபோது அசோலி, லாங்கி இனப் படைகள் கொல்லப்பட்டால், தன்மீது பழிவிழாமல் தப்பிக் கொள்ளலாம் என்பது அமீனின் தந்திரம்.

அமீன் புறப்பட்டுச் சென்றதும் அசோலி, லாங்கி இன சிப்பாய்களது முகாம்கள் அமீனின் விசுவாசப் படைகளால் முற்றுகையிடப்பட்டன.

ஏற்கனவே இராணுவ முகாம்களைச் சுற்றி வளைத்து படுகொலைகள் நடந்ததை அறிந்திருந்த சிப்பாய்கள் எதிர்த்து மோதத் தொடங்கினார்கள்.

முற்றுகையை உடைக்க முகாமிற்குள் இருந்தவர்கள் கடுமையாகச் சண்டையிட்டனர்.

இஸ்ரேலில் இறங்கிய கையோடு அமீன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு **"என்ன எல்லோரையும் ஊருக்கு அனுப்பி விட்டீர்களா?"** என்றான்.

"இல்லை. போக மறுக்கிறார்கள்."

**"அடடே... நன்றாக விருந்து கொடுத்து அனுப்ப வேண்டியது தானே? நான் என்ன அதிக செலவாகி விட்டது என்று கோபிக்கவா போகிறேன்?"** என்றான் நகைத்தபடி.

அந்த நகைப்பின் எதிரொலி உகண்டாவில் வேட்டொலியாகக் கேட்டது.

முகாம் கதவுகளை மூடிக் கொண்டு உள்ளே இருந்தபடி தாக்கிக் கொண்டிருந்தனர். அதனால் அமீனின் படையில் பலர் கொல்லப்பட்டனர்.

இறுதியில் இராணுவ வாகனம் ஒன்று முகாம் மதிலுடன் மோதியது. அவ்வாறு மோதியதால் ஏற்பட்ட ஓட்டை வழியாக இயந்திரத் துப்பாக்கியைச் செலுத்தி ரவைகளைப் பொழிந்தனர்.

அமீனின் படையினர் சிலரும் முதலில், உள்ளே பிரவேசித்து மாட்டியிருந்தனர். அவர்களும் வெளியே ஓட்டை வழியாக அமீனின் படைகள் பொழிந்த ரவைகளால் கொல்லப்பட்டனர்.



கொல்லப்பட்டவர்கள்

முன்னூறு பேருக்கு மேற்பட்ட படையினர் முகாமுக்குள் பிணங்களாகக் குவிந்து கிடந்தனர்.

இச் சம்பவம் நடைபெற்றது கிஞ்ஜா என்ற பகுதியிலாகும். அங்கு இருந்த முனிசிப்பலிலிருந்து குப்பை வண்டிகள் கொண்டு வரப்பட்டன.

புல்டோசர்களால் சடலங்களை ஒன்று குவித்து, குப்பை வண்டிகளில் தூக்கிப்போட்டனர்.

அந்த விடுதியும் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. குப்பைவண்டியில் அள்ளிப்போட்ட உடல்கள் தவிர்ந்த ஏனைய உடல்கள் பல இடிபாடுகளுக்கிடையே சிக்கிச் சிதைந்தன.

ஜூலை 19ம் திகதி இடி அமீன் நாடு திரும்பினான். விமான நிலையத்திலேயே தன் தளபதியைப் பார்த்து இரகசியமாகக் கண்ணடித்தான்.

அங்கேயே பத்திரிகையாளர்களை அழைத்து: **"நான் இல்லாதபோது என் எதிரிகள் சதிப் புரட்சியில் இறங்கியுள்ளனர். என் படையினர் தங்கியிருந்த முகாமை நாசமாக்கிவிட்டனர். நாட்டுக்காக பலியான அனைவருக்கும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செய்வோம்!"** என்றான்.

பத்திரிகையாளர்கள் உட்பட விமான நிலையத்தில் அந்தச் சமயத்தில் நின்றிருந்த அனைவருமே மௌன அஞ்சலி செய்தனர்.

அஞ்சலி முடிந்ததும் மேற்கொண்டு கேள்விகள் கேட்க இடமளிக்காமல் அமீன் விடுவிடென்று சென்றுவிட, அவனைத் தொடர முற்பட்ட வெளிநாட்டு பத்திரிகையாளர்களை தடுத்த அமீனின் காவலர்கள்: "ஜனாதிபதி அவர்கள் கடும் சோகத்தில் செல்கிறார். குறுக்கிட வேண்டாம்!" என்றனர்.

இராணுவத்தினரைக் குவித்து அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினார்கள்.

டாக்டர் வீட்டில் மறைந்திருந்த இம்மானுவேல் கைது செய்யப்பட்டார்.

டாக்டரின் வீடு அடித்து நொறுக்கப்பட்டது. டாக்டரின் மனைவியை இழுத்து முத்தமிட்டான் சிப்பாய் ஒருத்தன்.

"இம்மானுவேல் உனக்கு...கொடுத்தானா?" என்று கெட்டவார்த்தைகளால் திட்டியபடி டாக்டரின் மனைவியை அறைந்தான் இன்னொரு சிப்பாய்.

நல்லவேளையாக டாக்டரின் மகள் அப்போது வீட்டில் இருக்கவில்லை.

இம்மானுவேல் அந்த வீட்டிலேயே வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இடி அமீனிடம் இருந்து வோக்கியில் அடுத்த உத்தரவு வந்தது:

**"அந்த டாக்டரையும் அவன் வேலை செய்யும் மருத்துவமனையையும் நொறுக்கி விட்டு வாருங்கள்!"**

டாக்டர் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடல்மீது ஏறிச்சென்ற இராணுவ டாங்கி மருத்துவமனையை இடித்துத் தள்ளியது.

இச் சம்பவம் உகண்டா எங்கும் பரவியது. அத்தகவல்களை பத்திரிகைகளில் வெளியிட, அனுமதித்த இடி அமீன், அதற்கு கொடுத்த விளக்கம்: **"இராணுவத்தில் இருந்த ஒபேடே ஆதரவாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மேஜர் இம்மானுவேல்தான் தலைமை தாங்கினார். அவர்கள் சரணடைய மறுத்ததோடு அப்பாவி டாக்டர் ஒருவரையும் மிருகத்தனமாகக் கொன்றுவிட்டனர். வேறு வழியின்றி மேஜர் இம்மானுவேலையும் அவரது**

(இடி தொடரும்)

# கண்ணீரும் பூங்கொத்தும்

இளவரசி டயானாவின் பிறந்த நாளான 01.07.98 அன்று டயானாவின் கல்லறையில் மலர்க் கொத்துக்கள் மலையாகக் குவிந்தன.

ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்கியபடி தங்கள் இதய இளவரசியின் கல்லறைக்கு மரியாதை செய்தனர்.



டயானா அடக்கம் செய்யப்பட்ட 'அல்தார்ப் எஸ்டேட்' பொதுமக்கள் பார்வைக்காக திறந்துவிடப்பட்டது. இந்த எஸ்டேட்டில் டயானாவின் சகோதரரான சாள்ஸ் ஸ்பென்சர் அமைத்துள்ள 'டயானா அருங்காட்சியக'மும் உள்ளது.

இந்த அருங்காட்சியகம் மக்களின் பார்வைக்காக இரண்டு மாதங்களுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு டயானா மாணவியாக இருந்த போது எழுதிய கடிதங்கள் மற்றும் அவரது புகழ்பெற்ற மணமகள் உடை, அவரது நவீன உடைகள் போன்றவை உட்பட பல பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்தை பார்வையிட கட்டணம் செலுத்த வேண்டும். சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் இதனை பார்வையிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டயானாவின் சகோதரர் பணத்துக்காக ஆசைப்பட்டு கட்டணம் வசூலிப்பதாக புகார்கள் கிளம்பியுள்ளன.

"அப்படியெல்லாம் ஆசை ஒன்றும் கிடையாது. பார்வையாளர்கள் வந்து தங்குவதற்கு வசதியாக கட்டடங்கள் கட்டுவதற்கு ஏராளமாக செலவு செய்துவிட்டேன்!" என்கிறார் ஸ்பென்சர்.

# மற்றொரு போலிச்சாமி

'மருத்துவமனை கட்டுகிறேன்' என்று வெளிநாடுகளில் நன்கொடை பெற்று, சுருட்டல் நடத்திய சாமியார் ஒருவர் மாட்டிக்கொண்டார்.



தமிழ்நாடு சென்னையைச் சேர்ந்த சுவாமி வித்யாநந்தா சரஸ்வதி என்பவரே அவ்வாறு மாட்டிக் கொண்டவராவார்.

சட்டவிரோதமாக இரண்டு கோடி ரூபாய் வெளிநாடுகளில் இருந்து நன்கொடையாகப் பெற்று மோசடி செய்ததாக தமிழகப் பொலிசார் நீதிமன்றத்தில் புகார் செய்துள்ளனர்.

ஏழை மக்களுக்கு இலவச மருத்துவமனை கட்டுவது என்ற பெயரில் நிதி வசூலித்து தன் பைக்குள் போட்டுக் கொண்டாராம் சுவாமி.

போலிச் சாமியார்கள் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. ஏமாறும் பேர்வழிகளும் ஏமாந்து கொண்டே இருக்கின்றனர்.

# படையெடுக்கும் ஆண்கள்

அமெரிக்காவில் 'வயாக்ரா' என்னும் பெயரில் ஆண்களுக்கான மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டு விற்பனையில் தூள் கிளப்புவது பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.



'அந்த சமாச்சாரத்தில்' ஆண்களுக்கு போதிய ஊக்கம் கொடுப்பதே வயாக்ராவின் உபயோகம். ஆனால் விலைதான் மகா உயரம். நம்மூர் பெறுமதிப்படி சிட்டத்தட்ட 800 ரூபா.

இந்திய சஞ்சிகையான இந்திய டுடே வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் ஆண்கள் பலர் மருந்துக் கடைக்காரர்களை துரத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"எப்போது உங்கள் கடைக்கு வரும்?" என்று படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'சூடேறிப்போன இந்திய ஆண்களுக்கு பாலியல் மோட்சத்தை கொடுக்கும் வயாக்ரா. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 42 ஆயிரம் ரூபா (இந்திய மதிப்பில்) செலவாகும் என்கிறது அந்த சஞ்சிகை. அதற்கென்ன பணமா முக்கியம்?

# பறக்காத வாக்குறுதி

வாக்குறுதி கொடுப்பதே காற்றில் பறக்கவிடுவதற்கு என்று கருதப்படும் காலத்தில், டாக்டர் ஒருவர் வித்தியாசமாக நடந்திருக்கிறார்.



முகம் கருகிய இந்தியப் பெண் ஒருவருக்கு 'பிளாஸ்டிக் சர்ஜரி' செய்வதாக அன்னை தெரேசா உயிருடன் இருந்தபோது வாக்குறுதி கொடுத்தாராம். அந்த வாக்குறுதிப்படி அப் பெண்ணுக்கு தற்போது 'பிளாஸ்டிக் சர்ஜரி' செய்யப்பட்டுள்ளது.

சமையல் அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் முகம், கழுத்து, மார்பு ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டன. அமெரிக்காவில் நியூயோர்க்கில் செய்யப்பட்ட பிளாஸ்டிக் சர்ஜரியின் பின்னர் முகம் அழகாகிவிட்டது. ஏனைய பகுதிகளிலும் தீக் காயங்கள் மறைந்துவிட்டன.

பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் குணமான மீராவும், வாக்குறுதியை நிறைவேற்றிய டாக்டரும் பாப்பரசரிடமும் சென்று ஆசிபெற்றனர்.

# புதிய மாத்திரை



பெண்கள் கருத்தரிப்பதை தடுக்க புதிய மாத்திரை ஒன்றை பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

உடலுறவு கொண்ட மறுநாள் காலையில் ஒரு மாத்திரையை விழுங்கினால் போதுமாம். இதனை உபயோகிப்பதால் பக்க விளைவுகளும் ஏற்படமாட்டாதாம்.

பிரிட்டனில் மருத்துவர்களது சிபாரிசுடன் இந்த மாத்திரைகள் விற்பனைக்கு வந்துள்ளன. இம்மாத்திரைக்கு பிரிட்டிஷ் பெண்களிடம் கிராக்கி ஏற்பட்டுள்ளதாம்.



படிப்பகம்

www.padippakam.com

## ருசியோ ருசி



வண்டு வறுவல், தேள் பாயாசம், பூரான் சட்னி, கம்பளிப் பூச்சி ரோஸ்ட்.... என்ன வயிற்றைக் குமட்டுகிறதா? இவையெல்லாம் அமெரிக்காவில் பிஸ்மோ கடற்கரையில் ஹொட்டல் ஒன்றில் ஸ்பெசல் அயிட்டங்கள்.

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் இருப்பது பிஸ்மோபீச். ஹொட்டலின் பெயர்: ஹொட்லிக்ஸ். அந்த ஹொட்டல் விளம்பரத்துக்கான படத்துக்கு ஒருவர் போஸ் கொடுக்கும் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

அமெரிக்கர்களுக்கு, சாண்ட்விச், பீஸா, ஐஸ்கிரீம் போன்றவை அலுத்துவிட்டது. அதனால் புதிய சுவை தேடி அலைகிறார்கள். அவர்களுக்காக வண்டுகளுடனும், தேள்களுடனும், பூரான்களுடனும் காத்திருக்கிறது ஹொட்டல் ஹொட்லிக்ஸ். தற்போது ஏராளமான கூட்டம் அலை மோதுகிறதாம்.


## குட்டிச் சாத்தான்

ஜப்பானில் அமெரிக்கா போட்ட யுரேனியம் அணுக் குண்டின் தோற்றம் தான் இது. அணுக் குண்டுகள் இருவகைப் படும். அணுக்களை பிளப்பதன் மூலம் வெடிக்கச் செய்வது ஒருவகை.

அணுக்களை உருக்கி கலக்குவது மூலம் வெடிக்கச் செய்வது இரண்டாவது வகை.

யுரேனியம் போன்ற அணுவைப் பிளப்பதன் மூலம் அதிகமான சக்தி வெளிப்படும்.

யுரேனியம் என்பது இயற்கையான பொருள். இதுவும் இரண்டு வகைப் படும். யுரேனியம் 235 என்பது அணுச்சக்தியை வெளிப்படுத்தும். யுரேனியம் 238 என்பது அணுச்சக்தியை வெளிப்படுத்தாது. ஜப்பான் மீது அமெரிக்கா வீசிய யுரேனியம் குண்டுக்கு சூட்டியிருந்த பெயர் குட்டிப் பையன். (லிட்டில் பாய்) அமெரிக்காவின் குரூர இரசனையுள்ள பெயர் சூட்டலை பார்த்தீர்களா? குட்டிச்சாத்தான் என்று பெயர் வைத்திருந்தாலாவது ஓரளவு பரவாயில்லை.



## படி ஓசைகள்



வீட்டுக்கு வீடு வாசற்படி. அதுபோல கோவில்களுக்குப் படிகள். பல கோவில்களில் படிகளை அழகாக அமைத்திருப்பதைக் காணலாம்.

ஆனால், தமிழ்நாட்டில் கும்பகோணம் அருகில் உள்ள தாராபுரம் ஐராவதேச் சுவரர் ஆலய பலிபீட படிக்கட்டுக்கள் விநோதமானவை. ஒவ்வொரு படிக்கட்டும் ஒவ்வொரு விதமான ஓசையைத் தருகிறதாம். கி.பி. 1150-1173 காலப் பகுதியில் ராஜராஜ சோழனால் இக் கோயிலும் கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.





## மயிலுக்கு மயிலிறகு

நாகரிகம் எப்படியெல்லாம் மாறி வருகிறது பாருங்கள். பிளாஸ்டிக் காதணிகள்தான் சில காலம் முன்பு புதுப் பாணியாக கலக்கின. திருடர் பயமில்லாக் காதணி என்ற நம்பிக்கையும் இருந்தது. தற்போது மேலை நாடுகள் சிலவற்றில் மயில் இறகு. பறவைகளின் சிறகுகள் போன்றவற்றை காதில் அணியும் பாஷன் பரவி வருகிறதாம். இந்த மயிலின் காதை அலங்கரிப்பதும் மயிலிறகுக் காதணிதான். செலவு கிடையாது. உத்தமமான யோசனை!

## நீருக்குள் திருமணம்

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் என்பார்கள். இந்த ஜோடிககு நீருக்கு அடியில்தான் சொர்க்கம்.

இருவரும் நீச்சல் பிரியர்கள். சிங்கப்பூரைச் சேர்ந்தவர்கள். குவான் வயது 28. பெனிடான் வயது 26.

இவர்கள் காதலும் நீச்சலின்போதே மலர்ந்ததாம். அதனால் தங்கள் திருமணத்தை நீருக்கடியில் நடத்த முடிவு செய்தனர். 20 நிமிடங்கள் கண்ணாடிக் கூண்டில் இருந்தபடி திருமணமோதிரம் மாற்றிக்கொண்டனர்.

மோதிரம் மாற்றிக் கொண்டதும் தங்கள் முகமூடிகளை கழற்றி முத்தமிட்டுவிட்டு மீண்டும் அணிந்து கொண்டனர். நீருக்கடியில் நடந்த முதல் திருமணம் இதுதான் போலிருக்கிறது.


## சிற்ப தூபி



நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோ நகரில் அழகிய சிற்பங்களுக்காக ஒரு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இடம்பெற்றுள்ள ஒற்றைக் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள அழகிய சிற்பத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

ஒற்றைக் கருங்கல்லில் இத்தனை நுட்பமாக சிற்ப வேலைப்பாடு செய்திருப்பது சாதனை. இந்த அரிய சிற்பம் சுற்றுலாப் பயணிகளை கவருகிறது.

## பார் வியக்கும் கார்



இந்தக் காரின் விலையை உங்களால் மதிப்பிட இயலுமா? ஆக, 3 கோடி ரூபாய்.

அப்படி என்ன இந்தக் காரில் இருக்கிறது? 1970ம் ஆண்டு போர்ஷ் என்னும் நிறுவனம் 13 பந்தயக்கார்களை மட்டும் தயாரித்தது. அவற்றுக்கு செம கிராக்கி.

சமீபத்தில் அக் காரில் ஒன்றான மேற்படிக் கார் பாரிஸ் நகரில் ஏலம் விடப்பட்டது. பெரும் கோடீஸ்வரர் ஒருவர் 3 கோடி கொடுத்து ஏலத்தில் எடுத்தார். மணிக்கு 250 கிலோ மீட்டர் முதல் 300 கிலோ மீட்டர் வரை விரைந்து செல்லும் வல்லமையுடையது.


## தகவல் பெட்டி

## காரும் பறக்கும்

பறந்துபோக வேண்டுமானால் விமான நிலையத்துக்கு செல்லத் தேவையில்லை. விமானமும் தேவையில்லை. கார் இருந்தால்போதும். ஆம், பறக்கும் கார் விரைவில் வரப் போகிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த கிளைவ் சின்கிளோர் என்பவர் பறக்கும் காரை தயாரிக்கும் முயற்சியில் ஊண், உறக்கம் எல்லாவற்றையும் மறந்துவிட்டு ஈடுபட்டுள்ளார்.

பறக்கும் காரின் மாதிரி வடிவமே இதுவாகும். மணிக்கு 250 கிலோமீட்டர் பறந்து செல்லக்கூடிய இக்காரில் சக்தி வாய்ந்த என்ஜின் பூட்டப்பட்டிருக்கும். இறக்கைகள் எதுவும் கிடையாது. 30 விநாடிக்குள் அப்படியே எழுந்து செங்குத்தாக பறக்கத் தொடங்கிவிடுமாம்.

இவரது பறக்கும் கார் கண்டுபிடிப்பு முயற்சி பற்றி விஞ்ஞானிகள் பலத்த சந்தேகம் கொண்டுள்ளனர். 2001ற்குள் பறக்கும் கார் வந்தே தீரும். போக்குவரத்து நெரிசலுக்கு மாற்றுவழி பறக்கும் கார்தான் என்கிறார் மிகுந்த நம்பிக்கையுடன் கிளைவ். கார் எல்லாம் பறக்கும் காரானால் வானத்தில் நெரிசல் வராதோ? வரும்! பின்னர் விண்வெளியில் ஓடும் கார் கண்டுபிடிப்பார்களாக்கும்!





படிப்பகம்

# மம்தா கொடுத்தார்

மம்தா குல்கர்னி என்றாலே வம்புதான். சமீபத்தில் சல்மான்கானை விருந்து ஒன்றில் சந்தித்து முத்தம் கொடுத்து கதிகலங்க வைத்தாராம்.

அந்த விருந்தில் கலந்து கொண்ட வேறு சில நடிகர்களும் தங்களையும் மம்தா கவனிக்க மாட்டாரா என்று சுற் றிச் சுற்றி வந்ததுதான் மிச்சம். மம்தா கண்டுகொள்ளவே இல்லை. இந்தி சினிமாவில் நம்பர் வன் இடத்தை பிடிக்கா விட்டாலும் வம்பு வளர்ப்பதில் நம்பவர் வன் இடத்தில் இருக்கிறார் மம்தா.

## மினிசினி

* பிரபு-ஜெயராம் இணைந்து தமிழில் நடிக்கவிருந்த 'நண்பா நண்பா' படம் கைவிடப்பட்டது தெரிந்ததே. இதே படம் தற்போது மலையாளத்தில் தயாராகப் போகிறது. தமிழில் பிரபு நடிக்க இருந்த வேடத்தில் மலையாளத்தில் சுரேஷ் கோபி நடிக்கவுள்ளார்.

* 'குருதிப் புனல்' படத்தை இயக்கிய ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம் இப்போது 'காதலர் தினம்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார். இப்படத்தை முடித்து விட்டு இவர் ஒரு படத்தை இயக்கப்போகிறார்.

* 'கபடி கபடி' படத்தை இயக்கி நடித்து வரும் பாண்டியராஜன் அடுத்து 'டபுள்ஸ்' என்ற படத்தை இயக்கி இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். இப் படத்தில் இவருடைய மகன் பல்லவராஜன் முக்கிய வேடத்தில் நடிக்கவிருக்கிறார்.

* நடிகர் மோகன் இயக்கி நடிக்கும் 'அன்புள்ள காதலுக்கு' படத்தில் ஜீவன், கவிரவி என்ற இரு பாடலாசிரியர்களை அறிமுகம் செய்துள்ளார்.

* 'ரத்னா' படத்தைத் தொடர்ந்து ரேவதி மூன்று புதிய படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். அவற்றில் கே.எஸ்.அதியமான் இயக்கும் 'தலைமுறை' படத்தில் வயதான தோற்றத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.

* நெப்போலியன்-சுவலட்சுமி நடிக்கும் 'பொன்விழா' படத்தைத் தயாரித்து வரும் சிவஸ்ரீபிக்ஸர்ஸ் நிறுவனம் அடுத்து பவித்ரனிடம் பணியாற்றிய சரவணன் என்னும் புதியவர் இயக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது.

* கஸ்தூரிக்கும் திரையுலகப் பக்கம் மார்க்கெட் அவுட்டானதைத் தொடர்ந்து சின்னத்திரைப் பக்கம் கவனத்தைத் திருப்பியுள்ளார். இவர் சொந்தமாகத் தொலைக்காட்சித் தொடர் ஒன்றைத் தயாரித்து இயக்குகிறார்.

* முன்னாள் நாயகி சரிதாவின் தங்கை பிரவீணா, கார்த்திக்குடன் 'சின்னராஜா' படத்தில் பாடகி வேடத்தில் நடித்து வருகிறார். ஏற்கனவே பிரவீணா 'காதல் சங்கமம்' படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார்.

* கே.எஸ்.அதியமான் இயக்கிய 'சொர்ண்முகி' தெலுங்கில் தயாராகி வருகிறது. தெலுங்கில் ஸ்ரீகாந்த்-பிரதிவிராஜ்-ரோஜா ஆகியோர் தமிழில் பார்த்திபன்-பிரகாஷ்ராஜ்-தேவயாணி நடித்த வேடங்களில் நடிக்கிறார்கள்.

* நகைச்சுவை நடிப்பில் தூள் பரத்திக்கொண்டிருக்கும் மணிவண்ணன் வெகுவிரைவில் படமொன்றை இயக்கவிருக்கிறார். இதில் சத்யராஜ்-பிரகாஷ்ராஜ்-பார்த்திபன் ஆகிய மூவரும் இணைந்து நடிக்கவுள்ளனர்.

# முரளியின் காதல்

கௌசல்யாவுடன் 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தில் நடித்தபோதே முரளிக்கு உண்மையாகவே காதல் மலர்ந்துவிட்டது.

படப்பிடிப்பு முடிவடைய முன்னர் தன் காதலை வெளிப்படுத்த பல வழிகளைக் கையாண்டாராம் முரளி. ஒன்றும் பலிக்கவில்லை.

முரளி திருமணமானவர் என்பதை அறிந்த கௌசல்யா. அவரது காதலை எற்க மறுத்தாராம். முரளியோ விட்டபாடில்லை. முயற்சியைத் தொடர்கிறார்.

இதற்கிடையே திடுக்கிடும் தகவல் ஒன்று முரளியை குழப்பியுள்ளது. செந்தில் என்ற அழகான இளைஞரைத்தான் கௌசல்யா காதலிக்கிறாராம்.

கௌசல்யாவின் சகல விஷயங்களையும் கையாள்வது அந்த இளைஞர்தான். அவரைக் கேட்டுத்தான் புது ஒப்பந்தங்களில் கையொப்பம் போடுகிறாராம் கௌசல்யா.



அப்பாஸ்-சங்கவி
படம்: இனியெல்லாம் சுகமே

## திரையுலக மறுபக்கம் 62 நன்...
## சிரி...

வடிவுக்கு பெயர் போன ...வர். தற்போது வில்லி வேடங்க...பறக்கிறார்.

முதலில் அவரை கவர்ந்த... சந்தர்ப்பம் கொடுத்ததோடு, ந...

இயக்குநருக்கு அடிக்கடி ...வசைபாடுவார். இயக்குநர்க... முணுப்பார்கள். அந்த நடி... இரசித்தார்.

இயக்குநர் எப்போது ேப... தானாக திறக்கும்.

உயர்ந்த படிப்பு படித்... நடிகைக்கு இருந்தது.

பெரிய நடிகர் ஒருவரை ... படத்தில் நடிகைக்கு பெரிய ... திருப்திப்படுத்தினார் இயக்கு...

நடிகையும் பலரும் பார...

சென்ற தலைமுறையின் ... இணையற்ற நடிகருடனும் ஜே... வாய்ப்புக்களையும் வழங்கிய...

சில நடிகைகள் குறிப்பாக ... பற்றி அந்தரங்கமாக குறைகள்... குறையாகக் கூறியதில்லை. நன்...

சிரிப்புக்கு பெயர்போன ... அவரை நாடாத தொழிலதி...



இஷா கோபிகர்
படம்: என் சுவாசக்காற்றே



அபூர்வா

## காதோடு சொல்லுகிறோம்

மணியான நகைச்சுவை நடிகரின் ஜோடியாக வலம் வந்த ஷகீலா, மற்றொரு மணியான நகைச்சுவை நடிகருடன் ஒட்டிக் கொண்டுள்ளார். முன்னவருக்கு படவாய்ப்புக்கள் போதியளவு இல்லாமல் போனதால் பின்னவருடன் கைகோர்த்து விட்டார் ஷகீலா.

'ரன்' நடிகையின் மறுப்பு எல்லாம் புஸ்வாணமாகிவிட்டது. நடனப் புகழ் நடிகரின் சகோதர நடிகரும், நடன இயக்குநருமான சுந்தரமானவர் நடிகையின் வீட்டில்தான் அடிக்கடி தங்கிச் செல்கிறார். கையும் மெய்யுமாக கண்டு நிருபர் ஒருவர் கேட்டபோது, நடனம் கற்றுக் கொடுக்கிறேன் என்று சமாளித்தாராம் சுந்தரமானவர். வேறு என்ன கற்றுக்கொடுக்கிறாரோ?

புதியபாதை போட்ட 'பா' நடிகர் இயக்குநராகவும் இருந்தவர். அவர் காட்டில் இப்போது மழை. சில படங்கள் ஹிட்டானதால் பல படங்கள் கைவசம் உள்ளதாம். படப்பிடிப்பில் நடிகைகள் இருக்கும் போது இயக்குநர்களுக்கு அட்வைஸ் பண்ணி அறுத்து தன் புத்திசாலித்தனத்தை காண்பிக்கிறாராம். 'அவர் நடிகைகளை மடக்கிப் பிடிக்க எங்களை ஏன் வதைக்க வேண்டும்?' என்று புலம்புகிறார் அவரை வைத்து படம் பண்ணும் இளம் இயக்குநர் ஒருவர்.

மூன்றெழுத்து 'மா' நடிகை சிங்கப்பூரில் ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோது சென்னையில் இருந்த 'சர'ச குமாரருடன் ஃபோனில் பேசினார். 'பில்' கட்டமுடியாமல் தன்னையே பில்லாக கட்டினார். இதெல்லாம் பழைய கதை. இப்போது அவர்கள் உறவுகூட முடிந்துவிட்டது. சமீபத்தில் நகைச் சுவை நடிகர் சிங்கப்பூருக்கு கலை நிகழ்ச்சிக்குப் போன இடத்தில் ஹொட்டல் வரவேற் பாளர் பெண்ணை கையில் பிடிக்க, ஹொட்டல் நிர்வாகம் தர்ம அடி கொடுத்து 'கும்மி' எடுத்துவிட்டதாம். சர்வதேச புகழ்பெற்ற சிரிப்பு நடிகர் ஒருவரின் பெயர் பாதி கொண்டவர் அந்த நடிகர்.

## இஷா இஷா

'என் சுவாசக் காற்றே' படத்தில் அரவிந்தசாமியின் ஜோடியாக நடிப்பவர் இஷா கோபிகர். அந்த அழகிதான் இங்கே மஞ்சள் உடையில் நின்று முட்டை உடைக்கிறார். எத்தனை இரசிகர்களின் மனதை உடைத்து புகப்போகிறார் என்பது படம் வெளியான பின்னர் தெரியும்.

மும்பாயில் இருந்து இறக்குமதியான இஷா கோபிகர் அரவிந்தசாமியின் சுவாசத்தை அச்சுறுத்தும் அளவுக்கு நெருக்கமாக நடித்திருக்கிறார் என்பது மேலதிகத் தகவல்.

## தயாராகிறது சங்கமம்

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இயக்குநர் சுரேஸ் கிருஷ்ணாவுக்கு ஒரு நிபந்தனை விதித்தார். "நான் இசையமைக்க வேண்டுமானால் ரகுமான் கதாநாயகனாக நடிக்க வேண்டும்." அதுதான் நிபந்தனை. நடிகர் ரகுமான் ஏ.ஆர்.ரகுமானின் மனைவியின் சகோதரியின் கணவர்.

சுரேஸ் கிருஷ்ணாவும் சம்மதித்தார். யார் கதாநாயகனாக நடித்தால் என்ன? இசை ஏ.ஆர்.ரகுமான் என்றால் போதும் என்றுவிட்டார்.

அடித்தது சான்ஸ் ரகுமானுக்கு. புது கதாநாயகியோடு ஜோடி சேர்ந்து நடிக்கப் போகிறார். படத்திற்கு 'சங்கமம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். புதுமுகம் பெயர்: வித்தியா.

மணிவண்ணன், விஜயகுமார், ராதாரவி, வடிவேல், ஸ்ரீவித்யா, டெல்லி கணேஷ், சார்லி ஆகியோரும் நடிக்கின்றனர்.

முகப்பில்
பாண்டியராஜன்
-சுவலட்சுமி
கவலைப்படாதே
சகோதரா
கௌசல்யா
படம் பிரியமுடன்

## மனிதக் குண்டுப் பெ...

முதல் அமைச்சர் ஒருவரை பொது... கூட்டத்தில் வைத்து மனிதக் குண்டு... பெண் ஒருவர் தீர்த்துக் கட்டுகிறா... அந்தப் பெண் யார்? அவரை ஏவிய... யார்? என்பதை அறியப் புறப்படுகிறா... உளவுப் பிரிவு பொறுப்பதிகாரி.

'உள்ளம்' படத்தின் கதை அதுதா... கதாநாயகன் மம்முட்டி. ஜோடி வா... விஸ்வநாத். பிரபல மலையாளபட இயக்... நரான ஷாஜி கைலாஷ் இயக்கியு... ளார். இப்படத்தில் பாடல்கள் மருந்துக்கும் கிடையாது. அப் பாடா.



மம்தா குல்கர்னி

சொத்துக்கான எவிடன்ஸ் என்னிடம் ... என்னோட அப்பா மும்பையிலே பெர... நானும் ஏகப்பட்ட சினிமால நல்லா ஓ... இந்த ஃபீல்டுல இருக்கேன்.

கேள்வி: இன்னும் கொஞ்ச நேரத்தில்... விழாவில் அந்த நடிகரை சந்தித்தால்...

நக்மா: எனக்கும் அவருக்கும் இடையே ச... களும் இல்லை. பகைவர்களும் இல்லை.

கேள்வி: சரத்குமாரோடு ஜோடி சேரச்...

நக்மா: சினிமாவிலேதானே? நிச்சயம் ே...

கேள்வி: தேவையில்லாத விஷயங்களை கி...

நக்மா: (சலிப்பு)

கேள்வி: பெரிய தலைவரை நீங்கள் பார்...

நக்மா: (சலிப்பு)

www.padippakam.com

# மறக்காத நடிகை
## ழகி பட்ட சிரமங்கள்

ி. கமலுடன் கதாநாயகிகளில் ஒருவராகவும் நடித்த ணசித்திர வேடங்கள் போன்றவற்றில் கொடி கட்டிப்

யக்குநர்களில் ராஜா. அவரது படத்தில் தொடர்ந்து மிடமும் தொடர்ந்து சந்தர்ப்பம் பெற்றுக் கொண்டார். ம் வரும். உணர்ச்சிவசப்பட்டு நடிகர், நடிகைகளை உள்ள குணம்தான் அது என்றாலும் சிலர் முணு மட்டும் இயக்குநரின் மாறுபட்ட உணர்ச்சிகளையும்

கதவைத் தட்டினாலும் நடிகையின் வீட்டுக் கதவு

ததால் இயக்குநருக்கு யோசனை கூறும் தகுதியும்

ாயகனாக வைத்து மரியாதையுடன் இயக்குநர் எடுத்த நரின் மனைவியாக நடிக்கும் பாத்திரத்தை வழங்கி

ம்படியாக சிறப்பாக நடித்திருந்தார்.

ணயற்ற நடிகருடனும், இன்றைய தலைமுறையின் பாக நடித்து விட்டார் நடிகை. இரண்டு பொன்னான அதே இயக்குநர்தான்.

த இயக்குநரால் அறிமுகமான நடிகைகள் இயக்குநரைப் றியுள்ளனர். வடிவுக்குரிய நடிகை மட்டும் இயக்குநரை சுவாசம் என்பதன் மொத்த உருவமாக விளங்குகிறார்.

—★—

### னம் அவஸ்தை

ன்ற தலைமுறை நடிகை அவர். அந்தக் காலத்தில் ள், அரசியல் தலைவர்கள் அரிது எனலாம்.

சினிமாவுக்கு புறம்பாக அவரிடம் திரண்ட சொத்து ஏராளம். சொந்தமாக குட்டி விமானம் வாங்கி வைத்துக் கொள்ளுமளவுக்கு வசதி பெற்றவராக இருந்தார்.

அந்த நடிகையை கதாநாயகியாக தமிழில் பிரபலப்படுத்திய இயக்குநருக்கு அவர்மீது பைத்தியம்.

படப்பிடிப்பு நடக்கும்போது கிடைக்கும் சிறு ஓய்வு நேரத்தில்கூட நடிகையை அழைத்துக்கொண்டு ஓரம் கட்டுவார் இயக்குநர். ஓய்வே இல்லாமல் நடித்தபடி, இயக்குநரின் தேவைகளுக்கும் ஈடுகொடுத்தபடி நடித்து முடிப்பதற்குள் உயிரே போய்விடும்போல இருந்தது நடிகைக்கு.

பகலில் மட்டுமல்லாமல் இரவில்கூட நடிகையை தூங்கவிட்டதில்லை அந்த கிருஷ்ணலீலை புரிந்த இயக்குநர்.

முதல் படத்திலேயே உடல் அசதி காரணமாக மதுப்பழக்கமும் நடிகைக்கு தொற்றிக்கொண்டது. அந்தப் பழக்கத்தால்தான் பல இம்சைகளைத் தாங்கிக்கொண்டார்.

இரவு பகலாக நடிப்பு. ஓய்வு இல்லாமல் சினிமாவுக்கு புறம்பான சம்பாத்தியம். நடிகையால் தன் உடலைக்கூட பராமரிக்க முடியவில்லை. அதனால் உடல் அழகு போனது. இறுதியில் சிரிப்பழகு மட்டுமே மூலதனமாக மிஞ்சியது.

### அதிர்ச்சித் தகவல்

சமீபத்தில் சிரிப்பழகியான நடிகை பற்றி தமிழக முன்னணிப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ள தகவல் ஒன்று அதிர்ச்சி தருகிறது.

தற்போது புதிதாக வரும் கதாநாயக நடிகைகளில் அழகான பிடித்தமான நடிகைகளை வீட்டுக்கு அழைக்கிறாராம் நடிகை. அவர்களுடன் சேர்ந்து மது அருந்துகிறார். அனுபவம் இல்லாமையால் புது நடிகைகள் மது மயக்கத்தில் இருக்க, அவர்கள் அழகை இரசிப்பதில் திருப்தி காணுகிறாராம் நடிகை.

தமிழ் நாட்டின் மிக முன்னணி இதழில்தான் அந்த அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடாமல் மறைமுகமாகவே வெளியிட்டுள்ளனர்.

## டேய் மீனா

மீனாவும் சங்கவியும் இணைபிரியாத தோழிகள். மீனாவை டேய் போட்டுத்தான் அழைப்பாராம் சங்கவி. 'வாடா, போடா' என்று சங்கவி அழைப்பது மீனாவுக்கும் பிடிக்குமாம்.

சங்கவியை சில இளம் நடிகர்களும் 'டேய்' போட்டுத்தான் அழைப்பார்கள் என்பது பலர் அறியாத சங்கதி. குஷி மூட்டில் தான் அப்படி அழைப்பார்களாம்.

## இடம் காலி

ரம்யா கிருஷ்ணனை பின்பற்றி செளந்தர்யாவும் இந்தியில் புகுந்துள்ளார். அதனால் தெலுங்குப் படவுலகில் நம்பர் வன் இடம் காலியாகி விட்டது. கமலுடன் 'காதலா காதலா' படத்தில் முத்தம் கொடுத்து கிறங்கடித்த நடிகை என்றதும் இந்தியில் சான்ஸ் தேடி வந்துள்ளதாம். அங்கும் கேட்கப் போகிறார்கள்.



கார்த்திக்-பிரவீணா
படம்: சின்னராஜா



## இது சத்தியம்

தலைமுறை படத்தில் இயக்குநர் அதியமான் கதாநாயகனாக நடிக்கிறார். அவர் நடிகைகளை தொட்டு நடிப்பது அவரது புதுமனைவிக்கு பிடிக்கவில்லையாம்.

"கட்டிப்பிடிக்கமாட்டேன், தொட்டு நடிக்கமாட்டேன்" என்று மனைவியின் தலையில் அடித்து சத்தியம் செய்திருக்கிறார் அதியமான். அவரது ஜோடி புதுமுகம். மும்பாய் அழகி. அதனால் சத்தியம் காற்றில் பறக்கும் சாத்தியம் இருக்கிறது.

## அப்பா நடிப்பா?

மகனுக்கே அப்பாவாக நடிப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறார் சிவகுமார். 'சந்திப்போமா' படத்தில் சூர்யாவுக்கு தந்தையாக நடிக்க அழைத்தனர். மறுத்துவிட்டார். இப்போது அந்த வேடத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார்.




ப்ரீதா-ஸ்ரீதேவி
படம்: காதல் சங்கமம்

## "யார் வாழ்க்கையில் இதுபோல நடக்கவில்லை"

தமிழக பிரபல வார இதழுக்கு நக்மா அளித்த டியில் ஒளிவு மறைவின்றி பொழிந்து தள்ளி கிறார்.

பி: கவலைப்படாமல் சொல்லுங்கள். ஒரு க நடிகர், ஓர் அப்பா நடிகர் இவர்களை படுத்தி வந்த கிசுகிசுக்கள்?

ான்டரவர்ஸி வேண்டாமே. ஒண்ணு மட்டும் கச் சொல்றேன். யார் வாழ்க்கையில் இது ல்லாம் நடக்கல? மறக்கப்பட வேண்டிய சாதா யம் இது. சினிமா நடிகை என்பதால் பெரிய வெளியே தெரியுது. அவ்வளவுதான். கிசுகிசுக் நான் பொருட்படுத்தாதபோது அதைப்பத்தி பசணும்.

ஒண்ணு..... அதுக்காகப் பயந்துகிட்டெல்லாம் மும்பைக்கு ஓடிப்போகல. பயம்னா என்னன்னே யாது எனக்கு.

ள்வி: நீங்களும் அந்த நடிகரும் இணைந்து ரிய பங்களா கட்டியதாக...?

க்மா: இல்லை; பங்களா என்பது சரி. அது ன்னுடைய சொந்தப் பணத்தில் வாங்கியது. ருக்கிறது. நான் ரிச் ஃபேமிலிலேர்ந்து வந்தவ. சினிமா தயாரிப்பாளர்.

ன படத்துல நடித்திருக்கேன். பத்து வருஷமா

நீங்கள் கலந்து கொள்ளப்போகும் பத்திரிகை ன்ன பேசுவீர்கள்?

ர்டை எதுவும் இல்லை. அதாவது நாங்க நண்பர் வர் ஒரு ஹீரோ, நான் ஒரு ஹீரோயின்.. சான்னால் சேருவீர்களா?

ருவேன். ஆனால் இப்போது இல்லை.

விட்டவர்கள் ஒரு காதல் தம்பதி என்பது சரியா?

ந்ததாக...?

## வாரிசு நடிகைகள்

'ரிக்ஷாமாமா' படத்தின் மூலம் அறிமுகமான குழந்தை நட்சத்திரம் ஸ்ரீதேவி. குளு குளு கொழு கொழு குழந்தையாக இருந்தவர் இப்போது வளர்ந்து நிற்கிறார். தன் சகோதரியான ப்ரீதா விஜயகுமாருடன் காதல் சங்கமம் படத்தல் தோன்றும் காட்சி இங்குள்ளது.

இன்னமும் இரண்டு பெண்கள் விஜயகுமார் மஞ்சுளா தம்பதிக்கு உள்ளனர். இந்த இருவரும் நடிக்க வந்து ஜொலிக்காமல் திரும்பியவர்கள். ஒருவர் வனிதா விஜயகுமார், இன்னொருவர் கவிதா, சரத்குமாருடன் 'கூலி' படத்தில் தங்கையாக நடித்தவர்.

## சின்னச் சின்ன கிளி

சின்ன சின்ன ஆசை பாடலை எழுதிய வைரமுத்துவுக்கு சின்ன சின்னவில் ஆசை போகவில்லை. 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்திற்காக எழுதியுள்ள பாடலிலும் 'சின்ன சின்ன' இருக்கிறது. பாடல் இதுதான்:

"சின்னச் சின்ன கிளியே, பஞ்ச வர்ணக் கிளியே, பால் கொட்டும் நட்சத்திரம் பார்த்தாயா, தேன் முட்டும் முல்லை மொட்டைப் பார்த்தாயா? களவாடும் மின்னல் ஒன்றைப் பார்த்தாயா? கண்கொத்தும் பறவை ஒன்றைப் பார்த்தாயா?" என்று தொடர்கிறது பாடல்.

இப் பாடலுக்கான காட்சியில் சிம்ரானும் பிரசாந்தும் நடித்தனர். பாடலை ஹரிகரன் பாட, தேவா இசையமைத்துள்ளார்.

இப் படத்தில் பிரசாந்த் மூக்குக் கண்ணாடி அணிந்து, மென்மையான காதலராக ஜமாய்க்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

## இல்லாத ஆலயமும் உனது தீபமும்

நடந்தவைகளையே
நினைத்து நினைத்து...
உன் நினைவுகளோடு
நடந்து நடந்து..
சொல்லியழ முடியாச்
சோகங்களைத்தந்த
குழலைப் பிரிந்து–அவன்
வெகுதூரம் போய்விட்டான்!
–0–
உன்நினைவுகள்
கல்லில் வரைந்த உருவமாய்
குளிரில் உறைந்த நதியாய்
அவன் நினைவின் சிகரங்களில்
அமைதியாய் வீற்றிருந்து
அழுகையைக் கொடுக்கின்றன!
–0–
வாழ்வைத் தேடிப் பறந்து
விலங்கைப் பூட்டி வந்தவளே!
உன் சிறகுகளை விரிக்க
அந்தப் பழைய வானில்
அன்று அவன்
பூக்களால் தோரணம்
போட்டு வைத்திருந்த
பாதைகள் எல்லாம்
பத்திரமாக இருக்குமென்று
நினைக்கிறாயா?
–0–
உன் வாழ்வு தோற்றபின்னர்
வந்து சொல்கிறாய்;
அவன் உயிர்காக்க–நீ
இன்னொருவனின்
மனைவியானாய் என்று
உன் வாழ்வு தோற்ற பின்னர்
வந்து சொல்கிறாய்;
உலகம் உன் நியாயத்தில்
உறுதி கொள்ளாது பெண்ணே!
–0–
உனது விழிகளில்
தனது வாழ்வின்
சூரிய சந்திரரைக்
கண்டு வாழ்ந்தானே...
அந்த அவனில்–நீ
காட்டிய
காதலின் கூலியாக
ஆண்டுகள் பலவும்
வேதனையின்
வதை சுமந்தான்!
–0–
குலமகளாய் இருந்து நீ
குதூகலமாய் வாழ்கவென்று
தன்னந் தனியனாய்
தொலைதூரத் தேசமொன்றைத்
தேடியடைந்தான்!
–0–
திரும்பி வர முடியாத
தொலைவுக்கு நீ
படகோட்டிப் போன பின்னர்
அவன் கரைகளின்
கலங்கரை விளக்கங்களைத்
தகர்த்தான்!

ஆபத்துக்களைத் தாண்டி–நீ
வந்தடைய வேண்டுமென்ற
ஆராதனை வேண்டாதபோது
அவன் மனதின்
ஆலயத்தை
அடியோடு பெயர்த்தான்!
–0–
இன்று உன்
கரங்களில் தீபமேந்தி
காதலின் கோவிலைத் தேடுகிறாய்!
துரோகியாய் நீ மாறிய
தினத்தன்றே
அந்த ஆலயத்தில்
இடி வீழ்ந்ததை அறியாமல்!
பஹீமா ஜஹான்–அட்டாளைச்சேனை.

## என் கவிதைகள்

என் கவிதைகள்
முட்டைக்குள் இருந்தும்
தாயின் தாலாட்டில் இருந்தும்
இயற்கையின் இனிமையில் இருந்தும்
குயிலின் உச்சரிப்பில் இருந்தும்
மூங்கில் ஓட்டை வழியாக வரும்!
**
மயிலின் தோகையில் இருந்தும்
மலர்களின் மடியினில் இருந்தும்
நிலவின் புன்னகையில் இருந்தும்
வான வில்லின் வர்ணங்களில் இருந்தும்
தேனியின் தொட்டில்களில் இருந்தும்
சிப்பியின் இதழ்விரித்தும் வரும்!
**
இன்னும்!
அனாதையின் இதயம்
சிலிர்க்கும் வரையும்
மின்னல் இடித்து வானம்
முழங்கும் வரையும்
விட்டில் பூச்சியினது
கடைசி நிமிடத்தினில்
இருந்தும் வரும் அது!
றிப்காஸ் றிஸ்மி, பொத்துவில்–03.

## உன் பிரிவில்

அழுவதற்குக் கண்ணீர்
இல்லை...
இதயமே கண்ணீரில்
மூழ்கி விட்டதால்..

சந்தோஷத்தை எங்கே
தேடுவது...?
என் சந்தோஷமே
நீயாக இருப்பதால்

வேறு பாதைகள்
தென்படவில்லை...
என் பாதை உன்
பக்கமாக இருப்பதால்

இறந்த காலத்தையே
நினைவூட்டுகிறேன்
எதிர்காலம் ஒன்று
இல்லாததால்
சுல்பியா– அக்குறணை, கண்டி.

## தேன் கிண்ணம்

## சுதந்திர வாழ்க்கைக்காக...

உயிர்வாழ
உத்தரவாதமில்லாத போது
உயிராசை எனக்கில்லை!

உலகின்
ஆடம்பரங்கள்
எமக்கு உரித்தில்லை!

சகலதும்
இழந்து விட்டதால்
ஓட்டாண்டி வாழ்க்கை!

நிதர்சனத்தில்
நீதியின் நிழலும்
கிடைப்பதில்லை!

காலையில்
கடவுளிடம் வேண்டினேன்
சிறை வேண்டாம்!

நான்
சோகங்களின்
சொந்தக்காரன்!

இனி
எம் சந்ததிகளாவது
சுதந்திர பிரசைகளாகட்டும்!
எம்.இஸட்.எம். பைஸீன்,
களுத்துறை தெற்கு.

## கிரிக்கெட் வீரர்களின் அதிரடியான சம்பளப் பட்டியல்


அசாருதீன்

| வீரரின் பெயர் | இதுவரை விளையாடிய மேட்சுகள் | வேலை பார்க்குமிடம் | கிடைக்கும் மாத சம்பளம் | வருடத்திற்கு விளம்பரம் மூலம் கிடைப்பது | செய்யும் விளம்பரங்கள் |
|---|---|---|---|---|---|
| அசாருதீன் (வயது–34) | 295 | ஸ்டேட் பாங்க்–ஐதராபாத் | 64,000 | 11.2 கோடி | பெப்சி, ரிபோக், ஓ.சி.எம். சூட்டிங், வில்ஸ். |
| டெண்டுல்கர் (வயது–25) | 210 | சன்கிரேஷ்–மும்பை | 120,000 | 16 கோடி | எம். ஆர்.எ.ஃப்., கோகோ கோலா, பூஸ்ட், பிலிப்ஸ், விசாகார்டு, |
| கும்ப்ளே (வயது–28) | 180 | கெம்பிளாஸ்டு–சென்னை | 72,000 | 4.8 கோடி | ரிபோக், வில்ஸ். |
| ஸ்ரீநாத் (வயது–27) | 160 | ஏர்–இந்தியா–ஐதராபாத் | 64,000 | 6.4 கோடி | வில்ஸ், கோக், ரிபோக் |
| கங்குலி (வயது–25) | 90 | டெல்கோ–கல்கத்தா | 80,000 | 8 கோடி | கோக், வில்ஸ், கிங் பிஷர். |
| டிராவிட் (வயது–25) | 110 | இந்தியா சிமெண்ட்ஸ்–சென்னை | 64,000 | 8 கோடி | கோக், வில்ஸ், நிப்போ |
| மோங்கியா (வயது–28) | 190 | சன் கிரேஷ்–மும்பை | 64,000 | 4.8 கோடி | வில்ஸ், ரிபோக், கோக், ஃபோர் ஸ்கொயர். |
| பிரசாத் (வயது–28) | 160 | டெல்கோ–பெங்களூர் | 64,000 | 8 கோடி | ஃபோர் ஸ்கொயர், வில்ஸ், கிங் பிஷர். |
| ராபின் சிங் (வயது–33) | 70 | இந்தியா பிஸ்டன்–சென்னை | 64,000 | 3.2 கோடி | வில்ஸ், ரிபோக். |
| சித்து (வயது–34) | 240 | பஞ்சாப் மின்சார சபை–பஞ்சாப் | 56,000 | 6.4 கோடி | வில்ஸ், ரிபோக், சூயிங்கம். |
| ஜடேஜா (வயது–26) | 160 | ராஜவம்சம் | அரசு மானியமாக வருடத்திற்கு 48கோடி கிடைக்கிறது. | 8 கோடி | க்ளோஸப், பூஸ்ட், வில்ஸ், ரிபோக், பெப்சி, காட்பரி சாக்லேட். |
| லட்சுமணன் (வயது–25) | 30 | ஏர் இந்தியா–ஐதராபாத் | 48,000 | 1.6 கோடி | வில்ஸ், ரிபோக். |
| அகார்கர் (வயது–20) | 20 | சன் கிரேஷ்–மும்பை | 64,000 | 1.6 கோடி | வில்ஸ், ரிபோக் |
| மொகந்தி (வயது–21) | 40 | டெல்கோ–கல்கத்தா | 48,000 | 3.2 கோடி | டெல்கோ, வில்ஸ், ரிபோக். |
| சவுகான் (வயது–30) | 140 | சன்கிரேஷ்–மும்பை | 56,000 | 4.8 கோடி | வில்ஸ், ரிபோக், ஃபோர் ஸ்கொயர். |
| ராஜு (வயது–28) | 130 | டெல்கோ–ஐதராபாத் | 56,000 | 8 கோடி | வில்ஸ், ரிபொக், பெப்சி |
| கனிட்கர் (வயது–23) | 30 | சன் கிரேஷ்–மும்பை | 48,000 | 1.6 கோடி | வில்ஸ், ரிபோக் |
| ஹர்பஜன் சிங் (வயது–17) | 15 | கெம்பிளாஸ்டு–சென்னை | 40,000 | 1.6 கோடி | வில்ஸ், ரிபோக் |
| காம்ப்ளி (வயது–26) | 140 | சன் கிரேஷ்–மும்பை | 64,000 | 3.2 கோடி | வில்ஸ், ரிபோக், டி.வி. |


கங்குலி


ஜடேஜா


டிராவிட்



## இருடல் ஈருயிர் / இருப்பது சுலபம்

உள்ளம் இரு போதும்
உருக்குலைவதில்லை.
உண்மை அர்த்தம்
அதுவன்று,
தெருக்கோலம் வந்து
தீண்டுவதாலே
திசைமாறி
விடுகிறதே!

ஈருடல் ஓருயிர்
இருப்பது அபூர்வம்.
ஓருடல் ஈருயிர்
இப்பது சுலபம்
தாயினுள்சேய்
தங்குவதே
தரமான உதாரணம்
ஆகிடுதே!

'கண்' என்ற ஈரெழுத்தில்
கன செய்தியுண்டாம்
'கண்ணி' என்ற மூவெழுத்தில்
கதிகலங்கவைக்கும்!
எழுத்தென்னமாறின்
இயல்பான மாற்றம்
வேரூன்றி இருக்க
இன்னுமா வழியில்லை!

ஓருயிர் ஓருயிரை
நேசிக்கும் வேளை
பார்வைகள் பலவிதம்
பதங்கெட வைக்கும்
இதுவல்லோ சமூகம்
இதுவா நம் சமூகம்?
யாருக்கு யார்?
பதில் சொல்ல வேண்டும்.

ஒன்றுக்கு ஒன்றை
இழப்பதென்பது
இயல்பாகத்
தோன்றின்!
கன்றுக்குத் தாயேன்?
கண்ணுக்கு விழியேன்?
காதலுணர்வேன்?
பெண்ணுக்கு 'மை'யேன்?

பேதமை கொண்ட
எம்முள்ளம்
பேதலித்துப் பேதலித்துப்
பிதற்றுகின்றது!
உண்மையன்பும்
உருவமற்ற உணர்ச்சியும்
ஒன்றிய பின்னர்
ஒத்தனம் தேவையா?
சரா,யாழ்ப்பாணம்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எம். மசாஜிதீன்,
வயது: 22
முகவரி: 171, கோன்வெவ
வீதி, கஹப்பஹதிகிலிய.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
கே. வசந்தமலர்,
வயது: 21
முகவரி: 176/1,
லோவர் வீதி, உவர்மலை,
திருமலை.
பொழுது போக்கு:
ரீ.வி., பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(12.07.1998 தொடக்கம் 18.07.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மிதுனம் - சூரியன், செவ்வாய், வெள்ளி.
கர்க்கடகம் - புதன்.
சிம்மம் - இராகு.
கும்பம் - கேது.
மீனம் - வியாழன்.
மேடம் - சனி.

சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: — சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)
**ஞாயிறு**- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. பகல் 12 மணி
**திங்கள்**- தொழில் விருத்தி, மனக்கலக்கம். பி.ப. 1 மணி
**செவ்வாய்**- வீண் முயற்சி, செலவு மிகுதி. பி.ப. 2 மணி
**புதன்**- இனசன நன்மை, தொழில் இலாபம். பகல் 11 மணி
**வியாழன்**- பெரியோர் உதவி, பணவரவு. மு.ப. 10 மணி
**வெள்ளி**- பயனுள்ள செயல், கௌரவமிகுதி. பகல் 11 மணி
**சனி**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். பி.ப. 2 மணி
**அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3**

### இடபம்: — சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
**ஞாயிறு**- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். பகல் 11 மணி
**திங்கள்**- தொழில் உயர்ச்சி, பணவரவு. பி.ப. 2 மணி
**செவ்வாய்**- இனசன நன்மை, பலவிதபேறு. மு.ப. 10 மணி
**புதன்**- பெரியோர் சுகம், கௌரவம். பி.ப. 2 மணி
**வியாழன்**- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. பகல் 12 மணி
**வெள்ளி**- வீண்குறைகேட்டல், மனக்கலக்கம். மு.ப. 10 மணி
**சனி**- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. பி.ப. 1 மணி
**அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மிதுனம்: — சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
**ஞாயிறு**- முயற்சி பலிதம், காரியானுகூலம். மு.ப. 10 மணி
**திங்கள்**- இனசன உதவி. தொழில் சிறப்பு. பி.ப. 2 மணி
**செவ்வாய்**- பெரியோர் சகவாசம், காரியானுகூலம். பகல் 11 மணி
**புதன்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. பி.ப. 1 மணி
**வியாழன்**- வீண் முயற்சி, செலவு மிகுதி. பகல் 12 மணி
**வெள்ளி**- தொழில் கஷ்டம், மனக்கவலை. பகல் 11 மணி
**சனி**- பொருள் சேதம், உறவினர் கலகம். பகல் 12 மணி
**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### கர்க்கடகம்: — சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)
**ஞாயிறு**- வீண் முயற்சி, காரியத் தடை. பி.ப. 1 மணி
**திங்கள்**- தொழில் உயர்ச்சி. பணச் செலவு. பகல் 12 மணி
**செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. மு.ப. 10 மணி
**புதன்**- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். பகல் 11 மணி
**வியாழன்**- தொழில் சிறப்பு, பண வரவு. பி.ப. 2 மணி
**வெள்ளி**- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. பி.ப. 3 மணி
**சனி**- தொழில் மந்தம், கடன்படல். பகல் 11 மணி
**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### சிம்மம்: — சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
**ஞாயிறு**- சுபகாரிய மகிழ்ச்சி, பெரியோர் உதவி. பகல் 11 மணி
**திங்கள்**- தொழில் உயர்ச்சி, கௌரவமிகுதி. பி.ப. 2 மணி
**செவ்வாய்**- இனசன நன்மை, பெரியோர் சுகம். மு.ப. 10 மணி
**புதன்**- பயனுள்ள செயல், பண வரவு. மு.ப. 9 மணி
**வியாழன்**- தொழில் மந்தம், செலவு மிகுதி. பகல் 11 மணி
**வெள்ளி**- வீண் முயற்சி, பிரயாணமிகுதி. பி.ப. 2 மணி
**சனி**- அந்நியர் உதவி. கௌரவமிகுதி. பகல் 12 மணி
**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4**

### கன்னி: — சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
**ஞாயிறு**- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. பகல் 11 மணி
**திங்கள்**- வெளியிடப் பயணம், காரியானுகூலம். மு.ப. 10 மணி
**செவ்வாய்**- மனக்குறை நீங்கும், பணவரவு. பி.ப. 2 மணி
**புதன்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. பி.ப. 1 மணி
**வியாழன்**- பயனுள்ள செயல், கௌரவ மிகுதி. மு.ப. 10 மணி
**வெள்ளி**- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. பகல் 11 மணி
**சனி**- முயற்சி பலிதம், வீண்குறை கேட்டல். மு.ப. 10 மணி
**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

### துலாம்: — சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
**ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவதிகம். பகல் 11 மணி
**திங்கள்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. மு.ப. 10 மணி
**செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. பி.ப. 1 மணி
**புதன்**- பணவரவு, காரியானுகூலம். பி.ப. 2 மணி
**வியாழன்**- தொழில் சிறப்பு, இனசன நன்மை. பகல் 12 மணி
**வெள்ளி**- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். பி.ப. 2 மணி
**சனி**- அந்நியர் சகவாசம், பணச்செலவு. மு.ப. 10 மணி
**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### விருட்சிகம்: — சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
**ஞாயிறு**- பெரியோர் உதவி, காரியானுகூலம். பகல் 11 மணி
**திங்கள்**- உயர்ந்த நிலை, பணவரவு. மு.ப. 10 மணி
**செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். மு.ப. 10 மணி
**புதன்**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம். பி.ப. 2 மணி
**வியாழன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். பி.ப. 1 மணி
**வெள்ளி**- புதிய முயற்சி, பணச் செலவு. மு.ப. 10 மணி
**சனி**- வீண் செலவு, பணக்கஷ்டம். பி.ப. 1 மணி
**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### தனு: — சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
**ஞாயிறு**- தொழில் மந்தம், உறவினர் பகை. மு.ப. 10 மணி
**திங்கள்**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. பகல் 11 மணி
**செவ்வாய்**- வெளியிடப் பயணம், காரியானுகூலம். மு.ப. 9 மணி
**புதன்**- தொழில் சிறப்பு, பணவரவு. பி.ப. 2 மணி
**வியாழன்**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். பி.ப. 1 மணி
**வெள்ளி**- அந்நியர் சகவாசம், கௌரவ மிகுதி. பகல் 12 மணி
**சனி**- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. பி.ப. 2 மணி
**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5**

### மகரம்: — சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
**ஞாயிறு**- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. பி.ப. 2 மணி
**திங்கள்**- முயற்சி பலிதம், காரியானுகூலம் பகல் 11 மணி
**செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. பி.ப. 2 மணி
**புதன்**- மனக்கிலேசம், தேகசுகம் பாதிப்பு. பி.ப. 1 மணி
**வியாழன்**- அந்நியர் உதவி, பலவிதபேறு. பகல் 12 மணி
**வெள்ளி**- பெரியோர் சகவாசம், காரியானுகூலம். மு.ப. 11 மணி
**சனி**- தொழில் மந்தம், அந்நியர் உதவி. பி.ப. 2 மணி
**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

### கும்பம்: — சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
**ஞாயிறு**- முயற்சி பலிதம், செலவு மிகுதி. பி.ப. 1 மணி
**திங்கள்**- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. பி.ப. 2 மணி
**செவ்வாய்**- உறவினர் உதவி, பணவரவு. மு.ப. 10 மணி
**புதன்**- வெளியிட வாசம், பணச்செலவு. பி.ப. 2 மணி
**வியாழன்**- பிரயாண மிகுதி, காரியானுகூலம். மு.ப. 10 மணி
**வெள்ளி**- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. பி.ப. 2 மணி
**சனி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். பி.ப. 1 மணி
**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1**

### மீனம்: — சுப நேரம்
(பூரட்டாதி நாலரங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
**ஞாயிறு**- பெரியோர் சுகம், காரியானுகூலம் மு.ப. 10 மணி
**திங்கள்**- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. பகல் 12 மணி
**செவ்வாய்**- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. மு.ப. 10 மணி
**புதன்**- பெரியோர் பகை, காரியத்தடை பகல் 11 மணி
**வியாழன்**- துயர் நீங்கும், தேகசுகநன்மை. பி.ப. 2 மணி
**வெள்ளி**- பணவரவு, மனமகிழ்ச்சி. மு.ப. 10 மணி
**சனி**- தொழில் மந்தம், வீண் மனஸ்தாபம். பகல் 11 மணி
**அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**



படிப்பகம்

www.padippakam.com

# சிறகுகளை முறிக்காதீர்கள்!



சின்னஞ்சிறு குழந்தைகள் நடக்க ஆரம்பித்ததும் சுதந்திரமாக ஓடி ஆடித்திரியவே விரும்புகின்றனர். அவர்களுடைய தன்னிச்சையான நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தவோ மட்டுப்படுத்தவோ முற்படுவோமானால் அக்குழந்தை அவற்றை மீறிப் பாய்ந்து ஓடவே துடிக்கும். சிறு பராயத்திலேயே அவர்கள் சுதந்திர நாட்டம் கொண்டவர்களாகவே விளங்குவர்.

கால்போன போக்கில் ஓடிப்போகும் குழந்தையை அப்படியே விட்டுவிட முடியுமா? எங்காவது போய் முட்டிமோதிக் கையைக் காலை உடைத்துக் கொண்டால் என்ன செய்வது?

குழந்தைகளின் சுதந்திர உணர்வை அடக்க நினைப்பது அக்குழந்தையின் உள வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும் என்று குழந்தைகளின் மனோநிலைகளை ஆராய்ந்துவரும் நிபுணர்கள் கூறுகின்றனர். அதேவேளை ஓரளவு கட்டுப்பாடும், அவசியம்தான் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நகர்ப்புறங்களில், சிறு சிறு குடியிருப்புக்களில் வசிப்பவர்களின் குழந்தைகள் நடமாடித் திரிவதற்கு ஏற்ற இடவசதி இருப்பதில்லை. விசாலமான வீடு வளவுகள் உள்ளவர்களுக்கு குழந்தைகள் ஓடி ஆடித்திரிவதற்கு ஏற்ற இடவசதி உண்டு. கிராமப்புறங்களிலும் பெரிய வளவுகள் இருப்பதனால் பிரச்சனை இல்லை.

குறிப்பாக பல குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் குடியிருப்புக்களில் ஓடி ஆடித்திரியும் குழந்தைகளால் பெற்றார்களுக்கிடையில் பிரச்சனைகள் எழுகின்றன. இத்தகைய சிக்கல்கள் எழும்போது, விரக்தியடையும் தாய்மார், குழந்தைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு-அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு-அடியும் உதையும் கொடுப்பதையே நாம் அவதானிக்க முடிகிறது.

வளரும் குழந்தைகளின் சுதந்திர உணர்வுக்கு இடமளிக்க விரும்பும் பெற்றார் சில வழி முறைகளைப் பின்பற்றலாம்.

ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சிறிசுகளை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள பூங்காவிற்கோ அல்லது திறந்த வெளிக்கோ போய், அவர்கள் ஓடி ஆடி விளையாட வாய்ப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இது சாத்தியப்படாவிட்டால், வாரத்தில் ஓரிரு முறையாவது இதனைச் செய்யலாம்.

அயல் வீடுகளிலுள்ள உங்கள் பிள்ளையின் பராயத்திலோ சற்று முன்னர்-பின்னர் கூடிய வயதிலுள்ள பிள்ளைகளை ஒன்று சேர்த்து வைத்து, விளையாட்டுப் பொருட்களை வைத்துக்கொண்டு விளையாட வைக்கலாம்.

இவை இரண்டும் சாத்தியப்படாவிட்டால், தாயோ, தகப்பனோ, குறுகிய உங்கள் இல்லத்துள் உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து நீங்களும் விளையாட வேண்டியதுதான்!

ஆனால், பிள்ளைகள் தொந்தரவு செய்கிறார்களே என்று அவர்களைத் திட்டித் தீர்க்கவோ, தண்டிக்கவோ முற்பட்டு விடாதீர்கள்!

# புடவைக் கடைக்குச் செல்ல முன்னர்...!



காலத்துக்குக் காலம் உடையலங்காரப் பாணிகள் மாறிக் கொண்டே வருகின்றன. பாட்டிமார் காலத்தில் அதிக நீளமுள்ள-6 யார்களுக்கு மேற்பட்ட புடவையை, அழகாகக் கொய்தகம் வைத்து உடுத்துவார்கள். வீட்டிலும் புடவைதான் கட்டுவார்கள்.

திருமண வீடு மற்றும் மகிழ்ச்சிகரமான வைபவங்களுக்கு மட்டும் பட்டுப் புடவை கட்டுவார்கள். கோயில்களுக்குச் செல்லும் போது அதிக ஆடம்பரமில்லாத நடுத்தரமான புடவையைத் தேர்ந்தெடுப்பார்கள். வீட்டில் சாதாரணமாகப் பருத்திப் புடவைகளே உடுத்துவார்கள்.

இக் காலத்தில் புடவைகள் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டுவிட்டன. சல்வார் கமிஸ், பஞ்சாபி, சுடிதார் போன்ற வட இந்திய உடைகள்தான் எங்கும் பயன்படுத்தப்படுகின்றன. தென் இந்தியாவிலும் சரி நம் நாட்டிலும் சரி, புடவைகள் பிடித்திருந்த இடத்தை வட இந்தியப் பாணி உடைகள் ஆக்கிரமித்துக் கொண்டன.

சுடிதார், சல்வார் கமிஸ் போன்ற உடைகள் மலிந்து விட்டமையினால் இன்று பெண்கள் அவற்றையே விரும்பி அணிய ஆரம்பித்துவிட்டனர்.

வட இந்திய உடைகள் நம்மவர்கள் எல்லோருக்குமே அழகு தருகின்றனவா? அது தானில்லை.

மிகவும் மெல்லிய-குச்சிபோன்றவர்களுக்கு பெரும்பாலும் இவை பொருந்தாது. அதேபோல் அதிக தடிப்பமான பெண்களுக்கும் பொருந்தாமல் அவலட்சணமாகவே இருக்கும். நடுத்தர உயரமும்-பருமனும் உடையவர்களுக்குத்தான் இவ்வுடைகள் கச்சிதமாக இருக்கும்.

அதிக சிவப்பும் அதிக கருமையும் இல்லாமல், பொது நிறமுடைய பெண்கள் எந்த வர்ண உடையிலும் எடுப்பாகக் காட்சி தருவர். ஓரளவு தடித்த உடலுடைய பெண்கள் கடும் வர்ண உடைகளைத் தவிர்த்து மென்மையான வர்ண உடைகளைப் பயன்படுத்தலாம்.

'புதிதாக ஒரு பாணி உடை கடைகளுக்கு வந்துவிட்டது; எல்லாப் பெண்களும் அவற்றை வாங்கி அணிகிறார்கள்' என்று விளம்பரத்தைக் கண்டு விரைந்தோடி-நமது உடலுக்கும் மேனி வண்ணத்துக்கும் பொருத்தமில்லாத உடைகளை வாங்கிப் பணத்தை வீணடிக்காதீர்கள். உடைகளை கடைகளில் வாங்கச் செல்லும்போது, உங்களுடைய உண்மையான சினேகிதியை உடன் அழைத்துச் செல்லுங்கள். அவர் உங்களைப் பற்றிய உண்மையான விமர்சனம் செய்யக் கூடியவராக இருந்தால் மட்டுமே நீங்கள் தெரிவு செய்யும் உடை உங்களுக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்பதை உள்ளபடி எடுத்துரைப்பார்!


பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை EA

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-07-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




# கண்ணீரில் கரைந்த இரவுகள்

புவனா

சாள்ஸின் தந்தையான எடின்பரோ கோமகனுக்கு டயானா எழுதிய கடிதத்தை அடுத்து அரச குடும்பம் உஷாரானது.

சட்டத்தரணியின் ஆலோசனைப்படிதான் டயானா கடிதம் எழுதியுள்ளார் என்பதை



புரிந்துகொண்டு கடும் கோபமடைந்தனர் அரச குடும்பத்தினர்.

அதனையடுத்து டயானாவை அரண்மனைக்குள் முடக்கி வைத்திருக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

அரண்மனைக்குள் டயானாவுடன் நெருங்கிப்பழகுபவர்களை கண்காணிக்க பணியாளர்கள் சிலரை உளவாளிகளாக மாற்றினர்.

டயானாவின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டன.

அரச பாதுகாப்பு அணி என்பது அரச குடும்பத்தினருக்கு பாதுகாப்பளிப்பதற்கான விசேஷ பிரிவாகும்.

அந்த அணியிடம் டயானாவை கண்காணிக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டது.

அந்த அணிக்குள் டயானாவுக்கு ஆதரவானவர்களும் இருந்தனர். அவர்கள் டயானாவுக்கு தகவல் கொடுத்து விட்டனர். அவர்கள் டயானாவின் அழகுக்கு ரசிகர்கள்.

டயானா விழித்துக் கொண்டார். தன்னைக் கண்காணிக்கும் அரச குடும்பத்தினருக்கு தண்ணிகாட்ட முடிவு செய்தார்.

கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டிருந்த தனது கடிதங்களைக்கூட மறுபடி பொறுக்கி எரித்து அழித்தார்.

டயானாவின் இச்செயல் உளவாளிகள் மூலம் மகாராணியின் காதுக்குப்போனது.

அந்தக் கடிதங்களில் அப்படி என்னதான் இருந்திருக்கும்? என்று மகாராணி மூளையைக் குடைந்து கொண்டிருந்தார்.

உண்மையில் அவை எல்லாம் சாதாரண

மறுமுனையில் உள்ளவருடன் உரையாடினார் டயானா.

அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் அறிய முடியாமல்தான் ஒட்டுக்கேட்டவர்களுக்கு மண்டை காய்ந்தது.

"இளவரசி சங்கேத வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். ஒட்டுக் கேட்கப்படும் தகவல் அவருக்கு எட்டி விட்டது." என்று மகாராணிக்கு கூறப்பட்டது.

எங்கும் டயானாவுக்கு தகவல் தர ஆட்கள் இருக்கிறார்கள் என்பது மகாராணிக்கு மேலும் எரிச்சலை ஏற்படுத்தியது.

"டயானா லேசுப்பட்ட பெண்ணல்ல, அப்பாவிபோல வெளிக்கு தோற்றமளித்தாலும் விஷயக்காரி" என்பதை மகாராணி உள்ளூர ஒப்புக்கொண்டார்.

## மீண்டும் கில்பி

இக் கட்டத்தில் மறுபடி ஜேம்ஸ் கில்பியுடன் டயானாவுக்கு நட்பு ஏற்பட்டது.

ஜேம்ஸ் ஹெவிட்டுடன் டயானா காதல் வசப்பட்டு இருந்தபோது ஜேம்ஸ் கில்பி ஒரு தடவை தொடர்பு கொண்டிருந்தார்.



சாள்ஸின் நண்பர்களுக்கும் இந்த விடயம் இரவோடு இரவாகத் தெரியவந்தது.

டயானாவின் பெயரைக் கெடுக்க தக்க சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துவிட்டது என்று அவர்கள் புளகாங்கிதமடைந்தனர்.

இலண்டனில் உள்ள முக்கிய பத்திரிகைகளுக்கு இரகசியமாக தகவல் பறந்தது.

மறுநாள் காலையில் இருந்தே பத்திரிகையாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் குறிப்பிட்ட இடத்தை சுற்றி சந்தேகம் வராத வகையில் நடமாடத் தொடங்கினர்.

அவர்கள் எதிர்பாராத மாற்றம் ஒன்றை டயானா செய்திருந்தார்.

.:.போனில் கில்பியின் குரலைக் கேட்டதும் டயானா உணர்ச்சி வசப்பட்டு பேசிமுடித்துவிட்டார்.

பின்னர்தான் தானும் கில்பியும் பேசிக் கொண்டதெல்லாம் ஒட்டுக் கேட்கப்பட்டு இருக்கலாம் என்பது நினைவுக்கு வந்தது.

மறுநாள் காலையில் தன் காரில் புறப்பட்ட டயானா நேராக தன் சிநேகிதி வீட்டுக்குப் போனார். அங்கிருந்தபடி கில்பிக்குப் .:.போன் செய்தார்.

டயானாவின் சிநேகிதி வீட்டுச் சாவியை டயானாவிடம் கொடுத்துவிட்டு வேலைக்கு சென்றுவிட்டார்.

அங்கேயே டயானாவும் கில்பியும் நீண்ட நேரம் இருந்தனர். கில்பியைக் கண்டதும் கட்டியணைத்துக் கொண்டு டயானா அழுதுதீர்த்து விட்டார்.

டயானாவும் கில்பியும் சந்திக்கப்போவதாக கூறப்பட்ட இடத்தில் காத்திருந்த படப்பிடிப்பாளர்களும், செய்தியாளர்களும் களைத்துப் போனார்கள். ஏமாற்றமடைந்தனர்.

சாள்ஸின் நண்பர்கள் வட்டாரமும் தங்கள் திட்டம் தோல்வியில் முடிந்ததை எண்ணி கவலையடைந்தனர்.

டயானா அதி புத்திசாலிப் பெண் என்பதை சாள்ஸின் நண்பர்கள் வட்டாரமும் ஒப்புக் கொண்டது.

## மாநாடு

இளவரசர் சாள்ஸின் அந்தரங்கச் செயலாளர் ரிச்சாட் அயிலாட் சாள்ஸின் நண்பர்களை அழைத்து மாநாடு ஒன்று நடத்தினார்.

எப்படியாவது இளவரசர் சாள்ஸின் கௌரவத்தை உயர்த்த வேண்டும். அதற்கு அனைவரும் பாடுபடவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக பத்திரிகையாளர்கள் சிலரை

# வளைக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்

கடிதங்கள். அரச குடும்பத்தினரை குழப்பத்தில் ஆழ்த்த டயானா காட்டிய வேடிக்கைதான் கடித எரிப்பு.

## வேக ஓட்டம்

திடீரென்று காரில் புறப்பட்டுச் செல்லுவார் டயானா. அரச பாதுகாப்பு அணியின் கார் நிழல்போல தொடரும்.

சிறிது தூரம் மெதுவாக காரை செலுத்தும் டயானா, திடீரென்று வேகத்தை அதிகமாக்கி சீறுவார்.

பின்தொடர முடியாமல் வாகன நெரிசலுக்குள் காரைச் செருகி கலந்துவிடுவார்.

தன்னை ஒன்றுமறியாத பெண்போல நினைத்து சதி செய்பவர்களை ஆட்டிப்படைக்க வேண்டும் என்பதுதான் டயானாவின் ஒரே எண்ணம்.

"நான் பிடிவாதக்காரி. அரச குடும்ப விவகாரங்களில் நான் மூக்கை நுழைப்பதில்லை. என் விவகாரங்களில் ஏன் மூக்கை நுழைக்கிறார்கள்? நான் யார் என்று காண்பிக்கிறேன்." என்று சீற்றத்துடன் சிநேகிதிகளிடம் கூறினாராம்.

இன்னொன்றையும் தன் சிநேகிதிகளிடம் கூறினாராம்.

"நானாக விவாகரத்துக்கு கேட்டேன். தங்கள் போலிக் கௌரவத்திற்காக தர மறுக்கிறார்கள். இனிமேல் அவர்களாகத் தர வைக்கிறேன் பாருங்கள்."

தங்கள் கண்காணிப்புக்களையும் மீறி டயானா வெளித்தொடர்புகளை மேற்கொண்டு வருவது அரச குடும்பத்தினருக்கு பெரும் தலைவலியாகியது.

அரண்மனைக்குள் டயானாவுக்கு வந்த தொலைபேசியை ஒட்டுக் கேட்டவர்களுக்கு மண்டை காய்ந்துவிட்டது.

சங்கேத வார்த்தைகளைப் பயன்படுத்தி

"ஹெவிட்டை நம்பவேண்டாம். காரியம் முடிந்ததும் கழன்று கொள்ளும் ஆசாமி. ஆபத்தானவனும்கூட" என்று எச்சரித்திருந்தார்.

'பொறாமை காரணமாகக் கூறுகிறார்' என்று நினைத்து கில்பியின் எச்சரிக்கையை டயானா பொருட்படுத்தவில்லை.

ஜேம்ஸ் ஹெவிட் துரோகம் செய்த பின்னர்தான் கில்பியின் எச்சரிக்கை பொறாமையால் சொல்லப்பட்டதல்ல அக்கறையால் சொல்லப்பட்டது என்ற உண்மை தெரிந்தது.



வேறு பெயரில்தான் கில்பி அரண்மனையில் இருந்த டயானாவுடன் .:.போனில் தொடர்பு கொண்டார்.

இக்கட்டான நிலையில் இருந்த டயானாவுக்கு பரிச்சயமான கில்பியின் குரல் ஆறுதலாக இருந்தது.

உடைந்து அழுதுவிட்டார். மறுமுனையில் இருந்த கில்பி ஆறுதலான வார்த்தைகளைக் கூறினார்.

ஒட்டுக் கேட்கப்படுகிறது என்பதையும் மறக்குமளவுக்கு உணர்ச்சிவசப்பட்ட டயானா 'கில்பி' என்ற பெயரையும் உச்சரித்து தன் ஆதங்கத்தை அழுதழுது கூறினார்.

மறுநாள் சந்திப்பதற்கான இடத்தையும் இருவரும் முடிவு செய்து கொண்டனர்.

இத் தகவலை ஒட்டுக் கேட்டவர்கள் மகாராணியின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

வளைத்துக் கொண்டனர்.

மது, மாது என்பவற்றுக்கு மயங்கக் கூடியவர்களை சுலபமாக கைக்குள் போட்டுக் கொண்டனர்.

நட்சத்திர ஹொட்டல்களில் பத்திரிகையாளர்கள் மாநாடு நடத்தினர். அழகான பெண்களும் கலந்து கொண்டனர். மது வகைகள் தாராளமாகப் புழங்கின.

டயானா மனநோயாளி என்றும், இளவரசர் சாள்ஸ் உத்தமர் என்றும் மக்களை நம்பவைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

தனது பிள்ளைகள்மீது டயானா செலுத்தும் அன்பும் பிரிட்டிஷ் மக்களைக் கவர்ந்திருந்தது.

'அன்புள்ள அம்மா'வாக டயானா இருக்கிறார் என்பது அரச குடும்ப வழக்கத்திற்கு மாறானது.

அன்புள்ள அப்பா என்று சாள்ஸ் போற்றப்படத்தக்கவிதமாகவும், டயானாவை ஓரம் கட்டும் விதமாகவும் சாள்ஸின் நண்பர்களால் திட்டங்கள் தீட்டப்பட்டன. (அடுத்த வாரமும் வரும்)


இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

R. சுலோசனா,
49B, கிரீன் லேன் ட்ரைவ், பதுளை

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 09

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்





துச்சமிங் கிவர்படைகள்-பல
தொல்லைகள் கவலைகள் சாவுகளாம்;
இச்சையுற் றிவரடைந்தார்-எங்கள்
இன்னமு தைக்கவர்ந் தேகிடவே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# பேராசை பெரு நட்டம்

ஒரு கிராமத்தில் சோமு, ராமு என்ற இரண்டு நண்பர்கள் அருகருகே உள்ள வீடுகளில் வசித்து வந்தார்கள். ஏழ்மை நிலையில் இருந்த இருவரும் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் சோமு பக்கத்து ஊருக்குச் சென்றுவிட, ராமு ஒரு பழைய வீட்டை இடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான். வீட்டை இடித்துக் கொண்டிருக்கும் போது, தீப்பெட்டி போன்ற சிறிய தகரப் பெட்டி ஒன்று வந்தது. அதை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டிருந்த ராமு, வேலை முடிந்ததும் அதை வீட்டிற்குக் கொண்டு சென்றான்.

வீட்டிற்குக் கொண்டு சென்று தகரப் பெட்டியைத் திறந்தான் ராமு. வேலை செய்துவிட்டு வந்ததனால் மிகவும் பசியோடு இருந்தான். அந்தப் பெட்டியைத் திறந்ததும், பலவகையான தின்பண்டங்கள் அவன்முன் வந்து கொண்டிருந்தன. உடனே பெட்டியை மூட தின்பண்டங்கள் வருவது நின்று விட்டது.

'இது சாதாரண பெட்டி அல்ல. நினைத்ததை வரவழைக்கும் அதிசயப் பெட்டி' என்று அப்போதுதான் ராமுவுக்குப் புரிந்தது. தன் முன்னால் இருந்த தின்பண்டங்களை எல்லாம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினான் ராமு.

மறுநாள், பக்கத்து ஊரிலிருந்து திரும்பிய சோமு, ராமுவின் வீட்டுக்கு வந்தான். அங்கே ராமு விதவிதமான பலகாரங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். சோமுவைக் கண்டதும் ராமு, அவனையும் சாப்பிட அழைத்தான்.

சோமுவை உட்காரச் சொல்லிவிட்டு, வீட்டின் உள்ளே சென்று தகரப் பெட்டியைத் திறந்து விதவிதமான உணவுப் பொருட்களை வரவழைத்தான். ராமு இப்படிச் செய்வதை கதவிடுக்கின் வழியாகப் பார்த்தான் சோமு.

ராமு உணவுப் பொருட்களுடன் வர, சோமு நல்ல பிள்ளையாக வந்து உட்கார்ந்து கொண்டான். இருவரும் உணவு உண்ட பின்னர், தத்தமது வேலைகளுக்குப் புறப்பட்டனர்.

ராமு அதிசயப் பெட்டியை வீட்டின் உள்ளே வைத்துவிட்டு வெளியே சென்றான். இதைக் கவனித்த சோமு, ராமுவின் வீட்டிற்குள் புகுந்து அந்த அதிசயப் பெட்டியை எடுத்துக்கொண்டு அந்த ஊரைவிட்டு வேறு ஊருக்கு ஓடினான்.

அடுத்த ஊருக்குப்போக வேண்டுமென்றால் ஆற்றைக் கடந்து படகில்தான் போக வேண்டும். எனவே ஆற்றங்கரையில் இருந்த படகொன்றைத் திருடிக்கொண்டு அடுத்த ஊருக்குப் பயணமானான் சோமு.


நீண்டதூரம் படகில் பயணம் செய்த சோமுவுக்குப் பசியெடுக்கவே, தன்னிடமிருந்த அதிசயப் பெட்டியைத் திறந்து, தின்பண்டங்களை வரவழைத்தான். தின்பண்டங்கள் படகு முழுவதும் வந்து குவிந்து கொண்டிருந்தன.

சோமு, "போதும் நிறுத்து! போதும் நிறுத்து!" என்று சொல்லியும் இன்னும் வந்து கொண்டிருந்தன தின்பண்டங்கள்.

அதிசயப் பெட்டியை மூடினால்தான் தின்பண்டங்கள் வருவது நிற்கும் என்பது சோமுவுக்குத் தெரியவில்லை. படகு முழுவதும் தின்பண்டங்கள் நிரம்பி, படகு ஆற்றில் மூழ்கியது. சோமுவும் ஆற்றில் மூழ்கி இறந்தான்.

## அதிசயம் - ஆனால் உண்மை!






**ஜியோமெட்ரிட் புழு:**
இப்புழு தன் உடல் மீது பூ மொட்டுக்களைச் செருகிக் கொண்டு சிறிய பூமரம் போல தோன்றி, தனது எதிரிகளை ஏமாற்றுகிறது.

**கேப்யூர்:**
தென்னமெரிக்காவில் உள்ள இந்த ஆந்தை உலகில் உள்ள ஆந்தைகளிலேயே மிகச் சிறியது. ஆனால் எல்லாப் பறவைகளுக்கும் ஆணை பிறப்பிக்கக்கூடிய குரல்வளம் கொண்டது.

**ஸால் வெரனஸ்:**
இந்த மீனின் உடலில் செதில்களுக்குப் பதிலாக மயிர்கள் முளைத்திருக்கின்றன.





**சிப் மங்க்:**
அணிலைப் போலத் தோற்றமளிக்கும் இந்த விலங்கு, முயல் இனத்தைச் சேர்ந்தது. இது 'மரணக்கோப்பை' எனப்படும் 'அமனிடா' என்ற நஞ்சு மிகுந்த காளான்களை உணவாக உட்கொள்ளும். ஆனால் இதற்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

## வாரம் ஒரு நாடு

### மத்திய ஆபிரிக்கக் குடியரசு



தலைநகர்- பாங்குய்
பரப்பு- 6,22,984 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 33 இலட்சம்
மொழி- ஃபிரெஞ்ச், சாங்கோ
எழுத்தறிவு- 43%
சமயம்- கிறிஸ்தவம், பழங்குடி நம்பிக்கைக்கள்.
நாணயம்- ஃபிராங்க்
தனிநபர் வருமானம்- 440 டொலர்.

**அமைவிடம்:**
வடக்கில் சாட்டும்; கிழக்கில் சூடானும்; தெற்கில் சாயிர் மற்றும் காங்கோவும்; மேற்கில் கமரூனும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**
1960ல் ஃபிரான்ஸிடமிருந்து சுதந்திரமடைந்தது. ஆபிரிக்க நாடுகளில் முதல் பெண் பிரதமரான எலிசபெத் டொமிடின் (1975-76) இந்நாட்டின் பிரதமரே. 1976ல் அதிபர் ஜோன் பெடல் பொகாஸா தன்னை நாட்டின் சக்கரவர்த்தியாக அறிவித்தார். 1979ல் ஒரு இராணுவப் புரட்சியினால் பொகாஸா பதவியிறக்கப்பட்டார். 1981ல் மீண்டும் இராணுவக் கலவரம் ஏற்பட்டது.

**பொருளாதாரம்:**
மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பியுள்ளனர். இரத்தினக் கல், கோப்பி, மரப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.07.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 253
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 251

**பரிசுக்குரியவர்:**
பாத்திமா நிஷ்மா நஜீம்,
ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சி. பாரத்,<br>புகையிரத வீதி, கொட்டகலை. | திரேக்கா தில்லைநாதன்,<br>சைவ பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| எச். ரஜாப்தீன்,<br>கொழும்பு வீதி, பாலாவி. | பாலசூரியம் சத்தியவாணி,<br>க/மு பாண்டிருப்பு மகா வித்., பாண்டிருப்பு-01. |
| பி. தினேஸ்குமார்,<br>நு/ கிளைஸ்டல் த.வி., அக்கரபத்தனை. | நிரோசினி குசலராஜா,<br>நுவ/ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, அட்டன். |
| எம். பர்ஸான்,<br>பது/ அல்-இர்ஷாத் மகா வித்தியாலயம், ஹாலி-எல. | இசாந்தினி செல்வசுந்தரம்,<br>கேம்ரிஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |
| ஹேதுர்ஷி சந்திரகுமார்,<br>பிரவுன்சிக், மஸ்கெலியா. | செல்வி செ. சுபதர்ஷனி,<br>பரி. சாந்த கிளேயர் மகளிர் ம.வித்., வெள்ளவத்தை. |

## துவிச்சக்கரவண்டி (சைக்கிள்)

ட்ரைஸ் ஸர்ப்ரோன் என்ற ஜெர்மனியரின் மூளையில் உதித்ததே துவிச்சக்கர வண்டி. ஒருமுறை இவர் கையில் வைத்திருந்த வட்ட வடிவ நாணயம் கையிலிருந்து நழுவி கீழே விழுந்து உருண்டோடியது. உருண்டோடிய நாணயம் கீழே சரிந்து விழாமல் நேரே ஓடியதைக் கண்ட ட்ரைஸ் ஸர்ப்ரோன் வட்ட வடிவ மரச்சக்கரம் ஒன்றை அமைத்து அதில் அமர்வதற்கு இடம் இல்லாததால் இரண்டு சக்கரங்களை அமைத்து, சிறு இடைவெளியில் அதை இணைத்து அந்த சிறு இடைவெளியில் அமர்ந்து கொண்டு கால்களால் தரையை உந்தி ஓட்டினார். இதுதான் உலகில் ஓட்டப்பட்ட முதலாவது துவிச்சக்கரவண்டி.



இதன் பின், 1839ல் துவிச்சக்கர வண்டியில் பெடல், பிரேக், ஹாண்டில் பார் போன்றவற்றைப் பொருத்தி ஓரளவு இலகுவாக ஓட்டும் வகையில் வடிவமைத்தார் கிரிக்பெட்ரிக் மக்மில்லன் என்ற அமெரிக்கர்.

இதற்குப் பின் 1889ல் ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜோன் டன்லப் என்பவர் பல் சக்கரம், செயின், சீட் போன்றவற்றுடன் துவிச்சக்கரவண்டியை அமைத்துக் கொடுத்தார். இதுதான் பல்வேறு வடிவங்களுடனான மாற்றங்களுடன் இப்போது நீங்கள் ஓட்டும் துவிச்சக்கர வண்டியாக உருவெடுத்துள்ளது.

## மிகப்பெரிய தீவு

உலகிலேயே மிகப் பெரிய தீவு கிறீன்லாந்து தீவு என்பது எல்லாருக்கும் தெரியும். இது கனடா நாட்டிற்கு தென்கிழக்காக அமைந்துள்ளது. தென்கிழக்கில் அட்லாண்டிக் சமுத்திரமும்; மேற்கில் வளைகுடாவும், டேவிஸ் நீரிணையும், இதன் எல்லைகளாக இருக்கின்றன. இது டென்மார்க் நாட்டிற்குச் சொந்தமான தீவு ஆகும்.



இது 2 ஆயிரத்து 640 கிலோமீட்டர் நீளமும், ஆயிரத்து 280 கிலோமீட்டர் அகலமும் உடையது. இத்தீவின் பெரும் பகுதி பனியால் மூடப்பட்டுள்ளது. கடலோரப்பகுதி பல விரிகுடாக்களாக பிளவுபட்டிருக்கிறது.

துருவக் கரடி, துருவநரி, ஆர்க்டிக் முயல், கலைமான் முதலிய விலங்குகள் மட்டுமே உள்ளன. சுரங்கம் வெட்டுதல், திமிங்கில வேட்டை, மீன்பிடித்தல், சீல் வேட்டை ஆகியவை முக்கிய தொழில்கள் ஆகும்.

இங்கே எஸ்கிமோக்களும், டேனியர்களும் வாழ்கிறார்கள். ஆயினும் பெரும்பான்மையினர் எஸ்கிமோக்களே. இத்தீவு முழுவதும் 25 ஆயிரம் பேர்களுக்குக் குறைவானவர்களே வாழ்கிறார்கள்.

ஆர்க்டிக் சமுத்திரத்தைக் கடக்கும் விமானங்களுக்கு இத்தீவு ஒரு தங்குமிடமாக இருக்கிறது.

## ஏன் தெரியுமா?

நமது உடலில் முடிகளையும், நகங்களையும் வெட்டினால் வலிப்பதில்லை. ஆனால் ஏனைய பாகங்களை வெட்டினால் வலி ஏற்படும். இது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?



இதற்குக் காரணம் முடிகளும், நகங்களும் இறந்த செல்களினால் ஆனவை. இதனால் இவைகளுக்கு உணர்வுத்திறன் கிடையாது.

நமது தோலின் அடிப்புறத்தில் முடிகள் வளரும் சிறு சிறு குழிகள் போன்ற அமைப்புக்கள் உள்ளன. இதற்கு ரோமக்கால்கள் என்று பெயர். இங்கிருந்து வளரும் ரோமம் தோலின் மேற்புறம் அடையும்போது அதனடியிலேயே தோன்றும் 'பாலிக்கிள்' இதை மேலே பிடித்துத்தள்ள நீண்ட நூலிழை முடி தோலின் வெளியே தெரிகிறது. இதில் உணர்திறன் அறியும் நரம்புகளோ, இரத்த நாளங்களோ இல்லாததால் முடிகளை வெட்டும்போது வலிப்பதில்லை.

இதேபோல்தான் நகங்களும். விரல் முனையின் அடிப்பாகத்திலிருந்து வளரும், இறந்துபோன செல்களினால் ஆனவை இவை. இவைகள் வளர்வது போல் தெரியும். ஆனால் உண்மையில் 'கூடிக்கிள்' என்னும் அடிப்புறப்பகுதியில் புதிய செல்கள் வளர்ந்து இதைத் தள்ளுகின்றன.

## செயலாளர் பறவை

ஆபிரிக்காவில் காணப்படும் நீண்ட கால்கள் கொண்ட கறுப்புநிறப் பறவையின் பெயர்தான் செயலாளர் பறவை (SECRETARY BIRD) இதன் தலையில் உள்ள சிறகுகள் பேனா போல் அமைந்திருப்பதால் இது செயலாளர் பறவை என அழைக்கப்படுகிறது.

இவற்றின் உணவு பாம்புகளும், வயல் எலிகளும்தான். பயிர்களை நாசம் செய்யும் எலிகளையும், கொடிய பாம்புகளையும் இது அழிப்பதால் இப்பறவையை தென்னாபிரிக்க நாட்டவர்கள் தங்கள் வீடுகளில் செல்லப் பிராணியாக வளர்க்கிறார்கள்.



இப்பறவை நன்கு பறக்கக் கூடியது. இருப்பினும் இவை பறந்து சென்று இரையைப் பிடிப்பதிலும் பார்க்க நடந்து சென்று இரையைப் பிடிக்கவே பெரிதும் விரும்புகின்றன.

www.padippakam.com

## அமோக வாரம் 04

# மேற்கே ஒரு குற்றம்

### எழுத்துலக வேந்தன் சுஜாதா

விளம்பரம் வந்த மறுநாள் மாலையே கணேஷுக்கு அந்த டெலிஃபோன் வந்தது. கோர்ட்டிலிருந்து திரும்பி வந்ததும் முகம் கழுவிவிட்டு, காலையில் விட்டு வைத்திருந்த குறுக்கெழுத்துச் சதுரங்களில் ஆழ்ந்திருந்த போது டெலிஃபோன் வந்தது.

வசந்த் இல்லை.

கணேஷ் எடுத்தான்.

"கணேஷ் யாரு?"

"ஸ்பீக்கிங்."

"பணம் வேணுமா? வியாபாரம் பேசறியா?"

"பேசலாம்!"

"வரியா?"

"வரேன். எங்கே வரணும்?"

மறுபடி மௌனம். கணேஷ் காதில் டெலிஃபோனை அழுத்திக் கொண்டு பின்னணி சப்தங்கள் ஏதாவது கேட்கிறதா என்று கவனித்தான். ம்ஹும். மௌனம்தான்.

டெலிஃபோன் மறுபடி உயிர்பெற்று அந்தக் குரல், "சரி ஏற்பாடு பண்றேன்."



"நீதான் விளம்பரம் கொடுத்ததா?" ஆழமான ஆண் குரல். குரலுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கலாமோ?

"ஆமா, நான்தான்!" கணேஷின் கைகள் சற்று நடுங்கின.

"உனக்கு என்ன தெரியும்?" அதட்டல்.

"எல்லாமே தெரியும். எல்லாமே சொல்லிட்டா தீபா!" சற்று நேரம் மௌனம்.

"என்ன செய்யப் போறே?" அலட்சியம்.

"அதை நான் ஏன் உன்கிட்ட சொல்லணும்?" எங்கே போயித் தொலைந்தான் இந்த வசந்த்? சம்பாஷணையை இழுக்க வேண்டும். உடனே மற்றொரு டெலிஃபோனுக்குச் சென்று இந்த...ம்ஹும், இந்தியாவில் அது அவ்வளவு சீக்கிரத்தில் முடியுமா? டெலிஃபோன் டிபார்ட்மெண்டில் யாராவது அதிகாரிக்கு லெட்டர் எழுதி அனுமதி கேட்டு...

"இத பார் கணேஷ்: அந்த பொண்ணுக்கு ஆன கதி உனக்கும் ஆகக்கூடாதில்லை?" மிரட்டல்.

"ஆகாது...!"

என்றது!

"எப்படி?" என்றான். பதில் இல்லை. தொடர்பு அறுந்து 'விர்ர்ர்' தான் கேட்டது.

கணேஷ் சற்று நேரம் அந்த டெலிஃபோனை வெற்றுப் பார்வை பார்த்தான். திரும்ப வைத்தான். மறுபடி டெலிஃபோன் வருமா? வரவில்லை. வசந்த் வந்தான்.

"சரியான சமயத்தில் எங்கே ஒழிஞ்சேடா நீ?"

"ஏன்? என்ன பாஸ்?"

"டெலிஃபோன் வந்தது. அந்த ஆள் என்னைக் காண்டாக்ட் பண்ணிட்டான்."

"ஓ, கிரேட்! என்ன சொன்னான்?"

"வியாபாரம் பேசறியான்னு கேட்டான். வரச் சொன்னான்."

"எங்கே?"

"அது சொல்லலை. சின்னச் சின்ன வாக்கியங்களா ஒருத்தன் பேசினான். குரல் ஒரு மாதிரி இருந்தது. ஒரு கர்ச்சீப் வழியாகப் பேசறான்னு தோணித்து! வினோதமான குரல். அவன் பேசினதில் முக்கியமான விஷயம் அவன் என்னை ஒரு தடவை பயமுறுத்தினது. அந்தப் பொண்ணுக்கு ஆன கதி உனக்கும் ஆகக் கூடாதில்லை என்றது. நிச்சயம் அந்த விபத்து இவங்க நிகழ்த்தினது தான்!"

"கொஞ்சம் அபாயகரமாய் போய்க்கிட்டிருக்கு."

"பயப்படறியா?"

"பயம்னு இல்லை. பொலிஸுக்கு நாம எப்ப சொல்லப் போறோம்னுதான் யோசிச்சுக்கிட்டிருக்கேன்!"

"பொலிஸுக்கு இப்ப நாம என்ன சொல்ல முடியும்?"

"கேஸை அவங்ககிட்ட விட்டுடலாமே!"

"விடலாம். எனக்கென்னவோ இன்னும் கொஞ்சம் இதை சோலோவா வாசிக்கலாம்னு தோணுது. நிலைமை கட்டுக்கடங்காம போறபோது சட்டுனு ராஜேந்திரனுக்கு டெலிஃபோன் செய்துடலாம்... இதுவரைக்கும் ஒண்ணுமே முக்கியமா நிகழலியே. ஏதோ ஒரு அசரீரி பேசித்து. அதில் ஒண்ணும் அபாயம் இல்லையே!"

"வேற என்ன கேட்டது அசரீரி?"

"உனக்கு என்ன தெரியும்னு கேட்டான். எல்லாமே தெரியும். எல்லாத்தையும் சொல்லிட்டான்னேன். அதுக்கப்புறம் கொஞ்ச நேரம் மௌனமா இருந்துட்டு பணம் வேணுமான்னான். பேசலாமான்னான். பேசலாம்னேன். வரேன்னான். வெட்டிட்டான்."

"மறுபடி கால் வருமா?"

"வரணும்!"

வரவில்லை. ஒருமணி நேரம் காத்திருந்தார்கள்! டெலிஃபோன் மௌனமாகவே இருந்தது. புரியவில்லையே. ஒரு வேளை வேறு விதமாகத் தொடர்பு கொள்ளுவார்களோ என்னவோ!

"யோசிச்சுப் பாரு வசந்த்! அவங்க இன்ன இடத்துக்கு வான்னு செய்தி கொடுப்பாங்களா? மாட்டாங்க. ஏன்னா போற இடத்துக்கு பொலிஸ் கிட்ட சொல்லி நம்மை ஃபாலோ பண்ண நாம ஏற்பாடு செய்துடலாம் இல்லையா? இது ஒரு தேர்ந்த கோஷ்டின்னு நினைக்கிறேன். எப்படி நம்மோட தொடர்பு கொள்ளப் போறாங்கன்னு முன்னாலயே சொல்லமாட்டாங்க. சட்டுனு ஏதாவது நிகழும்னு நினைக்கிறேன். வசந்த் ஒரு விஷயம்..."

"என்ன பாஸ்?"

"இந்த விவகாரத்தை நாம இந்த இடத்திலேயே நிறுத்திட்டுக் கைகழுவிடலாம். அல்லது இந்த அபாயகரமான விளையாட்டைத் தொடர்ந்து விளையாடிப் பார்க்கலாம். என்ன சொல்ற?"

"பாத்துறலாம் பாஸ். நீங்க பக்கத்தில் இருந்தா எனக்குப் பயமில்லை. என்ன ஆய்டும்?"

"தட்ஸ் தி ஸ்பிரிட்."

"துப்பாக்கி ஏதாவது வேணுமா?"

"தேவையில்லை. இது போதும்." என்று நெற்றியில் தொட்டுக் காட்டினான்.

இரவு எட்டு மணி சுமாருக்கு அவர்கள் இருவரும் அலுவலகத்தை விட்டு வெளிவந்து நடந்து சாப்பிடச் சென்றார்கள். இனி டெலிஃபோன் வராது.

சந்தில் இருட்டில் நடந்தார்கள். ஒரு சைக்கிள் ரிக்ஷா சமீபத்தில் மோட்டார் பொருத்தப்பட்டு சர்ர்ர்... என்று சென்று கொண்டிருந்தது. ஒரு சிறுவன் ஒரு தீபாவளி வெடியைப் பற்றவைத்துவிட்டு அதன் திரி உள்ளே வரை பொறிப் பொறியாகப் பேசிவிட்டு 'கம்' என்று இருக்க, அந்த சஸ்பென்சில் அருகில் போகலாமா என்று உதறிக்கொண்டிருந்தான். ஒரு சிறிய டெலிவரி வேன் நின்று கொண்டிருந்தது.

"ஸார் கொஞ்சம் இந்தப் பெட்டியைப் புடிக்கிறீங்களா?" என்று அருகில் நின்ற ஒரு ஆள் வேண்டிக் கொண்டான்.

அந்த வண்டியின் பின்புறத்திலிருந்த பெட்டியை நகர்த்த முடியாமல் அவன் திணறிக் கொண்டிருந்தான்.

வசந்த் பக்கவாட்டில் ஏறிக்கொண்டு உதவி செய்தான். கணேஷ் வெளியே நின்று கொண்டிருக்க சடுதியில் அது நிகழ்ந்தது!

திடுதிப் என்று கணேஷ் அந்த வண்டிக்குள் உந்தித் தள்ளப்பட்டான். ஏறக்குறைய திணிக்கப்பட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். படக்கென்று கதவுகள் மூடப்பட்டன. அந்த வண்டி புறப்பட்டது.

உள்ளே இருட்டாக இருந்தது. முழுவதும் ஜன்னல் இல்லாமல் மூடப்பட்ட வண்டி அது. கணேஷ். "மைகாட் வசந்த்!" என்று கத்தினான்.

"இங்கே இருக்கேன் பாஸ்!" என்று அலறினான் வசந்த்.

வண்டி வேகம் பிடித்தது. திரும்பியது. கணேஷ் பெட்டியின் மேல் மோதிக் கொள்ள முழங்கால் வலித்தது.

'மைகாட் அகப்பட்டுக்கிட்டோம்!' கணேஷ் அந்தக் கதவை ஓங்கித் தட்டினான். நல்ல வலுவுள்ள கதவு. கை வலித்தது. 'முட்முட்' என்று அடக்கித்தான் சப்தம் கேட்டது... வசந்த் சிகரெட் லைட்டரைப் பற்றவைத்தான். வண்டி ஆடி ஆடிச் சென்றது. முழுவதும் ஸீல் போட்டாற் போல மூடின வண்டி! வசந்த் டிரைவர் பக்கப் பகுதியில் ஓங்கிச் குத்தினான்.

"சும்மா இரு வசந்த். டபுள் ஷீல்ட் போட்ட வண்டி. அந்தப் பக்கம் கேக்கக்கூட கேக்காது!"

"மாட்டிக்கிட்டோம் பாஸ்! என்ன செய்யறது?"

"பேசாம உக்காந்துக்க, ஸவாரி பண்ணு. ஒண்ணும் செய்யமுடியாது!"

"எக்கச்சக்கமா கொன்னுகின்னு போட்டுடுவாங்களா?"

"இதபார், அவங்க ரெண்டுபேர். நாம ரெண்டுபேர். இப்போதைக்கு வண்டி மூடிக் கிடக்குது!" கணேஷ் தன் கடிகாரத்தில் மணி பார்த்தான் 8.05. "அணைச்சிடு லைட்டரை. கொஞ்சம் கவனி. இடது பக்கம் முதல்ல திரும்பித்து! மறுபடி இன்னொரு இடது பக்கம். அப்படின்னா பாரிஸ் கார்னர் பக்கம் போயிக்கிட்டிருக்கு."

"மறுபடி திரும்பறான் பாருங்க. யூடர்ன் எடுக்கறான் இல்லை, ரைட்ல திரும்பறான்."

மறுபடி திரும்பி நின்று ரிவர்ஸ் வாங்கி திரும்பி சற்று நேரத்தில் அவர்களுக்குத் திசை புரியாமல் குழப்பமாகி விட்டது!

"வேணும்னுட்டு ரெண்டு மூணு சுத்துச் சுத்தியிருக்கான்..."

வண்டி அப்போது மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது! பஸ் ஒன்று கடக்கும் சப்தம் கேட்டது. அந்த இருட்டில் தூரம் பரிமாணங்கள் வேறு வடிவம் பெற்றன.

"வசந்த் லைட்டரைப் போடு."

கணேஷ் தன் பையில் இருந்த பர்ஸை எடுத்து அதனுள் இருந்த பத்து ரூபாய் நோட்டுக்களைப் பார்த்துக் கொண்டான். மத்தியானம் பாங்கிலிருந்து எடுத்த பணம். முன்னூறு ரூபாய் அப்படியே இருந்தது!

"என்ன பாஸ் பணத்தை எண்றீங்க!"

"எண்ணலை பார்க்கிறேன்!"

"எங்கேயோ அழைச்சிக்கிட்டுப் போறாங்க!"

"அப்பா! கண்டுபிடிச்சியே."

"வண்டியோட அப்படியே எங்காவது உருட்டிடுவாங்களா? மற்றொரு சாலை விபத்தா?"

"முழங்காலைக் கட்டிக்கிட்டு தலையை உள்ளே விட்டுக்கிட்டு கம்முனு உக்காரு. உருட்டினா தப்பிக்க அதான் ஒரே சான்ஸ்..." (தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

நமது 'அன்னபூரணி'க்கு ஏடனில் என்ன நடந்தது என்று அறிய நீங்கள் ஆவலாக இருக்கிறீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது!

ஏடனில் ஆறுமாதங்கள் எப்படிப்போனது என்பது இரத்தினசாமிக்கே ஆச்சரியமாக இருக்கிறது!

# 'அன்ன பூரணி அம்மா'

### ஈ.கே. ராஜகோபால்

றொபின்சன் அமெரிக்காவுக்குச் சென்று, கூடவே தன் மனைவி புளொறினை அழைத்துக் கொண்டு ஏடன் வந்துசேர்ந்து விட்டார்; அவருக்கு இப்போது தனி உற்சாகம்!

தம்பிப்பிள்ளைத் தண்டையலும் இலங்கையில் நீண்ட பொழுதைக் கழித்துவிட்டு ஏடன் வந்து சேர்ந்துவிட்டார்! தில்லையம்பலமும், சுப்பிரமணியமும் வந்தார்கள்!

இனியென்ன,

பயணம் தொடரவேண்டியதுதானே!

ஏடன் துறைமுகத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் 'அன்னபூரணி' நங்கூரமிட்டிருந்தாள்!

சாதனை வீரர் இரத்தினசாமியே இனிக் 'கதை'யைத் தொடர்கிறார்:

"ஆறுமாதத்தை ஏடனில் எப்படிக் கழித்தோம்? எப்படியோ பொழுதைப் போக்கினோம்!

நானும், சபாரத்தினமும், சிதம்பரப்பிள்ளையும் சமைப்போம். கப்பலுக்குள்ளேயே இருக்கும் சிறுபடகை எடுத்து, தண்ணீரில் மிதக்கவிட்டுக் கரைக்குச் செல்வோம்.

இப்படிச் செல்லும்போது, மூவரில் ஒருவர், கப்பலில் இருந்து கொள்வோம்.

சோமாலியர்கள்தான் நாம் சுற்றிச் சென்ற இடங்களில் வாழ்ந்தார்கள். பம்பாய் முதலாளிகளும் அங்கு வர்த்தகம் செய்து கொண்டிருந்தார்கள்.

பேரீச்சம்பழம் குவித்து வைத்து விற்பார்கள். நிறையஎவு வாங்கிச்செல்வோம்; வயிறு நிறைய, ஆசைதீரச் சாப்பிடுவோம்.

ஆறுமாதங்களல்லவா? வெயிலின் கொடுமைக்குப் பாயும், குந்தானும் மற்றும் உபகரணங்களும் வெடித்து, உடைந்து பழுதடைந்து போகாத வண்ணம் அவற்றைக் கழற்றி வைத்திருந்தோம். 'டென்ற்' கூடாரத்தைக் கப்பலுக்குப் பாதுகாப்பாகப் போட்டிருந்தோம்.

பதினைந்து நாட்களில், பயணத்தைத் தொடர்வதற்கு, கப்பலைத் தயாராக்கினோம்.

குந்தானும், பறுவானும் ஏற்றப்பட்டன.

அன்னபூரணி ஓடும்போருக்கு ஆயத்தமானாள்!

றொபின்சனின் உதவியாளராக ஏடன்வரை வந்த என்ஜினியர் குக் தனது ஊருக்குத் திரும்பிப் போய் விட்டார்.

தம்பிப்பிள்ளை தண்டையல் தலைமையில் நம்மவர் ஆறுபேர். றொபின்சனும், அவரது மனைவி புளொறினும் எட்டுப்பேருடன் அன்னபூரணி-நீண்ட கால ஓய்வுக்குப்பின் புறப்பட்டாள்.

செங்கடல்-

சிலவாரங்களில் சூடானைச் சென்றடைந்தோம்.

சூடானைப் பற்றிச் சொல்ல வேண்டாமா?

சூடான இடம்தான்! ஆயினும் ஏடனைவிடச் சூடு சற்றுக் குறைவுதான்.

றொட்டியும், பேரீச்சம்பழமும், கொண்டல் கடலையும், வேண்டியளவு கிடைக்கும்.

அராபியர்கள்தான் இங்கு வாழ்கிறார்கள்.

சூடானில் நாற்பது நாட்களைக் கழித்தோம்.

அடுத்து-

சுயெஸ்! சுயெஸைப்போய்ச் சேர்வதற்கு எவ்வித கஷ்டமுமிருக்கவில்லை!

சூடானில் சூடான சுவாத்தியத்தை அனுபவித்து அலுத்து அலுத்துப்போன எங்களுக்கு சுயெஸ் உடலுக்கும், உள்ளத்துக்கும் குளிர்ச்சியைத் தந்தது!

ஆறுவாரங்கள் சுயெஸை சுற்றியடித்தோம்; அதன் குளிர்ச்சியில் எம்மை மறந்து இருந்தோம்.

அங்கிருந்து இஸ்மாலியா துறைமுகத்துக்குச் சென்றோம்.

சுயெஸிலிருந்து சுயஸ் கால்வாய்க்குள்ளேயே நேராக நுழைய வேண்டும்.

120 மைல்!

அதாவது சுயஸ் கால்வாயின் நீளம்தான் அது! ஒரே நேரத்தில் ஒரு பெரிய கப்பல்தான் அந்தக் கால்வாயால் செல்ல முடியும். அவ்வளவு குறுகிய அகலம் கொண்டது சுயஸ்கால்வாய்!

மற்றொரு கப்பல் விலத்துவதானால், ஒவ்வொரு சிலமைல் தூரத்துக்கும் 'ப'வடிவில் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன.

இரண்டு பக்கங்களிலும், வயல்களில் வேலை செய்து கொண்டிருப்பவர்களையும் இயற்கைக் காட்சிகளையும் பார்த்து இரசித்தபடியே சென்று கொண்டிருந்தோம்!

சுயஸ் கால்வாய்க்குள் நுழையும்போது, ஒரு பயிலட் ஏறிகொள்வார்; கால்வாய் முடியும்வரை அவர் கப்பலுக்குள் இருப்பார்!

குறுகிய அகலம் கொண்டதாக இந்தக் கால்வாய் இருப்பதால், பாதுகாப்பு நடவடிக்கைக்காக இப்படியெல்லாம் செய்யப்பட்டுள்ளன.

சுயஸ் கால்வாயின் நடுப்பகுதியில்தான் இஸ்மாலியா இருக்கிறது.


ஆயிரம் கதைபேசும் நைல்நதியைத் தனதாக்கி வைத்திருக்கும் எகிப்தின் துறைமுகம்தான் இஸ்மாலியா.

மன்னர் பாருக்தான் அப்போது எகிப்தை ஆண்டு கொண்டிருந்தார். மன்னர் பாருக்கின் திருமணத்தை நேரில் பார்க்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது!

இஸ்மாலியாவிலிருந்து எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவுக்கு ரயிலில்தான் செல்ல வேண்டும்.

றொபின்சனும் புளொறினும் கெய்ரோவுக்கு ரயிலில் சென்று மீண்டும் இஸ்மாலியா திரும்பினார்கள்.

## பயணம் - 10



கப்பலில் தாங்கள் இருவரும் இருப்பதாகக் கூறி, கெய்ரோவுக்கு எங்கள் ஆறுபேரையும் ரயிலில் ஏற்றிவிட்டார்கள்!

நூறு மைல் தூரம்.

கெய்ரோவில் எம்மையெல்லாம் சுற்றிக் காண்பிப்பதற்கும் தங்குவதற்கும் சகல ஏற்பாடுகளையும் றொபின்சன் அங்கு சென்றபோது எங்களுக்காகச் செய்திருந்தார்!

றொபின்சனின் ஏற்பாட்டின் படி, ரயில் நிலையத்தில் அவரது நண்பர்கள் எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார்கள்!

ஹொட்டலில் தங்கினோம்.

மன்னர் பாருக்கும், அரசியும் வீதி பவனி வந்து கொண்டிருந்தார்கள்.

கண்குளிரப் பார்த்தோம்; என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி.

எகிப்து நாட்டில் நம்மை மயங்கவைத்த இன்னொன்று-

நைல் நதி!

நைல் நதி பற்றியும், படித்தும் கேள்விப் பட்டுமிருக்கிறேன்.

நேரில் பார்த்தபோது-

அந்த அழகில் என்னையே பறிகொடுத்தேன்! நான் கவிஞனாகப் பிறந்திருந்தால் ஓராயிரம் கவிதைகள் அந்த நைல்நதியைப் பற்றிப் பாடித் தள்ளியிருப்பேன்!

நைல் நதியை என்னால் வர்ணிக்க முடியவில்லையே என்று கவலையாக உள்ளது.

மன்னர் பாருக்கின் திருமணத்தையொட்டி அப்போது நைல் நதி புதிய தோற்றமும், பொலிவும் பூண்டிருந்தது.

ஓர் இரவு அந்த நதி ஓரத்திலே இருந்து, நாங்கள் ஆறுபேரும் கதைத்த நினைவுகள்...

ஏதோ ஒரு தனி உலகத்தில் மிதந்தோம்!

வல்வெட்டித்துறையில் பிறந்த நாம், நைல் நதி ஓரத்திலே அமர்ந்திருந்து, அழகை இரசித்தோம்!

இன்னும் என் கண் எதிரே அந்த நைல் நதி ஓடிக்கொண்டுதானிருக்கிறது!

எகிப்தில் இன்னொரு அற்புதம் கண்டோம்!

உலக அற்புதங்களில் ஒன்றான பிரமிட்டுக்கள் எகிப்தில்தான் இருக்கின்றன என்பதைச் சின்ன வயதில் புத்தகத்தில் படித்திருக்கிறேன்!

இன்னும் சிறுவர்களும், பெரியவர்களும் அதனைப் பற்றிப் படித்துத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

நேரில் எத்தனைபேர் பார்த்திருப்பார்கள்?

கண்ணால் கண்டோம்! அந்த இடத்தைப் படமும் பிடித்துக் கொண்டோம்.

மியூசியம், மிருகக் காட்சிசாலை, இப்படி கெய்ரோவில் பார்த்துப் பார்த்துப் பரவசத்தில் ஆழ்ந்தோம்.

இஸ்மாலியாவுக்கு மீண்டும் வந்து சேர்ந்தோம்.

நைல் நதியின் அழகில் மயங்கி, அதன் ஓரத்திலேயே காலமெல்லாம் இருந்துவிடலாமோ என்ற ஏக்கம். இஸ்மாலியா வந்த பின்னரும் ஏக்கம் இருந்துகொண்டே இருந்தது.

என்ன செய்வது?

'அன்னபூரணி' அமெரிக்கா போய்ச்சேர வேண்டாமோ?"

(அடுத்த வாரமும்...)



படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு

## நிலவு 03

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள விறு விறு காதல் கதை.... உங்கள் இதயத்தில் இந்த கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

நிலா அந்தக் கடிதத்தில் இருந்து கிளம்பிய செண்பக வாசனையை நுரையீரல்கள் வலிக்க சுவாசித்துக் கொண்டே, கிருஷ்ணகாந்த் கிறுக்கலாய் எழுதியிருந்த கடித வரிகளின் மேல் பார்வையைப் போட்டாள்.

நிலா!

நான் கிருஷ்ணகாந்த். இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிற இந்த விநாடி வரை நீ எப்படி இருப்பாய் என்று எனக்குத் தெரியாது. அதேபோல் நீயும் என் ஃபோட்டோவைப் பார்க்க மறுத்து விட்டதாக என் வீட்டிலிருந்து தகவல் வந்தது. நாம் இருவரும் மணமேடையில் முதன் முதலாய் பார்த்துக் கொள்ளும் அந்த விநாடியில் அதிர்ச்சியடையப் போகிறோமோ அல்லது சந்தோஷப்படப் போகிறோமோ என்பது இப்போது நமக்குத் தெரியாது. உனக்கு மிகவும் பிடித்த பூ எது என்று என்னுடைய அம்மா உன்னிடம் கேட்டபோது நீ செண்பகப்பூ என்று சொன்னாயாம். எனவே அந்தப் பூ வாசனையுள்ள சென்ட்டை லெட்டரில் பூசி அனுப்பியுள்ளேன்.

நாளைக்கு உன் கழுத்தில் நான் கட்டப்போகும் உரிமையோடு உன்னிடம் ஒரு சின்னக் கோரிக்கை.

நான் உன் முகத்தைப் பார்க்காவிட்டாலும் உன் குரலைக் கேட்க விரும்புகிறேன். உனக்கும் அந்த ஆர்வம் இருக்கலாம். எனவே புதன்கிழமை இரவு இந்திய நேரப்படி பதினொரு மணிக்கு உன் வீட்டுக்கு ஃபோன் செய்கிறேன். ஃபோனுக்கு அருகில் இருக்கவும்.

இப்படிக்கு,

உரிமையோடு
உன் நாளைய
கணவன்.

நிலா கடிதத்தைப் படித்து முடித்த விநாடி பாக்யமும், சிவராஜனும் அறைக்குள் நுழைந்தார்கள். சிவராஜன் கேட்டார்.

"லெட்டர் வெளிநாட்டுத் தபால் மாதிரி இருந்தது?"

"ஆமாம்பா..."

"யார் போட்டிருக்கா..?"

"உங்க மாப்பிள்ளை..."

"மாப்பிள்ளையா...?" பாக்யம் ஒரு சின்ன அதிர்ச்சியோடு தன் வலதுகை விரல்களை மோவாய்க்கு கொண்டு வழவினாள். பின் கணவனிடம் திரும்பி கேட்டாள்,

"என்னங்க...இதெல்லாம்...?"

"எது?"

"கழுத்துக்கு தாலி வராமே லெட்டர் எழுதற பழக்கமெல்லாம் எதுக்கு...?"

சிவராஜன் மனைவியைக் கையமர்த்தி விட்டு- நிலாவை ஏறிட்டார்.

"மாப்பிள்ளை என்னம்மா எழுதியிருக்கார்...?"

"அவர் எனக்கு ஃபோன் பண்ணிப் பேசப் போறாராம். புதன்கிழமை ராத்திரி பதினொரு மணிக்கு என்னை டெலிஃபோன் பக்கத்தில் இருக்கச் சொல்லியிருக்கார்...."

பாக்யம் உச்சந்தலையில் தன் இடது கையை வைத்துக் கொண்டாள்.

"லெட்டர் போட்டது போதாதுன்னு... இது வேறவா...? என்னங்க... உங்களைத் தானே...?"

"சொல்லு..."

"மொதல்ல மாப்பிள்ளையோட அப்பாவுக்கு ஃபோன் பண்ணி இதெல்லாம் என்ன வழக்கம்னு கேளுங்க.."

சிவராஜன் புன்னகைத்தார்.

"பாக்யம்..! நம்ம காலம் மாதிரியில்லை இப்போ! எல்லாமே தலைகீழ். நம்ம காலத்தில எல்லாம் மொதல்ல கல்யாணம்; அப்புறம் ரிசப்ஷன். ஆனா இந்தக் காலத்துல மொதல் நாள் ரிசப்ஷன். அடுத்தநாள் கல்யாணம். நிலாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போற மாப்பிள்ளை ஃபாரீன்ல இருந்தவர். கொஞ்சம் அட்வான்ஸ்டாகத்தான் இருப்பார். ஃபோன் பண்ணட்டுமே! என்ன இப்போ...?"

"எனக்கு இதெல்லாம் பிடிக்கலைங்க..."

"பிடிக்கலைன்னா கண்டும் காணாத மாதிரிப் போயிடு. போய் ஆக வேண்டிய கல்யாண காரியங்களைப் பாரு..."

"பொண்ணும் அப்பாவும் எப்படியோ போங்க."

பாக்யம் நகர்ந்து அறையை விட்டு வெளியேற சிவராஜன் நிலாவைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

"லெட்டர் பெரிசா இருக்கும் போலிருக்கு. விஷயமே அவ்வளவு தானா?"

"போங்கப்பா..." நிலாவின் கன்னத்தில் ஒரு கன்னிப் பெண்ணின் வெட்கத்திற்கு தேவையான ரசாயன மாற்றங்கள் துரித கதியில் நடந்தன.



"நிலா..."

"ம்.."

"மாப்பிள்ளை கிட்ட ஃபோன்ல பேசும்போது உன்னோட விளையாட்டுத்தனமான பேச்செல்லாம் வேண்டாம். ஏன்னா மாப்பிள்ளை குணாதிசயம் எப்படின்னு நமக்குத் தெரியாது. நீ ஏதாவது கேலியாப் பேசப்போய் அது மாப்பிள்ளையோட மனசைப் புண்படுத்தவும் வாய்ப்பிருக்கு...."

"அப்பா! இந்த லெட்டரை படிச்சு பார்க்கும்போது உங்க மாப்பிள்ளை ஒரு ரிசர்வ்ட் டைப் மாதிரித் தெரியலை. மொதல் மொதலா எழுதியிருக்கிற லெட்டரிலேயே எனக்குப் பிடிச்ச செண்பகப்பூ செண்ட்டை ஸ்பிரே பண்ணி அனுப்பியிருக்கிறார்... அவர் எப்படிப்பட்டவர்னு தெரிஞ்சுக்க இது ஒண்ணு போதாதா- என்ன...?"

"என்னமோ தெரியலேம்மா... இந்தக் கல்யாணம் நிச்சயமானதிலிருந்தே எம் மனசுக்குள்ளே ஒரு இனம் புரியாத கலக்கம்."

"என்ன கலக்கம்...?"

"நீயும் சரி.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போற மாப்பிள்ளையும் சரி... ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கலை... போட்டோக்களைக் கூட பார்க்க மாட்டோம்னு பிடிவாதமா சொல்லிட்டீங்க... நாளைக்கு ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர்க்கு ஏமாற்றம் ஏற்பட்டாலும் வாழ்க்கை குடை சாய்ஞ்ச வண்டி மாதிரி ஆயிடும்..."

"அப்பா...! நீங்க மறுபடியும் பழைய சப்ஜெக்டுக்கே வந்துட்டீங்க...! நீங்களும் போய் அம்மாவுக்கு உதவியா கல்யாண காரியங்களைக் கவனிங்க... போங்க...!"

சிவராஜனின் தோள்மேல் தன் இரண்டு கைகளையும் வைத்த நிலா, அவரை 'அபௌட் டர்ன்'ல் திருப்பித் தள்ளிக் கொண்டே போய் அறைக்கு வெளியே விட்டுவிட்டு வந்தாள்.

★★

காப்பி வாசனையோடு என் மனைவி உள்ளே வர நான் எழுதுவதை நிறுத்தி டம்ளரை வாங்கிக் கொண்டேன்.

"என்னங்க...! அத்தியாயத்தை எழுதி முடிச்சுட்டீங்களா?"

"இல்லை... பாதிதான் வந்திருக்கு..."

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி எதிர் வீட்டுக்கு பொலிஸ் வந்திருந்தாங்க..."

"பொலிஸ் எதுக்கு...?"

"தெரியலை... நிலாவோட அப்பாகிட்ட ஏதோ என்கொய்ரி பண்ணிட்டிருந்தாங்க... பாவம் அந்த மனுஷன்... எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அழறார். கண் கொண்டு பார்க்க முடியலை. கடவுள் ஏன்தான் இப்படி சோதிக்கிறாரோ...?"

நான் காப்பி குடிக்க மனமில்லாமல் டம்ளரை கீழே வைத்துவிட்டு என் மனைவியை ஏறிட்டேன்.

"பொலிஸ்காரங்க இருக்காங்களா...? போயிட்டாங்களா...?"

"போயிட்டாங்க..."

க்ரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

நான் எழுந்து நின்று ஜன்னல் வழியாய் நிலாவின் வீட்டைப் பார்த்தேன்.

ஒரு பெரிய சோகத்தை தன்னுள் புதைத்துக்கொண்டு, இருட்டின் வாயில் சிக்கியிருந்தது அந்த வீடு.

'சிரிப்பும் சந்தோஷமுமாய் போனவாரம் வரைக்கும் எவ்வளவு கலகலப்பாயிருந்தது அந்த வீடு...?' மனம் கனத்துப் போயிற்று. அப்படியே தளர்ந்து நாற்காலிக்குச் சாய்ந்தேன்.

"என்னங்க... காப்பி...ஆறிடப்போகுது..."

"வேண்டாம்... எடுத்துக்கிட்டு போ..."

என் மனைவி ஒரு விநாடி தயங்கிவிட்டு காப்பி டம்ளரை எடுத்துக்கொண்டு போக- நான் வலிக்கிற இதயத்தோடு பேனாவைத் தொட்டேன்.

வெள்ளைத் தாள் விட்ட இடத்திலிருந்து என் எழுத்துக்களை வாங்கிக்கொள்ள ஆரம்பித்தது.

●●

புதன்கிழமை ராத்திரி. பதினொரு மணி.

டெலிஃபோனுக்குப் பக்கத்தில் இரண்டு கைகளாலும் மோவாயைத் தாங்கிக்கொண்டு காத்திருக்க ஆரம்பித்தாள் நிலா. பாக்யம் முன் அறை சோபாவில் முனகியபடி உட்கார்ந்திருக்க- சிவராஜன் டி.வி.யை மிகக் குறைந்த வால்யூமில் வைத்துக்கொண்டு பி.பி.சி. பார்த்துக் கொண்டிருந்தார்.

மணி 11.03.

டெலிஃபோன் ஜலதோஷம் பிடித்துக் கொண்ட ஐஸ்வர்யா மாதிரி அழகாய்ச் செருமியது.

நிலா ரிசீவரை வாரி எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ...."

மறுமுனையில் ஒரு பெண்குரல் கேட்டது.

"மிஸ் நிலா..."

"ஹோல்டிங்..."

பெண் குரல் தொடர்ந்தது. அமெரிக்க ஆங்கிலம்.

"மிஸ் நிலா...! என் பெயர் க்ளாரா. நீங்கள் மிஸ்டர் கிருஷ்ணகாந்தின் ஃபோன் காலுக்காகத் தானே காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஆமாம்..."

"ஸாரி டு ஸே...திஸ்... அவர் தன் வேலை விஷயமாய் இந்நேரம் சிகாகோ விமானத்தில் பறந்து கொண்டிருப்பார். உங்களுக்கு இரண்டு நாட்கள் கழித்து ஃபோன் செய்வதாகச் சொன்னார்."

நிலாவின் மனசுக்குள் ஏதோ முறிந்தது மாதிரியான உணர்ச்சி.

"பரவாயில்லை..."

"உங்களுக்கு ஏமாற்றமா?"

"அப்படியொன்றும் இல்லை..."

"நீங்கள் இல்லையென்று சொன்னாலும் உங்கள் குரலில் எக்கச்சக்க ஏமாற்றம் தெரிகிறதே...?"

'இவள் யார்... அதிகப்பிரசங்கி...!' நிலா யோசித்துக் கொண்டிருக்கும் போதே பெண்குரல் திடீரென்று ஆண்குரலாக மாறிச் சிரித்தது.

"என்ன நிலா... கோபம் கோபமா வருதா?"

கரகரப்பான ஆண்மை நிரம்பிய குரல்.

"நீங்க...நீங்க...?"

"கிருஷ்ணகாந்த்..." சிரித்தான். "உனக்கு மிஸஸ் பட்டம் தரப்போகிற அதே கிருஷ்ணகாந்த்."

நிலா பேச்சிழந்து சந்தோஷத்தால் ரிஸீவரை பிடித்தபடி நிற்க... கிருஷ்ணகாந்த் கேட்டான்:

"எப்படி நம்ம மிமிக்ரி...?"

"அச்சாய் எப்படி... பெண் குரல் மாதிரி..?"

கிருஷ்ணகாந்த் சிரித்தான்.

"கைவசம் அது மாதிரி நிறைய செய்திகள் வெச்சிருக்கேன்..."

"உங்க மிமிக்ரி ஃபெண்டாஸ்டிக்..."

"வெறும் பாராட்டு மட்டும்தானா?"

"வேற என்ன வேணும்...?"

"உன்னோட அம்மாவும், அப்பாவும் பக்கத்தில் இல்லையே?"

"இல்லை..."

"ஒரு முத்தம் கொடேன்..."

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை

## திடீர் தொடர் 05

கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டி'கள் இவை....

அரசியலையே அவர்கள் வேடிக்கையாகத்தான் நடத்தினார்கள்.

ஒரு விடுதலை இயக்கமானது, தனக்கு வைத்துக்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகளை தி.மு.கழகம் என்றுமே வைத்துக் கொண்டதில்லை.

கட்சித் தொண்டும் ஒருவகையான பொழுதுபோக்கு என்றிருந்ததால் அவனும் தன்னையறியாமல் அதிலே மேலும் ஈடுபடத் தொடங்கினான்.

கட்சியினுடைய ஆரம்பகாலமான அக்காலத்திலும் ஒரு தலைவர் இன்னொரு தலைவரைக் கேலி செய்வதே வாடிக்கையாக இருந்தது!

"நீ இப்படிச் செய்யலாமா?" என்று ஒருவரைக் கேட்டால், "ஏன் அவர் மட்டும் என்ன யோக்கியராம்?" என்று பளிச்சென்று பதில் சொல்வார்கள்.

பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்கின்ற தொண்டர்கள் அன்றும் சரி இன்றும் சரி அவ்வளவு உத்தமமானவர்கள்.

அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குப் பரிதாபமாக இருக்கும்.

"இந்தத் தலைவர்களை நம்பியா நீங்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்கத் தோன்றும்.

தவறுகளையே செய்துகொண்டிருக்கும் தலைவர்கள், அந்த உத்தமமான தொண்டர்களை மிரட்டுவார்கள்.

உள்ளூரிலேயே 'ஐம்பது ரூபாய் கொடுத்தால்தான் கூட்டத்திற்கு வருவேன்' என்பார்கள்.

வாடகைக் காருக்குப் பணம் கொடுக்கும்படி மிரட்டுவார்கள்.

தன் மனைவியின் தாலிச்சரட்டை விற்றுவிட்டு, தலைவரின் வழிச்செலவுக்குப் பணம் கொடுத்த ஒரு தொண்டனை அவன் அறிவான்.

வட்டிக்குப் பணம் கொடுக்கும் 'ஈட்டிக்கார'னிடம் எழுதிக் கொடுத்துக் கடன் வாங்கி ஒரு கூட்டத்தை நடத்தினான் ஒரு தோழன்.

அந்தக் கூட்டத்தில் பேசுவதாக இருந்த ஒரு பேச்சாளர் பணத்தையும் வாங்கிக்கொண்டு வெளியூருக்குப் போய்விட்டார்.

கூட்டத்திற்கு அவர் வராததால் ஏமாந்த அந்தத் தோழன் 'கோ'வென்று அலறி அழுது கொடிகளையெல்லாம் பிய்த்துக் கீழே போட்டான்.

இப்படிப் பல நிகழ்ச்சிகளை அவன் கண்டான்.

ஜனநாயகத்தின் போலித்தனம் அவனுக்குத் தெரியலாயிற்று.

கரையான் புற்றெடுக்க, கருநாகம் குடிபுகுவது போல் நலம் நாடிப் பிறந்த ஜனநாயகத்தில் நாணயம் கெட்டவர்கள்தான் குடியேறினார்கள்.

போலிகளும் பொய்யர்களும் தவிர, யோக்கியர்கள் யாரும் ஜனநாயகத்தில் பெரும் புகழ்பெற முடியாதே என்று அவன் அஞ்சத் தொடங்கினான்.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலத்தில் எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்துக் கட்சியை வளர்த்த உத்தமர்கள், அன்று செல்வாக்கு அற்றுக் கிடந்தார்கள்.

அரை வேக்காடுகளும் ஆர்ப்பாட்டக் குடுக்கைகளுமே தலைவர்களென்று தம்பட்டமடித்துக் கொண்டு ஊர்வலம் வந்தார்கள்.

ஒவ்வோர் அரசியல் கட்சியிலுமே நிலைமை இதுதான்!

ஒழுங்காக உழைத்தவன், தியாகம் செய்தவன் எங்கேயோ கிடப்பான்.

அவனை ஏமாற்றிக் கீழே தள்ளியவன் எல்லாப் பதவிகளிலும் அமர்ந்து கொண்டிருப்பான்.


வீட்டினுடைய அஸ்திவாரம் பூமிக்குள் மறைந்து கிடப்பதுபோல், அரசியல் கட்சியின் அஸ்திவாரமான உத்தம தியாகிகளும் மறைந்து கிடப்பார்கள்.

ஆகவே ஒருவன் அரசியலில் புகழ்பெற விரும்பினால் போலித்தனமான குறுக்கு வழிகளையேதான் பெரும்பாலும் கையாண்டு தீரவேண்டும்.

அவனுக்கு அது தெரியாது!

உழைக்கின்ற தொண்டர்களின் தோளிலே கைபோட்டுக் கொண்டு, அவர்களைத் தனக்குச் சமமாக நடத்தினான்.

கஷ்டங்களைக் கண்டு உருகினான்.



கஷ்டப்படுவோர்க்குக் கை கொடுத்தான்.

அவ்வளவும் விழலுக்கிறைத்த நீராயிற்றென்றாலும் அவன் தன் வரையில் அமைதியடைய முடிந்தது!

அவனுடைய நண்பர் சரியான அரசியல்வாதி!

தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள் இருப்பதுபற்றி அற்புதமான வசனங்கள் எழுதுவார்.

ஆனால் ஒரு பிச்சைக்காரனுக்குக்கூட கையைவிட்டுக் காலணாக் கொடுத்ததில்லை.

தொழிலாளர்களையும், அவர்கள் இரத்தம், நரம்புகளையும் பற்றித் துள்ளும் தமிழில் கட்டுரைகள் தீட்டுவார்.

அவரிடம் ஊழியம் பார்ப்பவர்களுக்கு மிகக் குறைந்த அளவு சம்பளமே கொடுப்பார்.

தான் முன்னேறுவது போல் இன்னொருவனும் முன்னேறி விடாமல் இருக்க சகலவிதமான வழிகளையும் கையாளுவார்.

அரசியல் உலகம் அத்தகைய பிரகிருதிகளுக்குத்தான் வழி திறந்து வைத்திருந்தது.

ஏன்? வயிற்றுப்பாட்டுக்காக விபச்சாரத் தொழில் புரிந்து கொண்டிருந்த ஒரு பெண்ணிடம், பணத்தைக் கொடுத்துக் காரியமும் முடிந்தபின், சத்தம் போட்டு அந்தப் பணத்தையே திருப்பி வாங்கி வந்தவர் அவர்.

தலையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு, அந்தப் பெண்ணின் தகப்பனாரோடு சண்டைக்குப் போய், அவர் செய்த ஆர்ப்பாட்டங்கள் சுவையானவை.

சென்னை ராயப்பேட்டையின் குறுகலான சந்து.

அந்தச் சந்திலேதான் அந்தப் பெண்ணின் தகப்பனாரான நாட்டு வைத்தியர், தன் மூன்று பெண் மக்களோடு குடியிருந்தார்.

மூத்த பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. மற்றும் இருவர் கன்னியர்.

அவனும் அந்தத் 'துள்ளும் தமிழ்த் தோழனும்' இன்னும் ஒரு தற்கால எம்.எல்.ஏ.யும் இரவு 9 மணிக்கு அந்த வீட்டில் நுழைந்தார்கள்.

மூவருக்குமாக ரூபாய் நூற்றைம்பது தரப்பட்டது.

இளைய பெண்ணொருத்தியை அந்தப் பிரமுகர் சேர்த்துக் கொண்டார்.

அந்தச் சிறிய வீடு, மறைவு தட்டிகளால் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

இரவு பதினொரு மணி இருக்கும். ஒரு பகுதியிலிருந்து பரபரப்பான பேச்சுக்குரல் எழுந்தது.

நேரம் ஆக ஆக, அது வாக்குவாதமாக வளர்ந்தது.

'கலாரசிகர்' வெளியிலே வந்தார்.

கையிலிருந்த துண்டைத் தலையிலே கட்டிக்கொண்டார்.

நாட்டு வைத்தியரைத் தட்டி எழுப்பினார்.

"உன் பெண் சரியாக நடந்து கொள்ளவில்லை. மரியாதையாகப் பணத்தைத் திருப்பிக் கொடு!" என்றார்.

"பொலிசைக் கூப்பிடுவேன்!" என்று மிரட்டினார்.

பொலிஸ் வந்தால் தன் கதி என்ன என்பதை அந்தக் கலாரசிகர் மறந்தே போனார்.

இறுதியில் ரூபாய் நூற்றைம்பதையும் பெற்றுக்கொண்டு தான் ஆளைவிட்டார்.

பின், ஒரு வாரம்வரை அதை ஒரு வெற்றி விழாவாகவே அவர் கொண்டாடினார்.

அந்த ரூபாயும் அன்று மிஞ்சியதுதானே தவிர, அடுத்து அதே மாதிரிக் காரியத்திற்குத்தான் பயன்பட்டது.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு சாண் பூமி

**ரூபராணி**

> "சோவென்று பெய்த மழை சற்று ஓற்ந்திருந்த வேளை அங்கிருந்தோ அழுகுரல் கேட்டல்"

**வெ**குதூரம் நடந்துவந்த பிறகும் கேசவனுக்கு வீடு திரும்ப வேண்டுமென்ற எண்ணமேயில்லை. தெருவோரம் நின்ற வம்மி மரத்தின் அடிவேரில் மெதுவாக இருந்தான். தரையைச் சுற்றி வம்மிப் பூக்கள் கொட்டிக் கிடந்தன. அதன் வாசம் அவன் மூக்கை வருடியது.

கேசவன் சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டு தன்னுடைய ஏ.எல். பரீட்சை முடிவைப் பற்றிச் சிந்தித்தான். 'ரூ ஏ, ரூ பீ.' இந்த ஏக்களையும், பீக்களையும் வச்சுக் கொண்டு என்ன செய்வதாம்? கட்டாயம் கெம்பஸ் கெடைக்கும். ஆனா நாலு வருஷ படிப்புக்கு பணத்துக்கு எங்கேபோறது?' தனக்குள் ஓடிய சிந்தனைகளைத் தட்டி



அடக்கிவிட்டு எழுந்தான். உடல்பூரா வலிப்பதை அப்போதுதான் உணர்ந்தான் கேசவன்.

தென்னந் தோப்பு ஒன்றில் தேங்காய் உரிக்கும் நாட்சம்பளக் கூலியாள் அவன். எங்கேயோ பிறந்து, எப்படியோ வளர்ந்து எங்கேயோ இடம்பெயர்ந்து வாழும் தலைவிதியை எண்ணினான். கன்றிச் சிவந்த தன் கைகளைப் பரிதாபமாகப் பார்த்தான். சேறு தெறித்த தன் உடைகளை எண்ணியபோது வயலில் இறங்கி அவன் அப்பாவுக்கு ஒத்தாசை பண்ண வெட்கப்பட்ட ஞாபகம் வந்தது. குளத்தில் கல்லை விட்டெறிந்தது போல் அவன் மனதில் குழப்பம்.

'அம்மா, அக்கா அவர்களின் சுமையை எப்போது இறக்கி, எப்போ நான் ஆளாவது?' என்ற சிந்தனையில் ஆழ்ந்தபோது சடசடவென்று மழைத்துளிகள் பூமியை நோக்கி விழுந்தன.

கேசவன் விடுவிடென்று நடந்து வீட்டுக்கு வந்து விட்டான். வானம் பொந்தது போல் மழைகொட்டியது. கேசவனின் தாய் தங்கம்மாவும், அவன் அக்கா பூமணியும் குடிசையின் மூலையில் கொடுகிப் போய் உட்கார்ந்திருந்தனர். பூமணி தேத்தண்ணிக் கோளாவையும் பனங்குட்டான் பாதி ஒன்றையும் கேசவனுக்குக் கொடுத்தாள். தேனீர் ஆறிக்கிடந்தது. அதை இரசித்துக் குடிக்கப் பழகிவிட்டான் கேசவன்.

சோவென்று பெய்த மழை சற்று ஓய்ந்த வேளை அழுகுரல் எங்கிருந்தோ கேட்டது. பாய்ந்து ஓடிச் சென்ற கேசவன் அசுரவேகத்தில் மூச்சிரைக்க திரும்பி வந்தான்.

"அம்மோய்! சின்னத்தம்பி மாமாவுக்குத் திடீரெண்டு நெஞ்சுவலி வந்து பேச்சுமூச்சில்லாமக் கிடக்கிறாராம். முடியப்போறாப்பில இருக்காம். எல்லாரும் அழுகினமெண்டு அன்னம்மாக்காதான் செய்தி சொன்னவ." கேசவனின் முகத்தில் கவலை படர்ந்தது.

"நீ போகலியாம்மா?" பூமணி மெதுவாகக் கேட்டாள். தங்கம்மாவின் முகம் இறுகியது.

"எட்டு வரிசமா விட்டுப்போன உறவு எப்பிடி ஒட்டும்? எந்தமுகத்தோடு போற?" தங்கம்மா கடுகடுத்தாள்.

"அம்மா அவர் வேறுயாருமில்லை, உங்கூடகூடப் புறந்த அண்ணன்தானே!" கேசவன் பட்டென்று கேட்டான்.

"ஓ கூடப்புறந்த அண்ணன்தான். அதுக்கென்ன இப்போ?" கோபத்தைக் கொப்பளித்தாள் தங்கம்மா. அவளுடைய நினைவுகள் எட்டு ஆண்டுகளை பின் நோக்கிப் பாய்ந்தன.

**சி**ன்ன ஊறணியில் கொந்துறாத்துக்காரர் சங்கரப்பிள்ளையை தெரியாதவர்கள் இருக்க முடியாது. தங்கம்மாவும், சின்னத்தம்பியும் ஒரு வயிற்றுப் பிள்ளைகள். தங்கம்மா பிரபல வர்த்தகர் சிவகுருவின் மனைவி. சின்னத்தம்பி கஸ்ரம்ஸ் உத்தியோகத்தராய் இருந்தவர். அவர் கலியாணஞ் செய்த பிறகே தங்கம்மாவின் பக்கத்துக் காணியில் வீடு கட்டித் தனிக்குடித்தனம் போனார்.

அன்று போயா விடுமுறை. தங்கம்மா அரிசியில் கலந்து கிடந்த நெல்லை வேறாகப் பொறுக்கிக்கொண்டிருந்தாள். அருகாமையிலிருந்து வந்த கூச்சல் நாராசமாய் அவள் காதில் விழுந்தது. கணவனின் குரலும் சின்னத் தம்பியின் சத்தமும் மோதி வெடிப்பதைக் கேட்டு தங்கம்மா பதறி ஓடினாள். சிவகுரு ஒரு இருதய நோயாளி. கவனமாயிருக்க வேணும் என்ற டாக்டரின் எச்சரிக்கை தங்கம்மாவுக்குத் திகிலூட்டியது. சின்னத்தம்பி தன் கணவரின் நெஞ்சுச் சட்டையை இழுத்து உலுப்புவதைக் கண்ட தங்கம்மா, கீழே கிடந்த கல்லினால் சின்னத்தம்பியைக் குறி வைத்தாள். அவர் நெற்றியிலிருந்து குருதி கொட்டியது. இதைக் கண்ட சிவகுரு அங்கேயே மயங்கியவர் மறுபடி எழுந்திருக்கவில்லை.

"வேலியடைக்கும்போது தங்கம்மாவின் காணியில ஒரு சாணளவு நிலத்த சேத்து அடச்சிப் போட்டானாம் சின்னத்தம்பி." அயலவர் காரணஞ் சொன்னது தங்கம்மாவின் காதில் விழுந்தது. நினைவுகளை அறுத்துக்கொண்ட தங்கம்மாவின் கண்கள் குளமாகின.

"**அ**ம்மா நடந்து முடிஞ்ச விஷயத்தை இன்னமும் நூர விடாம எண்ணை ஊத்திறியே! இது உனக்கே நல்லாருக்கா? ஒரு குடும்பத்திலேயே ஒரு சாண்பூமிக்காகச் சண்ட புடிச்சி உறவுகள அறுத்துப் போட்டம். வீடு வாசல் தோட்டம் துரவு எண்டு எவ்வளவு செல்வாக்கா இருந்தம். இப்ப ஒரு இஞ்சிப் பூமிகூட ஆருக்கும் சொந்தமில்ல. எல்லாந் தரமட்டம். இந்தக் குடிசைக்க கிடப்பமெண்டு அப்ப நெனச்சமா? தம்பியப் பார், இவ்வளவு நல்லா பாஸ்பண்ணிப் போட்டு மேலேபடிக்க வழியில்லை. இடம் பெயர்ந்தாலும் கோபதாபம் எல்லாம் வந்த இடத்திலயும் மாறாமத்தானே இருக்கு? குடும்பத்துக் குள்ளேயே இப்பிடியெண்டா நாட்டில எப்பிடிம்மா நிம்மதி வரும்?" பூமணி படபடவென்று ஒரு குட்டிப்பிரசங்கமே பண்ணினாள்.

"அம்மோய், சண்டை எண்டு வரக்குள்ள அப்பாவும் விடல்ல; மாமாவும் விட்டுக் குடுக்கல்ல. முடிவு எவ்வளவு பரிதாபம்? எங்களுக்கு- அதுதான் அக்காக்கும் எனக்கும் இந்தச் சண்டையில சம்பந்தமில்ல, ஆனா உங்களால வாழும் வளர்ர வயதில நாங்களும் சொந்த பந்தங்களோட கோபங் காட்டித் திரியக் கிடக்கு. எதுக்குச் சீவிக்கிறம் எண்டு கிடக்கு!" கேசவன் குரலை உயர்த்தித் தன் விரக்தியை வெளிப்படுத்தினான்.

படலையை அவசரமாகத் திறந்து கொண்டு அழகம்மா தலைவிரிகோலமாய்ச் செய்தியுடன் ஓடிவந்தாள். "தங்கம்மா, உன்ரை அண்ணன் கண்ணை மூடிட்டாரே...!" காற்றோடு வந்த ஒப்பாரிச் சத்தம் தங்கம்மாவின் காதில் ஓங்கி அறைந்தது. ○

---

# அடையாளம்

**ஜி.கே.**

**க**டலோரமாகக் கதாநாயகன் மணி ஓடிக்கொண்டிருந்தான். பின்னால் அவனைப் பிடிக்க முடியாத தூரத்தில் பொலிசார் துரத்திக் கொண்டிருந்தனர். படுவேகமாக ஓடிக்கொண்டிருந்தான் மணி.

கையில் நகை மூட்டை. அம்மன் கோவிலில் திருடிய ஒட்டியாணம், முத்து மாலை, கிரீடம், காப்பு... எல்லாமே சொக்கத்தங்கம். பூசணித்துண்டு போல மந்தமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது நிலவு. பெரிதாய் எழுந்து ஆர்ப்பரித்த அலைகளைக் காட்டிலும் வேகமாய் எழுந்து அடங்கியது அவன் நெஞ்சு.



சற்று நேரம் நின்று ஆசுவாசப்படுத்திக் கொண்டான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை யாரும் வரக் காணோம். மெள்ள நடக்கத் தொடங்கினான். மறுபடி நீண்ட விசில் சத்தம். மிக அருகாமையில் இன்னும் துரத்துகிறார்கள். நகை மூட்டையை எங்கேயாவது பதுக்கிவிட வேண்டியதுதான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். பரபரவென்று மணலில் குழி பறித்தான். நகை மூட்டையை உள்ளே வைத்து மூடினான். அடையாளத்துக்கு என்ன செய்வது?

பக்கத்தில் பெரிய ஒரு கல் கிடந்தது. அதைத் தூக்கி நகை மூட்டை உள்ளே இருந்த இடத்தில் வைத்தான்.

பயத்தில் என்ன செய்கிறோம் என்ற உணர்வே இல்லாது பரபரப்பாகச் செயல்பட்டான்.

சட்டைப் பையில் இருந்த பேனாவைத் திறந்து இங்க்கை கல்லின்மீது கொட்டினான்.

இங்க் படிந்த கல், இதுதான் அடையாளம். நாளைக்கு வந்து எடுத்துக் கொள்ளலாம்.

மணி வேகமாக ஓடி இருளில் மறைந்த அடுத்த விநாடி முதுகில் இங்க் படிந்த அந்த ஆமை மெள்ள நகர்ந்து கடலுக்குள் போனது. ●

---

# ஒரு காதலும் சில காயங்களும்

**ஷர்மிளா இஸ்மாயில்**

**வ**ளாகத்துக்குள் காலடி வைத்ததும் பகிடிவதை பற்றிய பயம் ரகுவின் மனதுக்குள் தலைதூக்கியது. என்னதான் அரசாங்கம் தடை செய்ததாய் பிரகடனப்படுத்தினாலும் உள்ளுக்குள் கொஞ்சமாய், லேசாய் 'ராகிங்' நடந்து கொண்டுதானிருந்தது. அவ்வப்போது அவனைக் கரம் கொடுத்து காப்பாற்றியவன் பிரபா- சீனியராயிருந்தாலும் சகஜமாகப் பழகினான். ரகுவுக்கு என்னவோ பிரபாவைப் பார்த்ததும் ரொம்பவும் பிடித்துப் போயிற்று. ஒரு சகோதரனைப் போல பரிவாகவும் நண்பனைப் போல் நட்புணர்வோடும் பழகிய பிரபாவை ரகு மனதால் வியந்தான்.

வளாகத்துக்கு வந்து ஆறு மாதங்களிலேயே ஊரிலிருந்த அப்பாவுக்கு சீரியஸ் என கடிதம் வந்தது.மாதத்திற்கொரு முறை போய்ப் பார்த்து வந்தாலும் அப்பாவின் சுகயீனம் கடுமையானதும் வாரக்கணக்கில் வகுப்புக்களுக்கு செல்லாது லீவெடுக்க வேண்டியிருந்தது அப்போதும் தவறிப்போன விரிவுரை குறிப்புக்களை கொடுத்துதவியவன், சந்தேகங்களுக்கு விளக்கமளித்து விடை தந்தவன் பிரபாதான்.

பின்னாளில் ஒரு மதியவேளை அப்பா இறைவனடி சேர்ந்துவிட்ட செய்தி வந்தபோது ரகு கதறியழ- தேற்றினான் பிரபா. அவனது வார்த்தைகள் ரகுவின் சோக மனதுக்கு ஒத்தடமாய் அமைந்தன. இறுதிக் கிரியைகள் அனைத்திலுமே ஒத்தாசை செய்தான். ரகு கண்ணீரோடு அவன் கைகளைப் பிடித்து 'நன்றி' சொன்னபோது அன்போடு புன்னகைத்துக் கொண்டான் பிரபா.

விரிவுரைகளுக்குப் பின் கூட்டங்கூட்டமாய் கலைந்த முகங்களிலிருந்து சஹானாவின் பளீர் முகத்தைத் தேடிக் கொண்டிருந்தான் ரகு. சில நாட்களாய் அவனுக்குள் ஒரு வானவில்லைத் தோற்றுவித்தவள். லேசான ஓர் அதிர்வலையைத் தந்து மனதை ஆக்கிரமித்து வருபவள்.

ரகுவுக்கு குழப்பமாய் இருந்தது. 'ஒரு வேளை அவள் என்னை நேசிக்கிறாளோ'- என யோசிக்கவாரம்பித்தான். பின்னர்தான் அவளை தானே நேசிப்பதாய் உணர்ந்தான்.

வகுப்புக்களுக்கு வரும் போகும் நேரங்களில் மரங்களடர்ந்த பாதைகளில் அவனது முகத்தைக் கண்டதும் ஆர்வமான ஒரு பார்வை- அழகான ஒரு புன்னகை- இதுதான் காதலென்பதா? ரகு தடுமாறினான். கேள்விகள் பல எழுந்தன.

விடை தந்தான் பிரபா. "வேண்டாம் ரகு. படிப்பதற்காய் வந்தாய். பாழாக்கிக் கொள்ளாதே. ஊரில் உன் தங்கைகள் உன்னை நம்பி. பொறுப்புக்கள் உண்டு. கடமைகள் முடித்தே காதல் செய். பார் என்னை வடபுலத்தில் சொந்தம், சொத்து என அனைத்தையும் தொலைத்துவிட்டவன். இந்தக் கல்வி மட்டும்தான் இனி என் எதிர்காலத்திற்குக் கை கொடுக்கும் ஆதாரம். காதல் நிச்சயம் கனவுகளைத் தரும். சுகமான கனவுகள். ஆனால் கல்வியில் பூரணத்துவம் கடமைகளைச் செய்யும் பக்குவத்தைத் தரும். முதலில் படி. பொறு. பின் காதல் செய்யலாம்."



பிரபா உபதேசித்தான். ரகுவுக்குள் முதன் முதலாய் பிரபாவுடன் லேசான ஒரு மனத்தாக்கம் உருவாயிற்று. 'என் தனிப்பட்ட விடயங்களில் தலையிடுகிறானே!' என்பதான ஒரு உறுத்தல் ஏற்பட்டது.

சஹானாவின் காதலை ஏற்றுக் கொண்டான். கனவுகளிலேயே காலம் போயிற்று. கல்வியைக் கவனிக்க நேரமில்லை என்பதாயிற்று.

பின்னொரு நாளில் பிரபாவைப்பற்றி சஹானாவிடம் கூறினான். முகம் சுளித்தாள். "பெரிய ஞானியாக்கும். அவர் பேச்சை நீங்க கேட்கணும்னு சட்டமா?" ஏளனமாய்க் கூறினாள். சிரித்தான். படிப்பைப் பாதியில் நிறுத்தி, சஹானா வேறொருவரை கல்யாணம் பண்ணிக் கொண்டபோது பிரபா ஞானிதான் என்பது ரகுவுக்குத் தெரிந்தது.

சஹானா அமெரிக்காவில் வேலை பார்த்த கம்பியூட்டர் என்ஜினியர் மாப்பிள்ளையை மணந்து, ரகுவையும் காதலையும் மறந்து சென்றாள். இப்போது பிரபா தீர்க்கதரிசி போல் தெரிந்தான். இப்போது உடைந்து போன அவன் உள்ளத்தை ஒட்ட வைக்க வந்தவன் பிரபாதான். இத்தனை நாளாய் ரகுவை அவன் சந்திக்கவேயில்லை.

வந்தவன் அவளைப் பற்றி எதுவும் பேசவில்லை. "இத்தனை நாளாய் எங்கிருந்தேன் என்று கூட நீ கேட்கவில்லையே ரகு?" எனக்கேட்டுச் சிரித்தான். ஆமாம். சஹானாவின் காதல் பிரச்சனையில் மூழ்கிப் போன பின் பிரபாவைப் பற்றி இப்போதுதான் நினைத்துப் பார்க்கிறான். இடையில் சந்திக்கவோ பேசவோ இல்லை. அவன் கோபித்துக் கொண்டிருப்பதாய் நினைத்தான் ரகு.

கேட்டவன் பதிலை எதிர்பாராது பேசினான்: "சந்தேகத்தின் பேரில் கைது செய்துகொண்டு போயிருந்தார்கள். நல்ல அன்பான விசாரணை. இங்கே பார்!" பார்த்தான்- தழும்புகள்! கீறல்கள்!

ரகு பதறியபடி எழுந்தான். அமர்த்திவிட்டு பிரபா அமைதியாய்ச் சொன்னான்: "உன் காதல் காயத்தைவிட இது ஒண்ணும் பெரிசில்லை ரகு! வா, லைப்ரரி பக்கம் போய் வருவோம்!" ரகு கலங்கிய கண்களுடன் பிரபாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான். ○

---

# இலக்கியவாதி

**வீரமுனை வானவர்கோன்**

**இ**ந்தச் சுற்றுவட்டாரத்தில் எப்படிப்பட்ட இலக்கிய கூட்டங்கள், கருத்தரங்குகள் நடைபெற்றாலும் தவறாது சமுகமளிப்பான் வேந்தன். தவிர்க்கவியலாமல் கலந்துகொள்ள முடியாத சந்தர்ப்பம் ஏற்படின் அந்நிகழ்வு மனதை விட்டு அகலும்வரை கவலைப்பட்டுக் கொண்டே இருப்பான் வேந்தன்.

கலை இலக்கியத்துறையில் ஈடுபடுவதே வேந்தனின் பொழுதுபோக்கு எனச் சொல்லுமளவுக்கு அதில் ரசனை மிகுந்தவனாகக் காணப்பட்டான். நண்பர்களைக் காணும் போதெல்லாம் தனது படைப்புகளைப் பற்றி விமர்சனம் கேட்பான். நண்பர்களில் பல தரப்பட்டவர்கள் இருந்தாலும் அவரவர் விமரிசனக் கருத்துக்களை நன்றாகச் செவிமடுப்பான் வேந்தன். சிலரது கருத்துக்கள் அவனது போக்குக்கு உரமூட்டுவதாக அமையும். பெரும்பாலான நண்பர்கள் இவனது துறையில் நாட்டமில்லாமல் இருப்பதால் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி நகர்ந்து விடுவார்கள். இருந்தும் ஒரு சிலர் அவனது படைப்புகளைப் பார்க்கும் போதெல்லாம் ஏதாவது குறை கண்டுபிடித்து மட்டம்தட்டி முன்னேற விடாமல் குட்டிக் கொண்டே இருந்தார்கள்.

போட்டி பொறாமைகளுக்கு மத்தியில் பத்திரிகைகளுக்கு தனது படைப்புகளை அனுப்பிவைத்துவிட்டு, அவற்றின் பிரசவத்தைக் காண துடியாய்த் துடிப்பான் வேந்தன். அவ்வேளையில் அப்படைப்புக்கள் பிரசுரமாகி இருப்பின் அவன் அடையும் ஆனந்தத்துக்கு அளவே இல்லையெனலாம். இலக்கிய வித்தகர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் பிரபலங்களிடம் சென்று ஆலோசனைக் கருத்துக்களைக் கேட்டு தனது அறிவுப் பசியைப் போக்கிக் கொள்வான். திருத்தியமைக்கப்பட்ட இலக்கியவாதியாக தானும் வரவேண்டுமென கனவு காண்பான்.

நவீன இலக்கியப்போக்குகளே இளையவர்களை அதிகம் தாக்கம் செய்கின்றதென்பதால் புதுக்கவிதை எழுதுவதிலும் புனைக்கதை புனைவதிலும் நாட்டம் செலுத்திக் கொண்டிருந்த வேந்தன், சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளில் மரபு இலக்கியம் பற்றிய சிந்தனையில் ஈடுபடலானான். 'இந்த உலகத்தில் நான் பிறந்து எதைச் சாதித்து உள்ளேன். என்னால் என்னைச் சார்ந்தவர்களையாவது திருப்திப்படுத்த முடிந்ததா?' வேந்தன் தனக்குத்தானே கேட்டுக்கொள்ளும் கேள்வி இது.

தமிழகத்தில் இருந்து இலக்கியச் செம்மல் ஒருவர் ஈழத்துக்கு வருகை தந்திருக்கும் செய்தி பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது. வரவேற்பு விழா, பொன்னாடை போர்த்தல், பொற்கிழி வழங்கல், தேநீர் உபசாரம் போன்ற விபரங்களையெல்லாம் திகதி நேரங்களுடன் விலாவாரியாக வெளியிட்டிருந்தன. தானும் ஒருதரம் சென்று இலக்கியவாதியைப் பார்த்து வரவேண்டுமென ஆசைப்பட்டான் வேந்தன்.



'எட்டாத பழம் புளிக்கும்; கிராமத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு இப்படிப்பட்ட ஆசைகளெல்லாம் வரக்கூடாது, அதோடு கொழும்புக்குப் போய் வருவதென்பது இந்தக் காலத்தில் இலேசுப்பட்ட காரியமா? தனியவும் போக ஏலாது; பொஞ்சாதியையும் மகளையும் கூட்டிக்கொண்டுதான் போக வேணும்: அதுகளும் பாவம் தானே!' தனக்குள்ளே கதைத்துவிட்டு பெருமூச்செறிந்தான்.

கடவுள் கருணை காட்டினாரோ தெரியவில்லை. நாளை மறுதினம் கொழும்பில் நடக்கவிருக்கும் பதவி உயர்வுக்கான பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு அமைச்சில் இருந்து கடிதம் வந்திருந்தது. 'பதவி உயர்வு கிடைத்தால் சம்பளம் உயரும்; அப்படியானால் மாதாந்தம் இன்னும் கூடுதலாக இலக்கியச் சஞ்சிகைகளை வாங்கலாம். நம் நாட்டு படைப்பாளிகளுக்கு ஊக்கம் கொடுக்கலாம்.' மனதுக்குள் நினைத்துக் கொண்டவனாக மனைவியிடம் கடிதத்தைக் காட்டிய பின்னர், அவளின் பச்சைக்கொடி தெரியவே பயணத்துக்கான அலுவல்களை ஆரம்பித்தான் வேந்தன்.

இலக்கிய வித்தகரைக் கண்டுவர நல்லதொரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பாரதி பிறந்த மண்ணில் இருந்து வந்தவரல்லவா அவர்? அங்கு சென்றால் பெறுமதியான இலக்கிய விருந்துண்ணலாமென சந்தோஷம் அடைந்தான் வழியில் இருக்கும் 'செக்கிங் பொயின்ற்'களை தாண்டிச் சென்றுவிட்டால்தான் நிம்மதி.

விழா மண்டபம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வாசலில் இருவர் நின்று வரவேற்றனர். உள்ளே கதிரைகள் பாக்கியாக இல்லையெனக் கூறக் கூடியளவுக்கு சனக்கூட்டம். ஏனென்றால் வித்தகரின் பேச்சின் வலிமையை நேரில் கண்டு இரசிக்கவே இவர்கள் அனைவரும் வந்திருக்கவேண்டும். ஆர்வலர்களின் ஒலிவாங்கிக்கு முன்னாலான பேச்சினைத் தொடர்ந்து இறுதியில், நிழல் தரவந்த இலக்கிய விருட்சமான இலக்கியப் பெருந்தகை எழுந்து விடயத்துக்கு ஒவ்வாத பேச்சுக்களை உரைத்துவிட்டு, விழா ஏற்பாட்டாளரான எம்நாட்டவரின் நூல்வெளியீட்டினை ஆரம்பித்து வைத்தார் வித்தகர். வந்திருந்த ஆர்வலர்கள் நகரத் தொடங்கினார்கள். "பிழைக்கத் தெரிந்தவர்கள் உழைக்க வந்திருக்கிறார்கள்!" என்றார் அருகில் இருந்தவர். 'நாமும் இவர்களை விளங்கிக் கொள்ளாமல் பஸ் ஏறி இவ்வளவு தூரம் வந்தோமே? ஊரிலுள்ள தமிழ் வாத்தியார் செல்லத்துரை ஐயாவிடம் கேட்டிருந்தாலாவது மண்டையில அறிவு ஏறி இருக்கும்!' ■

www.padippakam.com

# புலன்களின் புகலிடம்

## இலக்கிய நயம்

துருவது ரசிகன்



"நிகர் இல்லாதவை
எவை?"
காதலி கேட்டாள்.

காதலன்
விடை அடுக்கினான்

"பேராசைக்கு நிகரான
துன்பம் இல்லை!

பேராசைக்கு நிகரான
கொடுமை இல்லை!

பகைமைக்கு நிகரான
கலகம் இல்லை!

நட்புக்கு நிகரான
உறவும் இல்லை!

காதலுக்கு நிகரான
உணர்வும் இல்லை!

அன்புக்கு நிகரான
இன்பம் இல்லை!

காமத்துக்கு நிகரான
நெருப்பு இல்லை!

கோபத்துக்கு நிகரான
கெடுதி இல்லை!

நோய்க்கு நிகரான
எதிரி இல்லை!

வதந்திக்கு நிகரான
குழப்பம் இல்லை!

சாந்திக்கு நிகரான
தெளிவும் இல்லை!"

காதலன் அடுக்கிக்
கொண்டே செல்ல
காதலி சிணுங்கினாள்.

"போதும் உங்கள்
விடைத் தொகுப்பு"
என்றாள் மோதும் பார்வையுடன்!

அவளைப்பற்றி
எதுவும் கூறவில்லையே
என்ற பொறாமை!

புகழ்ச்சிக்கு
மயங்காத மனிதர் அரிது!
காதலர்களும்
புகழ்ச்சியின் அடிமைகள்!

முத்தம் மட்டுமல்ல
முகஸ்துதியும்
காதலில் இனிக்கும்!

காதலன்
சொல்லத் தொடங்கினான்!

"உன் விழிக்கு நிகரான
வேலும் இல்லை- வேறு
வாளும் இல்லை!

உன் மொழிக்கு நிகரான
இனிமை இல்லை!

உன் இதழுக்கு நிகரான
மென்மை இல்லை!

உன் முறுவலுக்கு நிகரான
வெள்ளை இல்லை!

உன் கழுத்துக்கு நிகரான
சங்கும் இல்லை!

உன் மார்புக்கு நிகரான
மொட்டும் இல்லை!

உன் இடைக்கு நிகரான
கொடியும் இல்லை!

உன் நடைக்கு நிகரான
அன்னம் இல்லை!

உன் அழகுப் படைக்கு
-நிகரான
படையும் இல்லை!

உன் அங்க எழிலுக்கு
-நிகரான
தங்கம் இல்லை!

உன் மூச்சுக்கு நிகரான
காற்றும் இல்லை!

உன் பேச்சுக்கு நிகரான
வேறு வார்த்தை இல்லை!

உன் மௌனத்தின் நிகரான
பேச்சும் இல்லை!

உனக்கு நிகரான
உலகும் இல்லை!

உனக்கு நிகரான
ஒன்றும் இல்லை!

நீயின்றி நிகராக
எனக்கு ஏதுமில்லை! !!"

விருப்பம் இல்லாதது போல
செவியில் வாங்கினாள்.

இடையே தடுத்தாளில்லை
அவன் மூச்சுமுட்டும் வரை
கூறி முடித்த பின்னர் தான்
"போதும் பொய்கள்!!"
என்றாள்.

அவன் உதடுகளை
தன் விரல்களால்
நோகாமல் பொத்தினாள்.

பொத்திய விரல்களை
மெல்லக் கடித்தான்
"அடடா இனிமை
அற்புத விரல்கள்!!"
என்றான்.

"இந்த விரலுக்கு நிகரான
கரும்பு இல்லை!"
என்றான் விரலை கடித்தபடி

"அது கரும்பு
இது அரும்பு
இரண்டையும் விரும்புது
மனது!
பசிக்கு ஏற்ற அமுது !"
என்று அவன் கண்கள்
சென்ற இடத்திற்காக
பொய்யாக முறைத்தாள்.

"இந்த அமுதுக்கு நிகரான
அமுதும் இல்லை!
இந்த விருந்துக்கு நிகரான
விருந்தும் இல்லை!!!"
என்றான் குறும்பாக.

கைகளால் வளைத்து
அவள் மேனியை
தன்னுடன் சாய்த்து
பொன்னுடல் மீதில்
புதையல் தேடினான்.

"உன் மேனிக்கு நிகரான
வீணை இல்லை!"

உன் பொன்னுடலுக்கு நிகரான
புதிரும் இல்லை!

சிணுங்கினாள் வெட்கத்தில்
பொன்னுடல் சிவந்தது.

"கண்டதும் கவரும்
காரிகை நீ.

மொழி கேட்டதும் மயக்கும்
காரிகையும் நீ.

உண்டதும் கிறக்கும்
இதழும் உனதே!

முகர்ந்ததும் ஈர்க்கும்
வாசனை உனதே!

தொட்டதும் சிலிர்க்கும்
புதிரும் நீயே!

ஐம்புலன்களும்
உன்னிடம் அடைக்கலமாகும்!

ஏழு உலகமும்
உன்னிடம் புகலிடம் தேடும்!

நிகரில்லா தேவதை
நீயில்லா நிம்மதி ஏது?

நிம்மதி தாராய்
நிம்மதி தாராய்!

முழு மதி முகத்தாளே
என் மதி கவர்ந்தாயே!

உன் மதி கொண்டு
உலகைக் காண்பேன்!

உன் உயிர் கொண்டு
உலகில் வாழ்வேன்!

ஐம்புலன் கவர்ந்த
அழகியே வாராய்!"

அணைத்தான், அணைந்தாள்
திரையைப் போட்டு விட்டு
திருவள்ளுவரிடம் செல்வோம்!
கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்
–ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள!!
அதிகாரம்:111. குறள்:1101.

---

# சிந்தியா பதில்கள்

* ஆசை எந்தளவுக்கு இருக்கலாம்?
க. ராசரத்தினம், கொழும்பு-10.

ஒருத்தர் இருந்தார். அவர் அளவுக்கு அதிகமாக எதுக்கும் ஆசைப்படுவது கிடையாது. இருப்பதே போதும் என்று நினைப்பவர்.

ஆண்டவன் அவரிடம் நேரில் வந்து: "உங்களுக்கு கால் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதுக்கு அவர்: "அதிகமாக ஒன்றும் வேண்டாம். எனக்கு உடம்பில் இருந்து பூமியைப் போய்த் தொடும் அளவுக்கு இருந்தால் போதும்!" என்றாராம்.

● ○

* பட்டதாரிகளின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக உங்கள் அபிப்பிராயம் என்ன?
க. கிருபாகரன், திருமலை.

இக் கேள்விக்கு பதில் எழுதும்போது போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. சகல மட்டத்திலும் போராட்ட உணர்வும், போராடக் கற்றுக் கொள்வதும் அவசியம்தான்!

● ○

* ஸ்ரீதேவி-மகேஸ்வரி இருவருக்கும் என்ன உறவு?
வி. ரவீந்திரன், யாழ்ப்பாணம்.

இருவரும் மயக்கும் நடிகைகள்! இருவருக்கும் துணி விஷயத்தில் துணிச்சல் அதிகம்! இருவரும் சகோதரிகள்.

● ○



ஸ்ரீதேவி

* சிந்தியா! ஜயசிக்குறுய் எக்கட்டத்தில் இருக்கிறது?
அ. ஜெயந்தன், மன்னார்.

செய்தித் தணிக்கையை தற்போதைக்கு நீக்க முடியாத கட்டத்தில்!

● ○

* பணமா? குணமா?
இ. இதயதுல்லா, மன்னார்.

ஒரு நீச்சல் குளம். அதில் தவறுதலாக ஒருத்தர் இறங்கிவிட்டார். அவருக்கு நீச்சல் தெரியாது. தண்ணீரில் தத்தளித்தார். இன்னொருத்தர் குதித்து அவரைக் காப்பாற்றினார்.

"என்னைக் காப்பாற்றும் எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டார் அவர்.

"அதோ அறிவிப்புப் பலகை இருக்கிறது பாருங்கள். அதைப் பார்த்ததும்தான் வந்தது!" என்றார் உதவியவர்.

"நீச்சல் தெரியாதவர்கள் தத்தளிக்கும் போது காப்பாற்றினால் ஆயிரம் ரூபாய்!" என்று எழுதியிருந்தது.

காப்பாற்றப்பட்டவர் சொன்னார்: "நானாக இருந்தால் காப்பாற்ற இத்தனை அவசரப்பட்டிருக்கமாட்டேன்!" என்றார்.

"ஏன் அப்படி?" என்று கேட்டார் மற்றவர்.

"நீங்கள் அந்த அறிவிப்புப் பலகையில் எழுதியிருப்பதை சரியாகப் படிக்கவில்லை. படித்திருந்தால் என்னைக் காப்பாற்றியிருக்க மாட்டீர்கள்!" என்றார்.

காப்பாற்றியவர் மறுபடி அந்த அறிவிப்புப் பலகையை நன்றாகப் பார்த்தார். அதில் எழுதியிருந்தது இதுதான்:

"நீந்தத் தெரியாமல் தத்தளிப்பவர்களை காப்பாற்றினால் ஆயிரம் ரூபாய்.

சடலத்தை வெளியே இழுத்துப்போட்டால் இரண்டாயிரம் ரூபாய் அன்பளிப்பு!"

● ○

* மகாத்மா காந்தி இன்று இருந்திருந்தால்?
சொ. கவிதா, மட்டுநகர்.

கோட்சேக்களுக்கு வேலை வைக்காமல் காந்தியவாதிகளே அக் காரியத்தைச் செய்திருப்பார்கள்.

● ○

* சமீபத்தில் எரிச்சலடைய வைத்தது எது?
எம். மர்லின் மரிக்கார், கொழும்பு-08.

400 புதைகுழிகள் செம்மணியில் இருப்பதாக நீதிமன்றத்தில் தகவல் கூறப்பட்டும்கூட அரசு காதில் வாங்காததுபோல இருந்த அலட்சியம்!

● ○



கிளின்ரன்

* கிளின்ரனின் சீன விஜயம் பற்றி கூறும்?
ம. கஜன், வவுனியா.

சோழியன் குடுமி சும்மா ஆடாது. இந்தியாவின் எதிரியை தனது உற்ற நண்பனாக்கிக் கொள்ளப்பார்க்கிறது அமெரிக்கா. "சீனாவில் ஜனநாயகம் செத்துக்கிடக்கிறது!" என்று நீலிக்கண்ணீர் வடித்த கிளின்ரன், இப்போது மட்டும் போனதன் இரகசியம் அதுவே!

● ○

* சிந்தியா! எமது அபிமான விஜய் மீண்டும் நடிப்பாரா?
செல்வி இ. துஷ்யந்தி, காலி.

பார்!

● ○

* மறதி மன்னர்களைத் திருத்த முடியாதா?
சு. டேவிட், வத்தளை.

ஒரு மனைவி திருத்துகிறார் பாருங்கள்:

கணவனும் மனைவியும் மனோதத்துவ டாக்டர் ஒருத்தரிடம் சென்றனர்.

"டாக்டர்! எங்களுக்கு திருமணமாகி முப்பது வருடகாலமாக நாங்கள் ஒரு விஷயத்தில் கூட ஒத்துப்போனதில்லை!" என்றார் கணவர்.

உடனே மனைவி குறுக்கிட்டார்:

"அது முப்பது வருஷமல்ல; முப்பத்திரண்டு வருஷம்!" என்றார்.

● ○

* கால்பந்தில் இத்தாலி தோற்றுவிட்டதே?
எஸ். சுரேன், மொரட்டுவ.

எதிர்பார்க்கப்பட்ட அணிகள் பல இம்முறை கவிழ்ந்துவிட்டன! அதில் இத்தாலியும் அடக்கம்.

● ○

* சிந்தியா! கால் பந்து, கைப்பந்து என்ன முக்கிய வித்தியாசம்?
கு. ஜீவரத்னம், திருமலை.

பயன்படுத்தப்படும் முறை!

● ○

* 'மருதநாயகம்' எப்போது திரைக்கு வருகிறது?
எஸ். கபூர், மருதானை.

படப்பிடிப்பு முடிவடைந்தவுடன்.

● ○

* பாரதிய ஜனதா ஆட்சி நிலைக்கும்போலத் தெரியவில்லையே?
இ. தனிகாசலம், பண்டாரவளை.

தற்போதைக்கு ஆபத்தில்லை! சும்மா புரளிகள் மட்டும் கிளம்பும்!

● ○



ஜாக்கிசான்

* தமிழ்த் திரையுலக 'ஜாக்கிசான்' என்று யாரை அழைக்கலாம்?
ஆ. ரவி, கொழும்பு-06.

ஜாக்கிசானையே அழைக்கலாம்! 'டப்பிங்' செய்தால் ஜாக்கிசானும் தமிழ் பேசுவார் தானே! அவர் படமும் தமிழ்ப் படமாகும்!

● ○

* தமிழ் நாட்டில் படுதோல்வி கண்ட படங்களை ரூபவாஹினி, சுயாதீனத் தொலைக்காட்சி போன்றவை காண்பிப்பது ஏன்? தெரிவு செய்யும் குழுவுக்கு கமிஷன் கிடைக்கிறதோ?
எம். விஜயதாஸ், மட்டக்களப்பு.

இலாபம் இல்லாமல் தூசு தட்டி ஏன் சிரமப்படப் போகிறார்கள் என்று உங்களைப் போலவே நானும் நினைக்கிறேன். இப்படியே போனால் அந்தத் தெரிவுக்குழு பட்டியலை வெளியிட வேண்டியதுதான்.

● ○

* வெற்றிக்கு மூலதனம் என்ன சிந்தியா?
எல். இஸ்மாயில், ஹெந்தளை.

ஹங்கேரிய கால்பந்தாட்ட வீரர் ஒருவர் ஐரோப்பாவில் பெரும்போட்டியில் வெற்றி பெற்று தலைச்சிறந்த கால்பந்தாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

"உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?" என்று நிருபர்கள் கேட்டார்கள்.

கால்பந்தாட்ட வீரர் சொன்னார்: "நேரம் கிடைக்கும்போதெல்லாம் நான் கால்பந்து விளையாடி பயிற்சி பெறுவேன். அப்படி விளையாடாதபோது கால்பந்து பற்றியே பேசுவேன். அப்படி பேச முடியாதபோது கால்பந்து விளையாட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பேன்!" என்றார்.

● ○

* சிந்தியா! தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் குறித்து உமது கருத்து யாதோ?
எம். யூனூஸ், கல்முனை.

அவர் வருந்துவதற்கான அவகாசத்தை வழங்க தமிழக வாக்காளர்கள் தவறிவிட்டனர்.

---

## ஸ்போர்ட்ஸ்

### துடுப்பு 50 ஆயிரம்

சச்சின் டெண்டுல்கரின் கிரிக்கெட் துடுப்பு ரூ.50,000 க்கு விலை போனது. முன்னாள் மற்றும் இந்நாள் கிரிக்கெட் ஆட்டக்காரர்களால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பல அண்மையில் பெங்களூரில் ஏலத்தில் விடப்பட்டன. இதில் சச்சின் டெண்டுல்கரின் துடுப்பு மட்டும் அதிக பணத்துக்கு ஏலம் போனது. ஏனைய உபகரணங்கள் மொத்தம் இரண்டரை இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டன.



இந்த ஏல விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகைப் பணம், 'சுமன்ன ஹல்லி சங்க'த்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனத்தால் பெங்களூரிலுள்ள தொழுநோயாளர் பராமரிப்பு நிலையத்துக்கும் மும்பாயிலுள்ள பார்வையற்றோர் நலனுக்காக உழைக்கும் ஜோதி சேவா சங்கத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### ஒக்டோபரில் போட்டிகள்

பங்களாதேஷில் ஐ.சி.சி. நொக்-அவுட் கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே ஆகிய 9 நாடுகள் கலந்து கொள்ளும் இப்போட்டிக்கான ஆயத்தங்கள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகள் நடைபெறவுள்ள பங்களாதேஷின் தேசிய மைதானத்தின் ஒளி அமைப்புகளுக்காக 20 இலட்சம் டொலர் பணம் செலவிடப்படுகிறது.

இந்தப் போட்டிகளுக்கான அனுசரணை வழங்குவோரை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் சார்பாக திரு. ஹக் என்பவர் தெரிவித்துள்ளார்.

### வீரர்கள் ஓய்வு

ஃபிரான்ஸ் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் பின் பல வீரர்கள் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்கள். இவர்களில் பல கேப்டன்களும் அடங்குவர். ஓய்வு பெறவுள்ள கேப்டன்கள் இவர்கள்:

கிளின்ஸ்மென் (ஜெர்மனி), டுங்கா (பிரேஸில்), வால்டராமா (கொலம்பியா), பிராங்கி வானடர் (பெல்ஜியம்), ஜார்ஜி ஹாகி (ருமேனியா), வான்டெர் எல்ஸ்ட் (பல்கேரியா) ஆகியோர்.

### ஓசைப் பந்துகள்

கண்பார்வையற்றவர்களுக்கான முதலாவது சர்வதேசக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி நவம்பர் மாதம் 17 முதல் 28ம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவிருக்கிறது.

புது டில்லியில் நடைபெறப்போகும் இப் போட்டியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் நியூஸிலாந்து நாடுகளிலிருந்து வரும் அணிகள் மோதவிருக்கின்றன.

இப்போட்டி விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படுவதற்கான பந்துகளை, டேராடூனிலுள்ள ஊனமுற்றோர் நலன்புரி தேசிய நிறுவனம் வடிவமைத்திருக்கிறது.

இப்பந்துகளுக்குள் ஓசை எழுப்பக்கூடிய சாதனங்கள் பொருத்தப்பட்டு, உலகக் கோப்பைப் போட்டி அமைப்பின் அங்கீகாரமும் பெறப்பட்டு விட்டதாம்.

### கபிலுக்கு அழைப்பாணை

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும் சகலதுறை ஆட்டக்காரருமான கபில் தேவிற்கு, நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கபில்தேவிற்கு டெல்லியில் உள்ள மெக்ராலி என்ற இடத்தில் பண்ணை வீடு ஒன்று உள்ளது. அந்த வீட்டின் மதிற்சுவரை 'கிரம் சபா' எனப்படும் சபைக்குச் சொந்தமான நிலத்தில் கட்டியிருப்பதாக கபில் தேவ்மீது பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கபில் தேவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு கடந்த 3 வருடங்களாக 3 முறை அழைப்பாணை அனுப்பப்பட்டது. கபில் தேவ் இதுவரை நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு கடந்தவாரம் 4வது அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதில், வருகின்ற ஒக்டோபர் மாதம் 20ம் திகதி கபில்தேவ் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 17

இராஜகுமாரன்

ஆண்டவரின் பிள்ளைகளாகிய எபிரேய சமூகத்தினரை, ஆண்டவரின் விருப்பப்படி, ஆண்டவரின் நம்பிக்கைக்குப் பாத்திரரான மோசே, ஆண்டவரால் அவர்களுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட கானான் தேசத்துக்கு அழைத்துச் சென்றார்.

எபிரேயர்கள் விடுதலை பெற்றுவிட்ட பெரு மகிழ்ச்சியில் திளைத்தவர்களாக அணி வகுத்துச் சென்றனர். இவர்கள் எகிப்தைவிட்டுச் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த எகிப்தியர்கள், பொறாமையால் புழுங்கினர். இஸ்ரயேலருடன் எகிப்தின் வளமெல்லாம் போய்விட்டதே என்று பாமரமக்கள் முதல் பெரும் அதிகாரிகள், அமைச்சர்கள் வரை மனம் வெதும்பினர்.

## கடல் பிரிந்தது...!

ஆண்டவர் பார்வோனின் மனத்தை மேலும் இறுக்கமடைய வைத்தார். இஸ்ரயேலர்களை நானூற்று முப்பது ஆண்டுகளாக அடிமைப்படுத்தி, பலதரப்பட்ட கொடுமைகளையும் புரிந்த எகிப்திய சமுதாயத்துக்கு, மோசே மூலம் தான் வழங்கிய தண்டனை போதாதென்பதுதான் ஆண்டவரின் சித்தம்போலும்! இதனால்தான் இஸ்ரயேல் மக்களை நேர்வழியால் செல்லவிடாமல், சுற்றி வளைத்து செங்கடல் வரை செல்லும்படி தூண்டியிருக்கிறார். நேர்வழியால் மக்கள் சமுதாயம்-பெரும் படைபோல் செல்லும்போது இடையில் குடியிருப்போர் வேண்டாத விபரீத விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பது ஒரு காரணம்; எகிப்தியர்களுக்கு மற்றுமொரு தண்டனை வழங்க வேண்டும் என்று ஆண்டவர் கருதியதும் மற்றுமொரு காரணமாகும்.

அரசவை அதிகாரிகளும், அமைச்சர்களும் ஒற்றர்களும் பார்வோன் அருகில் அமர்ந்த வண்ணம் பலதரப்பட்ட கதைகளையும் கூறலானார்கள். எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல், அவர்கள் பார்வோனின் மனத்தைக் குழப்பினார்கள். எபிரேய சமுதாயம் எகிப்தின் எல்லையைக் கடப்பதற்கு முன்னர் இடைமறித்து அவர்களனைவரையும் மீண்டும் அழைத்து வரவேண்டும் என்று மன்னன் துடித்தெழுந தான்.

நேர்வழி இருக்க சுற்றுப்பாதையால் இஸ்ரயேலர்கள் செல்வது இஸ்ரயேலர்களின் கெட்டகாலம் என்றும் எகிப்தியர்களுக்கான வாய்ப்பான காலம் என்றும் பார்வோன் கருதினான்.

பெலஸ்தியர் நாட்டினூடாக அவர்கள் பயணம் மேற்கொண்டிருந்தால் இஸ்ரயேலர்களை எகிப்து நாட்டின் எல்லைக்குள் வைத்துப் பிடித்து விடுவது கடினம். இப்போது அவர்கள் செல்லும்பாதையில் பலநாட்கள் பயணம் செய்தால்தான் எல்லையைத் தாண்ட முடியும். ஆகவே சுலபமாக அவர்களை- நாட்டின் எல்லைக்குள் வைத்தே மடக்கிவிடலாம். இந்த எண்ணம் மேலிட்டதும் மன்னன் பார்வோன் வெறி கொண்ட போர்வீரன் போல் கர்ஜித்தான்.

"தளபதி! குதிரைப்படைகளையும், தேர்ப் படைகளையும் உடனே தயார் செய்! உடனடியாகப் புறப்பட்டுச் சென்று எபிரேயர்களைப் பிடித்து மீண்டும் இங்கு கொண்டு வந்தாக வேண்டும்!" என்று முழங்கினான் பார்வோன்.

### திருவிவிலியத்தின் காலக் கணிப்பு

திருவிவிலியம் மனித வரலாற்றினை வரிசைப்படி கணித்துத் தந்துள்ள அரும்பெரும் நூலாகும். இன்றைய வரலாற்று ஆய்வாளர்களுக்கு உன்னத வழிகாட்டியாகத் திருவிவிலியம் விளங்குகிறது.

திருவிவிலியத்தின் கூற்றுப்படி யாக்கோபின் வழிமரபினரான எபிரேயர்கள் கிறிஸ்துவுக்குமுன் 1700ம் ஆண்டளவில் எகிப்துக்கு வந்தனர். கி.மு. 1250ம் ஆண்டு வரை எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்துள்ளனர். ஆண்டவரின் ஆணைப்படி மோசே இஸ்ரயேலர்களை எகிப்திலிருந்து கி.மு.1250ம் ஆண்டுகளில் மீட்டுச் சென்றார்.

இவ்வேளையில், பண்டைக் காலத்தில் எகிப்து நாடு எவ்வாறிருந்தது, அந்நாட்டை ஆண்ட மன்னர்களான பார்வோன் என்ற பெயர் பெற்றவர்கள் எத்தகைய அந்தஸ்தினைப் பெற்றிருந்தனர் என்பதை சுருக்கமாக அறிந்து கொள்வது பொருந்தும்.

## வழி திறந்தது...!

வடக்கு ஆபிரிக்காவில்- கிழக்கு, தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகள் பரந்த பாலைவனத்தால் சூழப்பட்ட நாடு எகிப்து. இதன் வட எல்லையாக விளங்குவது மத்திய தரைக்கடல். மூன்று பக்கங்களும் வெப்பம் மிகுந்த பாலை வனங்களால் சூழப்பட்டிருந்த போதும், இந்நாடு வளம் கொழிக்கும் நாடாக விளங்குகிறது. இதற்கு முழுமுதற் காரணமாக விளங்குவது அந்நாட்டின் உயிர் நாடியாகவுள்ள நைல் நதியாகும். ஏறத்தாழ 1000 கிலோ மீட்டர்வரை இந்நதி எகிப்து நாட்டை ஊடறுத்துச் செல்கிறது.

மத்திய ஆபிரிக்காவில் பெய்யும் மழையால் நைல் நதி ஜீவநதியாக பாலைவனங்களுக்கூடாகச் சென்று மத்தியதரைக் கடலில் சங்கமிக்கிறது. இந்நதி அடிக்கடி பெருக்கெடுத்து இரு கரைகளையும் பெருவெள்ளத்தால் நனைக்கும். நதியுடன் கலந்து வரும் வண்டல் போன்ற வளத்தை வழங்கும் தாதுப் பொருட்களைக் கரைகளில் சேர்த்துவிட்டு நீர்வடிந்து விடும். இதனால் நைல் நதிக்கரையில் பயிர்கள் மிகச் செழிப்பாக வளருகின்றன; கரையோரங்களில் மக்கள் பெருவாரியாகக் குடியேறி வாழவும் காரணமாகின்றது.

எகிப்தின் வரலாறு ஏறத்தாழ 5000 ஆண்டுகளைக் கொண்டது. பண்டு தொட்டு பரம்பரை பரம்பரையாக மன்னர்களால் ஆளப்பட்டு வந்த நாடு எகிப்து. அந்நாட்டு மன்னர்கள் கடவுளின் மனித வடிவம்-அவதாரம், என்று மக்களால் போற்றப்பட்டு வந்தனர்.

கிறிஸ்துவுக்குமுன் 1554 முதல் 1304ம் ஆண்டுவரை எகிப்தை ஆட்சிபுரிந்த மன்னர் பரம்பரையினரே முதன் முதலில் 'பரோஹா (PHARAOH) என்ற பட்டத்தைப் பெற்றனர். இதனையே திருவிவிலியம் 'பார்வோன்' என்று தமிழில் தருகிறது.


'பரோஹா' என்ற எகிப்தியப் பதத்துக்கு 'பெரிய இல்லம்' என்று பொருள். அரசனின் இருப்பிடமான மாளிகை அல்லது அரண்மனை, ஏனைய இல்லங்களைவிட மிகப் பெரிதாக அமைந்திருப்பதனால் இவ்வார்த்தை- இல்லத்தைக் குறித்தது. அதுவே நாளடைவில் மன்னனுக்குரிய பொதுப் பெயராகவும் மாறியது.

### படை திரண்டது

அடிமைத்தளை அகற்றப்பட்டமையினால், ஆனந்த மேலீட்டால் இஸ்ரயேல் சமூகத்தினர் அதிவேகமாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து சென்று மீண்டும் எகிப்துக்குக் கொண்டுவர வெறும் காலாட் படையுடன் சென்றால் காரியம் கைகூடாது. ஆகவே தேர்ப்படையையும் குதிரை வீரர்களையும் கொண்டு செல்லவே பார்வோன் திட்டமிட்டான். எகிப்திலுள்ள சிறப்பான சகல தேர்களையும் உடனே தயாராக்குமாறு பணித்தான். குதிரைப் படைகளையும் அணிவகுக்குமாறு கட்டளையிட்டான். மன்னரின் ஆணை கேட்டு கடல்போல படைகள் திரண்டன.

இஸ்ரயேலர் வேகவேகமாகச் சென்று கடலருகிலுள்ள பிகசிரோத் என்ற இடத்தில் ஒய்வெடுத்தனர். இதே இடத்திலேயே அவர்கள் ஒய்வெடுக்க வேண்டும் என்று ஆண்டவர் மோசே மூலம் கூறியிருந்தார். அப்போதுதான் எகிப்திய நாட்டதிபன் பார்வோனையும் அவனுடன் வரும் படைகளையும் தண்டித்து வெற்றியீட்ட முடியும் என்றும் ஆண்டவர் தெரிவித்திருந்தார்.

எகிப்தியப் படைகள் வெகுதொலைவில்- பாலைவனத்தினூடாக வந்து கொண்டிருப்பதை இஸ்ரயேலர்கள் பலர் கண்டுகொண்டனர். "ஒரு புறம் பெரும் அலைகளை வீசி பேரிரைச்சலுடன் குமுறும் கடல்; மறுபுறம் பாலைவனத்தில் மணற் புயலைக் கிளப்பியவாறு வந்து கொண்டிருக்கும் எகிப்தியப்படைகள்; இடை நடுவே அகப்பட்டு விட்டோமே!" என்று பெரும்பாலானோர் அழுது புரண்டனர். "எகிப்தில் வேலை கடுமையாக இருந்தபோதும், உயிருக்குப் பயமின்றி வாழ்ந்தவர்களை இவ்வாறு பயங்கரமான சூழ்நிலையில் மோசே கொண்டுவந்து விட்டாரே!" என்று மக்கள் பலத்த சப்தத்துடன் புலம்பலானார்கள்.



இஸ்ரயேலர்களை எகிப்தில் வைத்து வேலை வாங்குவதற்கு- மேற்பார்வையாளர்களாக- சில இஸ்ரயேலர்களை எகிப்திய அதிகாரிகளே நியமித்திருந்தனர். அவர்கள் பல சலுகைகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் மோசேயின் விடுதலைப் பயணத்துக்கு மாறாகவே செயற்பட்ட வண்ணமிருந்தனர். வேலைகளிலீடுபட்டிருந்த இஸ்ரயேலர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் மேற்பார்வையாளர்- தனியாக எகிப்தில் வாழ முடியாது. இதனாலேயே அவர்களும் அரை மனத்துடன் பயணத்தைத் தொடங்கினர்.

### எதிர்ப்பாளரின் கூக்குரல்

பயணத்தின்போது ஆங்காங்கே ஏற்படும் இடையூறுகளைப் பெரிதுபடுத்தி இந்த மேற்பார்வையாளர்கள் மக்களைக் குழப்பும் பணியிலீடுபட்டிருந்தனர். இப்பொழுது கடலுக்கும் படைகளுக்குமிடையில் அகப்பட்டதும் இவர்களின் கூக்குரல் ஓங்கி ஒலித்தது. மோசேமீது வசைபாட ஆரம்பித்தனர். "துன்பப்பட்டாவது, ஏதாவது கிடைப்பதை உண்டு அமைதியாக இருந்த எங்களை இப்படிப் பாலை நிலத்துக்கோ கடலுக்கோ இரையாக்கப் போகிறார்களே!" என்று கூக்குரலிட்டனர்.

ஆண்டவர் மோசேயிடம், "மோசே! செங்கடலை நோக்கி உன் கோலை உயர்த்து! கடல் இரண்டாகப் பிரியும்; நடுவே உலர்ந்த தரை தென்படும். அதன்மீது வேகமாகச் செல்லுங்கள். கடைசி எபிரேயன் கடலைத் தாண்டும் வரை தரை உலர்ந்தே இருக்கும். எமது மக்களாகிய எபிரேய சமூகத்துக்கு தொடர்ந்து கொடுமைகளை இழைத்து வந்த எகிப்தியப் படைகளை அழித்தொழிக்கவே இந்தப் பாதையில் செல்லுமாறு உங்களை அழைத்து வந்தேன். எங்கே உன் கோலை கடலின்மீது நீட்டிப் பிடிப்பாயாக!" என்று கூறினார்.

ஆண்டவர் இவ்வாறு கூறும்போது மோசே ஆடாமல்- அசையாமல் ஒரு புறம் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார். மோசே- தங்கள் சங்கடமான நிலையைத் தெரிந்தும் தெரியாதவர்போல்- தங்களை அழித்தொழிக்கவே இவ்வாறு தம்மை அழைத்து வந்துள்ளார். என்று பலர் கருதினர். மென்மேலும் அவர்களின் அவலக் குரலும் திட்டுதலும் அதிகரித்தன. விசுவாசிகள் அவர்களை எவ்வளவோ சொல்லி அடக்க முயன்றனர்.

இதற்கிடையில் செங்கடலை நோக்கித் திரும்பிய மோசே, தனது வலக்கரத்திலிருந்த கோலை மேலே உயர்த்தினார். ஏற்கனவே இரைச்சலுடன் குமுறிக்கொண்டிருந்த கடலில் மிகப் பெரும் பேரிரைச்சல் கிளம்பியது. அதுவரை திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தவர்கள் வாய் மூடி மௌனியாகி விறைத்து நின்றனர்.

கடல் இரு புறமும் பிரிந்து ஒதுங்கியது; நடுவே நன்றாக உலர்ந்த தரை வழி தென்பட்டது. முன்னணியில் நின்றவர்களை மோசே சைகை மூலம் முன்னேறுமாறு பணித்தார். ஆண்டவரைப் பிரார்த்தித்த வண்ணம், நன்றி கூறிக்கொண்டு மக்கள் ஆவேசமாகப் புறப்பட்டனர்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை 15 விடை:** தண்ணீர் இரத்தமாதல், தவளைகள், கொசுக்கள், பேன்கள், கால்நடைகள் மடிதல், கொப்புளங்கள், கல்மழை, வெட்டுக்கிளிகள், காரிருள், தலைப்பேறுகள் மடிதல்,

**பரிசு பெறுவோர்:**

1. எம். சுகுமார், ராகலை மேற்பிரிவு, ஹல்கரனோயா.
2. செல்வி ரி. சசியானி, 116/15 கௌடானா வீதி, தெஹிவலை.
3. டொ. கோபிகா ஷாலினி, சென் அன்ரனிஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
4. வி. ஷர்மிளா, இல. 117/18, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
5. எம். விமல் தாஸ், மகஊவா எஃப்.டி, வலப்பனை.

**திருமறை 17 வினா:-** எகிப்து நாட்டின் வளத்துக்குக் காரணமானது எது?

ஜூலை 18க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 17—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**


---

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : தமிழ்க்கட்சிகள். |
| வயது | : போராடும் துடிப்பான வயதல்ல. |
| தொழில் | : அரசியல். |
| உபதொழில் | : அரசுடன் சரசம். |
| பொழுதுபோக்கு | : பத்திரிகை அறிக்கைகள். |
| நம்புவது | : அன்றாடப் பிரச்சனைகளை. |
| நம்பாதது | : அரசியல் போராட்டங்களை. |
| எதிரிகள் | : விமர்சனங்கள். |
| நண்பர்கள் | : துதியாளர்கள். |
| மறக்க நினைப்பது | : அந்த நாள் சூளுரைகள். |
| துறந்தது | : சொந்த நலன் தவிர அனைத்தையும். |
| துறக்காதிருப்பது | : பெயர்களில் தமிழ், தமிழீழம், ஈழம். |
| எண்ணு வது | : வாக்கு வீதங்களை. |
| எண்ணாதிருப்பது | : கொடுத்த வாக்குறுதிகளை. |
| கண்ணாயிருப்பது | : நாற்காலிகளில். |
| கருத்தாயிருப்பது | : நாற்காலி ஆசைக்கு நியாயம் கூறுவதில். |
| வருத்தப்படுவது | : அரசின் அலட்சியத்துக்காக. |
| விரும்பப்படுவது | : வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல். |
| இலட்சியம் | : பெறக்கூடிய சகல ரகமான பதவிகளும்! |

## கந்தசாமியும் முத்துத் தம்பியும்



கந்தசாமி: பார்த்தீரே பத்திரிகைச் செய்தியை. மாகாணசபைத் தேர்தல் நடத்துவதானால் அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பை வாபஸ் பெறுவினமாம்.

முத்துத்தம்பி: உயிர்மேல் ஆசை இருந்தால் எலக்ஷன் நடத்தச் சொல்லி எங்களை கரைச்சல் படுத்த வேண்டாம் என்று சொல்லாமல் சொல்லி இருக்கினம்.

க.சா: யாழ்ப்பாணத்தில் மட்டும் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் நினைத்ததை நடத்தியே முடிப்போம் என்று நடத்திக்காட்டினவைதானே.

மு.த: யாழ்ப்பாணத்தில் என்ன ஆளும் கட்சியோ போட்டியிட்டது.

க.சா: ஆளும் கட்சி போட்டியிடவில்லை. ஆனால் போட்டியிட்ட கட்சிகள் ஆளும் கட்சியின் அருள் பெற்ற கட்சிகள்தானே.

மு.த: மிஸ்டர் கந்தசாமி. பக்தர்களுக்குள் கலகம் நடப்பதை அம்பாள் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருப்பது வழக்கம்தானே. அப்படித்தான் இதுவும்.

க.சா: பார்த்தீரோ, யாழ்ப்பாணத்தில் வேட்பாளர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு கொடுக்க பலம் காணாது என்று தெரிந்தும் 'போனால் போகட்டும் போடா' என்ற நினைப்பில் தானே எலக்ஷன் நடத்தினவை.

மு.த: ஆனால் தெற்கில் எல்லா வேட்பாளருக்கும் பாதுகாப்பு கொடுக்கவே தேவையில்லை. அப்படி இருந்தும் பாதுகாப்பு போதாது என்று சொல்லுகினம்.

க.சா: இதன் பெயர் இன அபிமானமோ? மனிதாபிமானமோ?

மு.த: சுய அபிமானம்.

க.ச: ஒவ்வொரு மாகாணமாக தேர்தல் நடத்தலாமோ? என்றும் டிஸ்கஷன் போட்டவையாம்.

மு.த: அப்ப, இதுவும் ஜயசிக்குறுய் மாதிரித் தானாக்கும். படிப்படியாக முன்னேறி முழுதையும் பிடிக்க பிளான் பண்ணுகினமாக்கும்.


க.ச: பிளான் பண்ணுகினமோ. பிளேன் பண்ணுகினமோ, எதிரணி ஏவுகணையுடன் தயாராக இருக்குதாம்.

மு.த: அந்த ஏவுகணைக்கெல்லாம் பயமில்லை, எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்றல்லோ கூறுகினம்.

க.சா: ஏவுகணையால் அடிவாங்கினாலும் தள்ளிப்போய் எட்டத்தில் விழுந்து கிடந்துகொண்டு, நாங்களாகத்தான் தடுக்கி விழுந்தது என்று சொல்வது தானே தற்காலப் பாணி.

மு.த: நீர் ஒரு பேய்க்காய் ஐசே பேய்க்காய்!

### பேச்சாளர் பேரம் பலம்



போராடுகின்றவர்களை நாம் மறக்கவில்லை, நினைத்துக் கொண்டே இருக்கிறோம் என்று அருமைத் தம்பி சுபபாலன் கூறியது நூற்றுக்கு நூற்றி பத்துவீதம் உண்மையிலும் உண்மையாகும். அப்படி மறக்காத காரணத்தால்தான் சிறப்பு பாதுகாப்பை நாடியிருக்கிறார் என்பதைக்கூட எண்ணிப்பாராமல் கேலி செய்வது சில விஷமிகளின் கட்டுக்கதை என்பதை இந்த முதிரை மர மேசையில் அடித்து திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)



ARUL JEWELLERS
அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு
436331


# மப்பேரியம்



← அமெரிக்கா-மசாசுசெட்ஸ் மாநிலத்தின் தலைநகரான பொஸ்டனில் கிறிஸ்தியன் அறிவியல் வளாகக் கட்டடத்தில் இப்பிரமாண்டமான பூகோளம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனை ஆங்கிலத்தில் மப்பேரியம் என்று அழைப்பர்.

பூமியில் காணப்படும் அத்தனை அம்சங்களையும் எள்ளளவும் கணக்குப்பரிமாணம் பிசகாமல் அமைக்கப்பட்டிருக்கும் இப்பூகோளத்தை-அதனுள்ளிருந்த வண்ணமே பார்த்து வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரணமாகப் பூகோள அமைப்பு உருண்டை வடிவமாக-ஒரு பந்துபோல் காட்சி அளிக்கும். ஆனால் பொஸ்டனிலுள்ள இந்த உருண்டை வடிவ பூகோளத்தினை-உள்ளே புகுந்தே ஆராய முடியும். புவியியல்-பூமிசாஸ்திர மாணவர்களுக்கு இது பெரிதும் உதவுகிறது.

இந்த அமைப்பின் விட்டம் 9 மீட்டர்.

தேசப்படங்களை முன்னர் தட்டையான நிலையிலேயே வரைவார்கள். பூகோள வடிவில் முதன் முதலில் அமைத்தவர் ஜெர்மனி நியூரெம் பேர்க்கைச் சேர்ந்த மாட்டின் பிஹெம். அவர் 1492ம் ஆண்டிலேயே இதனை அமைந்தார். 1824ம் ஆண்டில் ஃபிரான்ஸ் நாட்டில் 1824ம் ஆண்டு லாங்லொயில் பூகோளம் ஒன்று அமைக்கப்பட்டது. இதுவே மிகப்பெரிய பூகோளமாகும். இதன் விட்டம் 39 மீட்டர்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# அதுபோல



↑ படத்தில் காணப்படுவது சீமைப்பெருச்சாளி என்றழைக்கப்படும் பிராணி.

சீமைப் பெருச்சாளிகள் நாய், பூனைகளைப் போல் மனிதர்களுடன் நெருங்கி உறவாடக்கூடியவை. இவற்றை வளர்ப்பதும் சுலபம். தானிய வகைகள், பருப்பு, கடலை, புல் பூண்டுகள்தான் இவற்றின் உணவு.

காடுகளில் பகல் நேரங்களில் மரப்பொந்துகளிலும் பாறைகளிலும் வசிக்கும்.

குட்டிகள் 85 கிராம் எடை இருக்கும். பூரண வளர்ச்சியின் பின் 0.5 கிலோகிராம் எடை இருக்கும்.

35 சென்டிமீட்டர் நீளம் வரை வளரும். காடுகளில் 5 முதல் 10ப் பிராணிகள் ஒன்றாகச் சேர்ந்து வாழும்.

# அழகன்



↑ பண்டைக் கால கிரேக்க இலக்கியங்களில் இடம்பெற்ற பறவை பெலிக்கன். இவை தன் குஞ்சுகளுக்கு தன் இரத்தத்தையே ஊட்டி வளர்க்குமாம் என்று நம்பப்பட்டு வந்தது. ஆனால் இதற்கான அறிவியல் ரீதியான சான்றுகள் கிடையாது.

படத்தில் காணப்படுவது அவுஸ்திரேலியாவில் காணப்படும் வகையைச் சேர்ந்ததாகும். உலகம் முழுவதும் ஏழுவகையான பெலிக்கன் பறவைகள் உள்ளன. இவற்றில் அவுஸ்திரேலியப் பெலிக்கன்தான் அளவில் மிகப்பெரியவை. இவை 1.8 மீட்டர் நீளம் வரை வளரும். இரு இறக்கைகளையும் விரித்தால் அவை ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை இரண்டரை மீட்டர்வரை இருக்கும்.

இத்தனைபெரிய அமைப்புடையதாக இருந்தபோதும் மிக வேகமாகப் பறக்கும் ஆற்றலுள்ளது. அதேபோல் நீரிலும் மிக வேகமாக நீந்தவும் சுழியோடவும் இதனால் முடியும்.

ஒரே தடவையில் 1000 பெலிக்கன்கள் வரை வானத்தில் பறந்து செல்லும்.

# ஏறுகார்



← உலகிலேயே மிக அதிகமான மோட்டர் வாகனங்களை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஜெர்மன் முன்னிலையிலிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக துறைமுகத்தில் கப்பலேறக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான கார்களைப் படம் காட்டுகிறது. காரும் கப்பலேறும்.

# மரபணு



↓ உயிரினங்களில் பரம்பரைத் தொடர்பு அல்லது தலைமுறைத் தொடர்பு அம்சங்கள் பொதிந்திருப்பதாக 1885ம் ஆண்டில் கிரெகர் ஜொகான் மெண்டல் என்னும் அறிவியலாளர் கண்டறிந்தார்.

அதாவது பரம்பரைப் பண்புகள் தாத்தா, பாட்டி ஆகியோரிடமிருந்து தகப்பன், தாய் வழியாக மகன், மகளுக்கு இறங்கி வரும். இந்த மரபியல் அம்சங்கள் அல்லது செய்திகள் அவரவர் பரம்பரைச் செல்களுக்குள் சங்கேத மொழியில் பதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்தப் பரம்பரைத் தொடர்பு அம்சங்கள் அடங்கிய இரசாயனப் பொருட்களை ஜொகான்சன் என்னும் அறிவியலாளர் ஜீன்கள் என்று குறிப்பிட்டார். அதுவே தமிழில் மரபணுக்கள் என்று கூறப்படுகிறது. இதுதான் பரம்பரையியலைத் தீர்மானிக்கும் பிரதான கூறாகும்.

மரபணுவில் 'டிஎன்ஏ' எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதை எடுத்துக்காட்ட 1953ம் ஆண்டு உயிரியல் நிபுணர்களான ஃபிரான்ஸின் கிரிக் என்பவரும் ஜேம்ஸ் வாட்சனும் இணைந்து தயாரித்த மாதிரித் தோற்றம் இதுவாகும்.

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



சாருஷன் 04.07.1998

மீசாலை வடக்கு புத்தூர் சந்தியைச் சேர்ந்த பிரேமதாசன்-கோகிலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் **பி.சாருஷன்** தனது 2வது பிறந்தநாளை 04.07.1998 அன்று SWITZERLAND (BERN) இல் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, (மீசாலை கண்ணன் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தினர்) மற்றும் அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், அண்ணா, அக்காமார் மற்றும் சுவிஸ் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் மீசாலை திருநீலகண்ட தட்டாங்குளம் பிள்ளையார் அருளும் நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய் செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*தகவல்-அப்பா*

# சாம்பல் கிண்ணம்

↓ இங்கிலாந்தில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 'சாம்பல் கோப்பை' (ASHES CUP) போட்டியும் உண்டு. இது இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளுக்காக வழங்கப்படும் கோப்பை ஆகும். இதைப்பற்றிச் சில சுவையான கதைகள் உண்டு.

கிரிக்கெட் விளையாட்டில் மூன்று ஸ்டம்புகளுக்கு மேல் இரண்டு பெய்ல் (Bail)கள் வைப்பார்கள். அதை எரித்து, கோப்பைக்குள் அடைத்து 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்து கேப்டனுக்குக் கொடுத்தார்கள். அதன் நினைவாக வந்தது இது என்கிறார்கள். உண்மை அதுவல்ல என்கிறது வேறொரு கதை.

1882ம் ஆண்டு இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவிடம் தோற்றது. அப்போது இங்கிலாந்து அணிக்குக் கேப்டனாக இருந்தவர் வோ ப்ளைக். இதனால் அவரது எதிர்கால மனைவி தனது முக்காட்டை-(வெய்ல்-Vail) எரித்த சாம்பல்தான் இது என்கிறார் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்.




← மூன்றாவதாக ஒரு கதையும் இருக்கிறது. அது கொஞ்சம் சுவாரசியமானது.

1882ல் இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவிடம் தோற்றதைப் பற்றி பத்திரிகைகள் பலவிதமாக எழுதின. 'த ஸ்போர்ட்டிங் லைஃப்' என்ற பத்திரிகை '29.08.1882ல் ஓவல் மைதானத்தில் இறந்துபோன ஆங்கில கிரிக்கெட்டின் நீங்காத நினைவுக்காக ஆழ்ந்த வருத்தத்தோடு துயரமுறும் நண்பர்களும் உறவினர்களும் இரங்கல் தெரிவிக்கின்றனர்,' என்று எழுதியிருந்தது. மேலும் 'சிதை எரிக்கப்பட்டு சாம்பல் அவுஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது' எனவும் குறிப்பிட்டது.

அடுத்த முறை இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இங்கிலாந்து அணியின் கேப்டன் ப்ளைக் அவுஸ்திரேலியாவில் பேசும்போது, 'ஆங்கில கிரிக்கெட்டின் சாம்பலை மீட்டுச் செல்ல வந்திருப்பதாக' தெரிவித்தார். அதில் வெற்றியும் பெற்றார்.

அவருடைய எதிர்கால மனைவி உட்பட சில பெண்கள் குழு ஒன்று, அவுஸ்திரேலியா தோற்ற போட்டியில் பயன்படுத்திய முக்காடுகளை (வெய்ல்) எரித்து, அதை ஒரு ஜாடியில் மூடி இங்கிலாந்து கேப்டன் ப்ளைக்கிற்குப் பரிசாகக் கொடுத்தனர்.

அவர்கள் விளையாட்டாகக் கொடுத்த ஜாடியை ப்ளைக் பாதுகாப்பாக வைத்திருந்து, அவர் இறக்கும்போது மெல்போர்ன் கிரிக்கெட் கிளப்பிற்கு எழுதிவைத்தார்.

அது இங்கிலாந்திலுள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே நடைபெறும் டெஸ்ட் போட்டிகளுக்காக வழங்கப்படும் 'சாம்பல் கோப்பை' ஆனது என்கிறது அக்கதை.

# நீல மசூதி



↗ உள்நாட்டுப் போரினால் உருக்குலைந்துபோய் அவதியுறும் நாடு ஆப்கானிஸ்தான்.

ஏறத்தாழ 20 வெவ்வேறு இன மக்களைக் கொண்ட இந்நாட்டவர்கள் 99 சதவிகிதத்தினர் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களே. நீல வானத்தைப் பின்னணியாகக் கொண்ட நீல வர்ண இஸ்லாமிய பள்ளிவாசல் மிகச் சிறந்த கலை அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. மஸார்-இ ஷரிஃப் என்ற அமைதியான இடத்தில் இப்பள்ளி வாசல் அமைந்திருக்கிறது.